பதிவு எண் 2041

தனிப்பிரதி விலை { உள்நாடு 1 அணு
வெளிநாடு 1½ அணு

குடி அரசு

வருட சந்தா முன் பணம் ...	ரூ	3—0
6 மாத சந்தா ,, ...	ரூ	1-12
வெளிநாட்டிற்கு ,, ...	ரூ	4—0

வாரப்பதிப்பு.

ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு	அ.	12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு	ரூ.	2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்		

மாலை 3 | ஈரோடு, பிரபவ ஸ்ரீ தை மீ 23உ (5—2—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 41.

இனாம்! இனாம்

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனாம்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் சித்திரவேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

10-வருஷ உத்தரவாதம்.



விலை ரூ. 20 முதல் ரூ. 100 வரை

மிக்க உயர்தரமானது. நீடித்து உழைக்கக் கூடிய ஸ்வர சுத்தம், சாரவை, கமக்கம், இனிமையுள்ள நாதம் பொருந்திய ஆர்மோனியங்களும், மற்றுமுள்ள சங்கீதக கருவிகளும் உத்திரவாதத்துடன் குறைந்த விலைக்கு நம்மிடம் கிடைக்கும். முழு விவரங்களடங்கிய கேட்லாக் வேண்டுமானால் அனுப்பப்படும்.

பழனி கம்பெனி, கல்கத்தா ஆர்மோனியம் ஏஜென்சி 411, தங்கசாலை வீதி, சென்னை.

கையில் கட்டும் ரோல்டு கோல்டு ஸ்பிரிங் செயினும், பௌண்டன் பேனாவும் இனாம்.



நூதனமாக வரவழைத்த எங்களின் 22 காரட் ரோல்டு கோல்டு கை கெடியாரம், 5 வருஷம் உத்திரவாதம் புதுமாதிரி பார்வைக்கு அழகாயிருக்கும், சரியான காலத்தைக் காட்டும்.

விலை ரூ. 6—8—0. தபால் கூலி வேறு.

லண்டன் வாட்ச் அவுஸ்.
3, பார்க் டவுன், (தா) சென்னை.

டேபில் டைம்பீஸ் இனாம் !!!

எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின் பேரில் வைக்கக்கூடியதொரு அழகான டேபில் டைம்பீஸ் இனாமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். மூன்றுங்கள் விலை ரூ. 7-8-0 தபால் கூலி பிரத்தியேகம்.



வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு கேட்பவர்கள் இதற்கு 8-8-0 முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட். ஜி. டி மதராஸ்.

என். தண்டபாணி Co.

நம்பிக்கையான வர்த்தக ஸ்தலம்.

இங்கே கதர் துணிகள், சகலவித புத்தகங்கள், மருந்துகள், ஷாப் சாமான்கள் முதலியன எல்லாம் நயமாயும் நல்லதாயும் கிடைக்கும்.

தேவைக்கு எழுதுங்கள்

(திருப்தி இல்லாத சாமான்கள் திரும்ப வாபீஸ் பெற்றுக் கொள்ளப்படும்).

குறிப்பு:—புத்தகங்களைத் தவிர்த்த மற்ற சாமான்களுக்கு ரூ. 100-க்கு 25 வீதம் முன்பணம் அனுப்புதல் வேண்டும்.

விலாசம்:— என். தண்டபாணி பிள்ளை,
தபாற் பெட்டி 292, சைனாபஜார், நெ. 292,
மதராஸ்

ஆங்கிலத்திலும் தமிழிலும் மாதம் இருமுறை வெளிவரும் ஓர்சிறந்த

ஆதிதிராவிட காவலன்

என்னும் பத்திரிகையை ஆதரியுங்கள்.

உள்நாடு வருட சந்தா ரூ. 2. } தனிப்பிரதி
வெளிநாடு ,, ரூ. } ஒரு அணா.

முன்பணம் அனுப்பி பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளலாம். மற்ற விபரத்திற்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

ஆர். வீரையன்
பத்திராதிபர்,
ஆதிதிராவிட காவலன்'
கோயமுத்தூர்.

நூதன ஜெர்மன் எலக்டிரிக் விளக்கு.

இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாகக்கூடி விடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும். குறைந்த விலை 4—8—0. தபால் செலவு 0—8—0.



தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி. மதராஸ்.

இனாம்! இனாம்!!

சாரவிவேகி சதாநந்தன் சம்பாஷணை 'கிழவன் குமாரனுன்' இவ்விரண்டு கதைகள் அடங்கிய புத்தகம் தங்கள் விலாசம் தெரிவித்தால் இனாமாக அனுப்புவோம்.

ஸ்ரீ சாது இரத்தினசற்குரு புத்தகசாலை,
பார்க் டவுன் போஸ்டு, சென்னை.

கணித சோதிடம்

பரகித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று மிகவும் சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலையாவது கடிதம் எழுதும்நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுகம் செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

இரும்! இரும்!! இரும்!!!
எங்கள் லேஹியமானது ஸ்ரீ கோக்கோக மஹாமுனிவரால் அருளிச் செய்யப் பட்டதல்லவென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனாம்.
ஸ்ரீ கோக்கோக மஹா முனிவர் அருளிச்செய்த அசல்

சிந்தாமணி லேஹியம்.

(அபகாந்த செந்தூரம்)

இந்த லேகியத்தில் 196 விதக் கடைச் சாக்குகளும், வித்துகளும், பூலுணி மிஸ்ரிகளும், பொன் அம்பர், பாதம் பருப்பு, பிஸ்தா, அக்ரோட், சல்கூஜா பருப்புகளும், அவைகளுடன் மலை மூலிகைகளைக் கொண்டுவந்து இயந்திரத்தின் வாயிலாய்க் கொடுத்து அதன் மூலமாய் வரும் சஞ்சீவியின் சத்தை ஏராளமாகச் சேர்த்து பசு நெய், பசும் பால், மலைத் தேன் முதலியனவும் உரவாக்கி, கை பாகம், செய்பாகம் தவறாமல் செய்தள்ளோம். ஆகார விஷயத்தில் யாதும் நிர்ப்பந்தமில்லை. எல்லா காலத்திலும் எல்லா ஊரிலும் எந்த சீதோஷ்ண நிலைமையிலும் மேற்படி லேகிய செந்தூரத்தை சாப்பிடலாம். சாப்பிடுவதற்கும் வாய்க்கு அல்வாவைக் காட்டிலும் அதிக ருசியுள்ளதாயிருக்கும் என்பதையும் அறிவித்துக் கொள்ளுகிறோம். இதற்கு பத்தியம் இல்லை.

இந்த லேகிய செந்தூரத்தை சாப்பிடுவதனுல் உண்டாகும் குணங்கள்.

1. நித்திரையிலும் பெண்களோடு பேசிக்கொண்டிருக்கும்போதும் நினைத்தபோதும் உண்டாகும் துரிதஸ்கலிதம் என்னும் கொடிய வியாதியை தலையெடுக்கவொட்டாமல் அடித்துவிடும்.
2. தளர்ந்து துவண்டு மெதுவுபட்ட இராஜ கருவிகளாகிய நரம்புகளை முறுக்கேற்றி கெட்டிப்படுத்தி கைகால் இடுப்பு முதலியவைகளுக்கு அதிக பலத்தைக் கொடுத்து இல்லறத்தில் அபரிமிதமான பிரியத்தைத் தரும்.
3. கிழத் தன்மையைப் போக்கி இளமையைத் திருப்பித்தரும்.
4. சரீரமானது பத்தரைமாற்றுப் பசும் பொன்னைப்போல் பளபளப்பைத் தரும்.
5. ஞாபக சக்தியை அதிகப்படுத்தி இன்பரசத்தை ஊட்டும்.
6. இன்னும் மேக சம்பந்தமான குன்மங்கள், சூலை, அண்டவாதம், குடல்வாதம், ஆண், பெண் குறிகளிலுண்டாகும் மேகங்கள், பாரிசவாய்வு, ஓடுவாதம், அஜீர்ணம் முதலியவைகளையும் காற்றாய்ப் பறந்து உடம்புக்கு சுகத்தைக் கொடுக்கும்.

நண்பர்களே! இந்த லேகியமானது 50 வருட காலமாய் இந்தியா, பர்மா, சிலோன் ஐக்கிய மலாய் நாடுகள், ஜாவா, மோரீஸ், நேட்டால் முதலிய பல தேசங்களில் விசாரதென பிரசித்தி பெற்றது. நூற்றுக் கணக்கான சுதேச வைத்தியர்கள், ராஜாக்கள், ஜமீன்தார்கள், லாயர்கள், தேசாபிமானிகள், ஸ்கூல் உபாத்தியாயர்கள், வர்த்தகர்கள், தலைமை கங்காணிமார்கள் முதலிய கனதனவான்கள் நமது லேகியத்தை புசித்து ஆயிரக்கணக்கான நற் சாட்சிப் பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

ஒரு மண்டலம் 48 நாள் சாப்பிடக் கூடிய லேகிய செந்தூரம் டப்பி ஒன்றுக்கு ரூபாய் 5. வீ. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் முன்பணம் அனுப்பும்போது தபாற் செலவையும் சேர்த்து அனுப்ப வேண்டுமென்று சிரம்பவும் தாழ்மையாய் கேட்டுக் கொள்ளுகிறோம். எமது விலாசம்: ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
பிரும்ம சமாஜ கட்டடம், ஜி. டி. மதராஸ்.

தேக ஆரோக்கியத்தைக் கவனியுங்கள்.

குளிர் காலத்தில் தேக ஆரோக்கியத்தைக் காப்பாற்றுவது மிகவும் இன்றியமையாதது. குளிர்கால உபயோகத்திற்கென்றே நானுவிதமான கம்பளிப் போர்வைத் தினுசுகள் ஏராளமாய் ஸ்டாக் செய்திருக்கிறோம். குளிர் காலம் ஆரம்பித்து விட்டதால் ஆர்டர்கள் குவிகின்றன. நீங்களும் உங்கள் ஆர்டரை அனுப்பிவிடுங்கள்.

நெ. 1.	ஜெர்மன கம்பிக்கரைப் போர்வை	1	ரூ. 9—8—0
நெ. 2.	பாரிஸ் பூக்கரைப் போர்வை	1	ரூ. 10—8—0
நெ. 3.	ஷை உயர்ந்தது பெரிய சயிஸ்	1	ரூ. 16—0—0
நெ. 4.	காஷ்மீர் கை செசவுப் போர்வை	1	ரூ. 12—0—0
நெ. 5.	ஜெர்மன் மேகவர்ணப் போர்வை	1	ரூ. 15—0—0

கே. எஸ். முத்தையா அன் கம்பெனி, மதராஸ்
K. S. MUTHIAH & Co, Export Dept., Post Box 99. MADRAS.

ஆநந்த குண போதினி

இரண்டாம் வருடம்.

இது போன்ற நவீன மாதாந்தர சஞ்சிகை இதுவரை வெளிவரவில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கிலமாத சஞ்சிகைகளையொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகிறது. எல்லாம் கருத்து, எல்லாம் களிப்பு, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய, செவிக்கினிய அலங்கார வசன மழை. ஒவ்வொரு மாதமும் 56 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிகை இது ஒன்றேதான். 5000-சந்தாதார்களுள்ளது. வருட சந்தா ரூ.1, வெளி நாடு ரூ. 1—4—0 மாதிரி இனாம். இது பெரிய ஆஸ்தி. உடனே எழுதுங்கள்.

'ஆநந்த குண போதினி' ஆபீஸ்
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

சிரிப்பு! சிரித்து சிரித்து வயிறு சிரிப்பு!!
புண்ணாய் விட்டதென்று ஒருவர் எழுதுகிறார்.

மூத்தமாமா.

இரண்டாம்பதிப்பு.

நேயர்களே! இந்தக் கதையைப் படித்து விட்டால் நீங்கள் சாப்பிடும் போதும் சிரிப்பீர்கள், தூங்கும்போதும்கூட சிரிப்பீர்கள். வேண்டுவோர் 4½ அணு ஸ்டாம்பு அனுப்பவும். எந்த தேசத்து ஸ்டாம்பாயிருந்தாலும் அனுப்பலாம்.

வாஸன் புஸ்தகசாலை,
97, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்

முன் விலை ரூ. 14 இப்பொழுது ரூ 7.
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்
கைக்கடியாரங்கள்

மேற்கண்டபடி எந்தவேஷப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொருகடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச்சேர்த்து அனுப்பப்படும். 5 வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.
CANADIAN WATCH PEOPLE
George Town. Madras

Photo Hand Camera

லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. எவரும் எளிதில் போட்டோ பிடிக்கலாம். போட்டோவின் அளவு 3½"x 2½" ஆகும், இந்த மெஷினை வைத்துக்கொண்டு மாதம் ரூ. 30 முதல் 200 வரை சம்பாதிக்கலாம். எல்லா சாமான்களுடனும் விவரங்களுடனும் குறைந்த விலை ரூ. 4—12—0.

Sole Agents ஸ்ரீதனம் அண்டு கம்பெனி,
பிரும்ம சமாஜம், ஜி. டி. மதராஸ்

நம் பணிவிடையை கடவுள் ஏற்றுக்கொண்டாரா? ஆயின் பலன் காணா இருவன்றோ சமயம்.

(கைவல்யசாமியார் எழுதுவது)

பொருளாகக்கொண்ட பொருள் எவைக்கும் முதற் பொருள் கடவுள்; எல்லாச்சக்ரவர்த்திகளுக்கும் பெரியவர் கடவுள் பஞ்சபூதத்திற்கும் பெரியவர் கடவுள்; பஞ்சபூதத்திற்கும் அதன் சக்திக்கும் அது ஒன்றிலிருந்து மற்றொன்றாக விரிதலுக்கும் குவிதலுக்குமுள்ள சக்தியும் அதற்கு மேற்பட்ட சக்தியிருந்தால் அதற்கும் இந்த உலகத்தைப் போன்ற அநேக அண்டலங்களுக்கும் இத்தனைக்குமுள்ள உள் சக்திக்கும் கர்த்தா கடவுள். கர்த்தா என்னும் பேரே கடவுளுக்குத் தனிப் பெயராகவுமிருக்கிறது. இந்த நம் கடவுள் தானாகவும், மனிதன் மிருகம் பட்சி முதலிய அவதாரங்களாகவும் பல கோவில்களில் சுயம்புவாக எழுந்தருளியும், தேசத் துன்பம் நாட்டுத் துன்பம் ஊர்த் துன்பம் கிராமத் துன்பம் வீதித் துன்பம் குடும்பத் துன்பம் குலகோத்திரத் துன்பம் தனி நபர் துன்பம் மாட்டுக்கும் ஆனைக்கும் பன்றிக் குட்டிக்கும் நாரைக்கும் கருங்குருவிக்கும் மரத்திற்கும் கல்லிற்கும் துளசிச் செடிக்கும் இத்தனைக்கும் துன்பங்களை தீர்த்து அவரவர்களுக்கு வேண்டியதைக் கொடுத்தார் கடவுள் என்பதாக இதிகாச புராணங்களில் படிக்கிறோம். கடவுள் வந்து ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு கோவில்களிலும அநேக மகத்துவங்களையுந்தன் திருவிளையாடல்களையும்செய்து வந்தாரென்று அநேக புராணங்களிலும் ஊர்க்கதைகளிலும் கேட்கிறோம். இப்பொழுதும் வருஷாவருஷம் புரட்டாசி மாதத்தில் திருப்பதியில் பாப்பாரப் பிள்ளையாக வந்து விளையாடிப்போவதாகவும், பழனியில் தை கார்த்திகை மாதங்களில் மீன், கோழி, பாம்பு இவைகளை அறுத்து சமைத்து காவடி கட்டி வந்தாலும் உயிர் பெற்று அதாவது ஊர் போய்ச்சேர்ந்து விடுகிறதாகவும் கேட்கிறோம். இன்னும் அநேக கோவில்களில் அவர் லீலை புரிவதைக் கேட்டு நாமும் போய் காணிக்கை கப்பம் கொடுத்தும் வருகிறோம. இதுவுமல்லாமல் கடவுளுடைய பெண் ஜாதி, வைப்பாட்டி, அவரால் சிருஷ்டித்த பெண். இவர்களிடம் பிறந்த பிள்ளைகள், மூக்கில், கண்ணில், வியர்வையில், நினைவில் உண்டான பிள்ளைகள், தேவர்கள், பரிவாரங்களான பூதம், முனி, குண்டோதரன் முதல் கெருடன்வரையிலுமுள்ள ஏவலாள்கள், அவரைக் கண்ட ஞானிகள், யோகிகள் சித்தர்கள், அவரால் ஆசீர்வதிக்கப்பட்ட ஆழ்வார்கள், நாயன்மார்கள், அவர் பேரை எடுத்து நமக்குக் காட்டின ஆசாரிகள், குருக்கள், இத்தியாதிபேர்கள் செய்த அற்புதங்களையும் கதைகளையும் நம்புகிறோம்; பின்பற்றுகிறோம். அந்த கடவுளும் அவருடைய பரிவாரங்களும் இத்தனையும் நம் தேசத்திலேயே செய்ததாக கதை புராணங்களும் அதற்குத் தகுந்தவாறு அனுமானிக்க ஏற்பாடுகளுமிருக்கிறதே ஒழிய வேறு எந்த தேசத்திலும் அவருடைய லீலையுமில்லை. இத்தனை புராணக்கதைகளுமில்லை, நம் வயிற்றுக்குச் சோறும், இடுப்பிற்குத் துணியும், முகத்திற்கு மரியாதையும், கைக்கு வலிவும் காலுக்கு சுவாதீனமும், மனதிற்கு இரக்கமும், இல்லாவிட்டாலும் முன் சொன்ன அவர் திருவிளையாட்டையேபெருமையாகநம் தேசம்கொள்ளுகின்றது.

இத்தனையும் நம்பி நாம் அந்த கடவுளின் தயவைப்பெற தேகம், பொருள், மனசு இத்தனையாலும் அதற்குத் தொண்டு செய்து வருகிறோம்; மந்திரம். பொன் வெள்ளி ரத்தினங்கள் காணிக்கையாகவும் ஆபரணமாகவும் போடுகிறோம்; கோவில் கட்டுகிறோம்; கும்பாபிஷேகம் செய்கிறோம்; குரு பூஜையும் செய்கிறோம். குருக்களை வணங்குகிறோம்; குல குருவின் பாதம் கழுவுகிறோம். குழந்தை மயிரைக்கொடுத்து குல தெய்வமென்று தனித்தனி பூஜையும் போடுகிறோம். ஆசாரம் அனுஷ்டானம் விரதம் இத்தனையுமிருக்கிறோம். பூசை நைவேத்தியம் அர்ச்சனை அபிஷேகம் இத்தனைக்கும் நெய், பால், தேன் இனியும் அநேகம் கொடுக்கிறோம். பங்காளிக்குப் பாதகம் செய்தும், பாடுபடுகிறவர்கட்கு வேலையும் கூலியும் கொடுக்காமல், படுக்கையில் கிடக்கையில் பாதுகாக்கும் பணியாளருக்குப் பத்து பணம் கூடக்கொடுக்காமல், படிக்கப்பணம் கேட்கவரும் பத்துப் பிள்ளைகளை பக்கத்தில் கூட வரவிடாமல் பறித்து வந்தவர்களைப் பறக்க அடித்தும், கடவுளுக்கு பூமி, தோட்டம், தோப்பு, நந்தவனம், கிணறு, குளம், பால்மடம் இத்தனையும் செய்து விட்டுச் சாகிறோம். நாள் நட்சத்திரம் வருடம் மாதம் வாரம் இத்தனைக்கும் கட்டளை ஏற்படுத்தியிருக்கிறோம். இனியும் சொல்லப்போனால் நமது ஆயுளெல்லாம் கடவுளுக்கே உழைக்கிறோம். இத்தனை உழைப்பும் விசேஷமும் மரியாதை வணக்கமும் நம் நாட்டாரைப் போன்று கடவுளுக்குச் செய்கிறவர்கள் வேறு எந்த நாட்டிலுமில்லை.

இந்தப் பெரிய மனிதருக்கு இத்தனையும் எதற்காகச் செய்கிறோம். நமக்கு வேண்டியதைச் செய்வார், சமயத்திற்கு உபயோகப்படுவார் என்பதே தவிர வேறு இல்லை. மோக்ஷத்தை மட்டுந்தான் கடவுள் கொடுப்பார், மற்றதற்கு அவர் அதிகாரியல்ல என்று சொல்லுவதற்குமில்லை. ஏனெனில் இகலோக சுகங்களைப் பெற்றுக்கொள்வதற்காகவே இத்தனை கர்மங்கள் விதித்ததாகவும், அந்தச் செய்தவர் அநேகர்களுக்கு எல்லா போகங்களும் கொடுத்திருப்பதாகவும், தாசி வீட்டுக்குப் போகக்கூட பொன் கொடுத்ததாகவும் கதைகளும் புராணங்களும் குருக்களும் ஆசாரிகளும் சொல்லுகிறார்கள். அதை நம்பியே நாமும் இத்தனையும் எந்த கஷ்டமிருந்தாலும் செய்துவருகிறோம். இத்தனை போகத்தையும பெற்றுக்கொள்ளும்கடவுள் இங்கு ஒரு சிறுசௌகரியமும் செய்யாமல் சொர்க்கத்தில் போக போக்கியம் கொடுப்பார் என்பதும், இத்தனை செய்தும் நம் அடிமைத் தனத்தை நீக்க கடவுளுக்குச் சம்மதமில்லை என்பதும், நாம் செய்ததை ஏற்றுக் கொண்டாரா? இல்லையா, என்பதும் ஏற்றுக் கொண்டால் ஏன் கவனிக்கவில்லை. ஏற்றுக்கொள்ளவில்லையானால் இனி அவர் திருப்திக்குச் செய்யவேண்டுவதென்ன என்பதும், பக்தனானவன் அவரை எப்படித் திருப்தி செய்து நன்மை யடைகிறான்என்பதும், குடிஅரசு உங்களுக்கு எடுத்துச் சொல்லும். பக்திமான்கள் முதற்கொண்டு மனிதனைத்தான் நீக்கி கடவுளைக் கட்டிக் கொண்டிருக்கிறவர்கள் வரையிலும் படித்து புத்தியில் ஆராய்ச்சி செய்து விட்டு கோபித்துக் கொள்ளட்டும்.

கடவுளைக் கட்டிப்பிடித்து, அந்தப் பெரிய மனிதன் வேலையையும் கெடுத்து, சடைத் தேறுமல் அதிக பாத்யதை கொண்டாடும் தேசமும் பக்த கோடிகளும் இந்தியாவைத் தவிர வேறு இல்லை. இவர்களுக்கும் கடவுளுக்கும் மத்தியிலுள்ள தரகர்களும ஆலோசிக்க வேண்டிய ஒரு நெருக்கடியான சந்தர்ப்பம் நமது தேசத்திற்கும் இங்கிலாண்டிற்கும் ஏற்பட்டு இங்கிலாண்டின் சார்பாக ஏழு பிரதிநிதிகள் நம் நாட்டிற்கு வருகின்றனர். அவர்களை பகிஷ்கரித்தால் நன்மையுண்டாகுமென்று சிலரும தீமையுண்டாகு மென்று சிலரும் நமக்குள்ளாகவே சண்டையிடுகிறார்கள். இரண்டு கட்சிக் காரர்களும் அவர்களிடமிருந்து நன்மையுண்டாக அவர்கள் மனதின் தன்மையை மாற்ற விரும்புகிறார்கள். பிரிட்டிஷாருடைய உள் குணத்தில் நம் ஸ்வதந்திரங்கள் புதைந்து கிடக்கின்றன என்பது உண்மை. அது நம் கடவுளுக்கும் தெரியும். நம் கடவுள் அவர்கள் உள் மனதிற்குள் போய் சொன்னாலும் சரியே, சொற்பனத்தில் எழுபேரிடமும் போய்ச் சொன்னாலும் சரியே, சீட்டெழுதி கொடுக்கும் பழக்கம் நம் கடவுளுக்குமுண்டு அது போல சீட்டெழுதினாலும் சரியே, ஒரு பெண்ணிற்காக மானங் கெட்ட நம் தெய்வம் தேசத்தின் மானத்தை காப்பாற்றப்படாதா? பிட்டு வாணிச்சிக்காக மண் வெட்டி மண் வெட்டி வைகையை அடைத்து அவனை ராஜ தெண்டனையிலிருந்து காப்பாற்றின நம் தெய்வம் நம்மை எல்லாம் ராஜ நிர்ப்பந்தத்திலிருந்து நீக்கப்படாதா? வருடம் ஒருதரம் திருப்பதியில் பாப்பாரப் பையனாக வந்து அடுத்த வருடமும் தவறாமல்வர எச்சரிக்கை செய்யும் தெய்வத்திற்கு கவர்னர் அரண்மனை தூரமா! நம் கோயிலைவிட அரண்மனை அசுத்தமாகவாயிருக்கிறது? பஞ்சமகாபாதகமெல்லாம் வழக்கால் தீர்த்த நம் தெய்வம் அவர்களுக்கும் நமக்குமுள்ள நீதியின் வழக்கத்தைத்தீர்க்கப்படாதா? இந்த பெரிய மனிதன் தயவிற்கு இத்தனைநாளும் எதற்காகக் காத்திருந்தோம். மனிதனை மனிதன் அடிமைகொள்ளவும், ஏமாற்றவும், ஒருவன் தேடினதை மற்றவன் அபகரிக்கவும், கடவுள் பேரால் ஒரு கூட்டத்தார் பிழைக்கவும் இம்மட்டோடுதானா கடவுள் அதிகாரம். இந்த அதிகாரத்தை நிலைநிறுத்தும் கடவுளும் அதைச் சேர்ந்த புராணக் கதைகளுமான இந்துமதம் ஒழியவேண்டுமென்கிறது 'குடி அரசு'. இதைக்கேட்டுத்தான் புரோகிதர்கள் நம் பிழைப்பு போய்விட்டதென்று நாளும் பக்திமான்களும் வருத்தப் படுகிறார்களே! இவர்கள் வருத்தத்தையாவது கவனிக்கப்படாதா 'கடவுளை நம்பினவன் கைவிடப் படமாட்டான்' என்கிறவார்த்தையையாவதுகவனிப்பாரா? நம்பிக்கைக்கு இத்தனை காலமும் போதாதா! காலாவதிக்காலம் இனி எப்பொழுது முடியும்? இத்தனையும் பெற்றுப் பெண்ஜாதி பிள்ளை குட்டி பரிவாரங்களுடன் சுகமனுபவித்துக் கொண்டிருக்கும் கடவுளுக்கு நன்றியுண்டா? இவருக்கு தேர் திருநாளென்ன? சதிர் சங்கீதமென்ன? வாணம் மத்தாப்பின் வரிசை என்ன? கொடி குடை வாகனம் சிம்மாசனம் இத்தனைக்கும் புஷ்பத்தாலே சிங்காரிக்கும் அழகென்ன? தேவதாசிகளென்ன? அவர்கள் மூக்கு வைரங்களுக்கும் மடாதிபதிகள் கைவிரல் மோதிர வைரங்களுக்கும் சமத்துவமான பிரகாசமென்ன? இவைகளை எல்லாம் கண்ட பக்தகோடிகளின் ஏகோவிஷய பக்தியென்ன? இத்தனை வைபவத்தோடு கோவில் புகுந்த இவருக்கு திம்புதலையணை தொடையில்லை புஷ்ப சயன அலங்காரத்தோடு கூடின பள்ளியறை என்ன? அம்மன், பிரியா அம்மன், வெற்றிலை பாக்கு, படிக்கம்,பட்சணம்,பழம், பால், பக்தகூட்டச் சேவை என்ன? இத்தனையும் நம்மால் அனுபவித்து வரும் கடவுளுக்கு விஸ்வாசமில்லாமல் போவதற்கு காரணமென்ன? எந்த சிறு குற்றத்திற்கும் வீடு தவறாமல் வந்து காணிக்கை கப்பம் வாங்கிப் போகிறவராயிற்றே கடவுள். நாம் கொடுக்கும் காணிக்கைக் கப்பம் அவர் கணக்கிற்போய் சேரவில்லையா? இந்த காரியத்திற்குத் தனியாக காணிக்கை வேண்டுமா? அக்குற்றங்களையும் அதன் காரணங்களையும் பத்து வயதிற்கு மேல் படிக்காத ஒரு பத்திராதிபரை 'குடி அரசின்' மூலியமாக தெரியப்படுத்த அந்த கடவுள் திருவுளங் கொண்டிருக்கிறார்.

இதன் தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க

பெரிய இடத்துக் கல்யாணம்.

கோயமுத்தூர் ஜில்லா பிரபல மிராசுதாரரும் பழம் கீர்த்தியாளருமான காலம் சென்ற திருவாளர் ராவ்பகதூர் A. T. திருவேங்கடசாமி முதலியாரவர்களின் முதல் குமாராகிய ஜில்லா போர்ட் மெம்பர் திரு A. T. லக்ஷிமணசாமி முதலியார் அவர்கள் குமாரத்திக்கும் சிகந்திராபாத் பிரபல பிரபுவான கனம் அனுமந்த ராவ் முதலியார் அவர்கள் குமாரருக்குமாக சென்னையில் கீழ்பாக்கம் "விக்டோரியா பார்க்" பங்களாவில் ஜனவரி 27உ வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு வெகு விமரிசையாக திருமணம் நடந்தேறியது. அத்திருமணத்திற்கு அனேக பெரியார்கள் விஜயம் செய்து மணமக்களை வாழ்த்தினார்கள்- அவர்களில் முக்கிய மானவர்களில் ஸ்ரீமான்கள் பனகால் ராஜா, சர் ஆர். வெங்கிட்டரத்தினம் நாயுடுகாரு, திவான்பகதூர் பி. கேசவ பிள்ளை C. I. E. M. L. A, ராவ்பகதூர் டாக்டர் A- லக்ஷிமணசாமி முதலியார், ராவ்பகதூர் C. S. இரத்தினசபாபதி முதலியார் M. L. A., கோயமுத்தூர் சேர்மென், ஜில்லாபோர்டு பிரசிடேண்டு ராவ்பகதூர் T. A. ராமலிங்க செட்டியார், ஜமீன்தார் ஊத்துக்குளி, ஜமீன்தார் சிவசமுத்திரம், V. C. வெள்ளியங்கிரி கவுண்டர், S. V. ராமசாமி முதலியார், A. ராமசாமி முதலியார் A. M. சதாசிவ முதலியார், கோவை M. திருநாவுக்கரசுமுதலியர், பண்டிட் நமசிவாய முதலியார், டாக்டர் S. குருசாமி முதலியார் கடலூர் ராஜாபகதூர் முதலியார், ஈரோடு E. V. ராமசாமி நாயக்கர், முதலிய வர்கள் வந்திருந்தார்கள்.

மாலையில் தேக்கச்சேரியும சங்கீதக் கச்சேரியும் நடைபெற்றதுடன் பந்தல்கள் முதலியன வெகுஅழகாய் அலங்கரிக்கப்பட்டிருந்தன. ஒரு நிரூபர்.

திருமணம்.

ஹிஜ்ரி 1346-ஹூ ஷாபான்-மீ 17-தேதி வெள்ளிக்கிழமை (10—2—28) காலை 9-30 மணிக்கு மதுரை தேசபக்தர் ஜனப் ஹாஜி முகம்மது மௌலானா சாயபு அவர்களது புத்திரன் சிரஞ்சீவி முகம்மது நசீருதீன் சாயப்புக்கும் கரூர் போலீஸ் டிப்டி சூபரின்டென்டெண்ட் லேட் சையது அப்துற்ரகீம் சாயபுவின் ஜேஷ்ட புதல்விக்கும் கரூரில் பெண் கிருஹத்தில் திருமணம் சிறப்பாக நடை பெறுமென்று அறிகிறோம்.

ராயல் கமிஷனை ஆதரியுங்கள் வேலை நிறுத்தம் செய்யாதீர்கள்.

1928-ஹூ பிப்பரவரி-மீ 3-உ பம்பாய் வந்திறங்கும் சைமன் கமிஷனை ஆதரித்து லாகூர் ஆல் இந்தியா முஸ்லீம் லீக் தீர்மானத்தையும், 29—1—28-ல் மதராசில் கடற்கரையில் கூடிய மாகாண முஸ்லீம் லீக் தீர்மானத்தையும் ஆதரியுங்கள். ஹர்த்தல் வேண்டாம். சைமன் கமிஷன்முன் நமக்குள்ள குறைகளை எடுத்துரையுங்கள். கடையடைப்பு வேண்டாம் பகிஷ்காரம் வேண்டாம் என்று சேலம் அஞ்சுமனே தாஜுல் இஸ்லாம் பிரசிடெண்டு மா. கா. காதர் பாஷா ராவுத்தர் எழுதுகிறார்.

ஏஜண்டுகள் தேவை.

தக்க கமிஷன் கொடுக்கப்படும்.
கேட்லாக் இனும்,

ஸ்ரீ கிருஷ்ணாநந்த கௌதம பரிமளசாலை.

ஆண்மை தரும் அமிர்த ரச தாது புஷ்டி லேகியம். அங்க நோயகற்றும் அநுமாஞ்சனம், வாய் நாற்றமகற்றும் வாசனைப் புகையிலை. நற்சுகமளிக்கும் நறுமண சந்தனாதித் தைலம், நலம்மிகுந்த நறுமண அரைக்கீறை விதைத் தைலம், நாளுக்கு நாள் குணமளிக்கும் நறுமண கூந்தல் தைலம், பாங்குடனமைந்த வாசனைப் பாக்குத்தூள், கண்டோர் வியக்கும் கஸ்தூரி பற்பொடி. சாதுக்கள் இன்புறும் ஊதுபத்தி தினுசுகள், பூஜைக்குகந்த வாசனை தசாங்கம். தேஜஸ் கொடுக்கும் ஸ்நானப் பவுடர். யந்தகாசம் பொருந்திய நறுமண சந்தண பில்லை. சித்தரை மகிழ்விக்கும் பல அத்தர் தினுசுகள்.

அடியிற்கண்ட விலாசத்தில் கிடைக்கும்.

ஸ்ரீ கிருஷ்ணாநந்த கௌதம பரிமள சாலை
வலங்கை மான் போஸ்டு
தஞ்சை ஜீல்லா

கும்பகோணம் இந்திய பிராசீன வைத்திய சமாஜ தரும சித்த வைத்தியசாலை.

1927 ம் வருடத்தின் சென்ற அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஷை வைத்தியசாலையில் 4593 ஆண் மக்களும், 4251 பெண் மக்களும் 1697 குழந்தைகளும் சிகிச்சை பெற்றுள்ளார்கள்,

சென்ற 1927 ம் வருடம் முழுதும் சிகிச்சை பெற்ற நோயாளர்கள் 41883. சென்ற வருடச் சிலவு ரூ 1945—1—11 பைசா வாகும். ஒரு பிணியாளருக்கு ஒரு வேளை மருந்து $4\frac{1}{2}$ பைசா வாகிறது.

இவ்வைத்தியசாலை சென்னை காங்கிரஸ் நகரிலும் வைக்கப்பட்டு ஆயிரக்கணக்கான அன்பர்களுக்கு வைத்திய உதவி யளித்துள்ளது.

இதன் அபிவிருத்தியைக்கோரி பொருள், கட்டிடம், மருந்துகள் முதலியவைகள் உதவிய ஜில்லா தாலூகா போர்டாரவர்களுக்கும், பிரபுக்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுவதோடு, இவ்வைத்தியசாலை இனியும் மென்மேலும் பெருகுவதற்கு ஏற்ற உதவி யளிக்குமாறு வேண்டுகிறோம் என ஷைசமாஜ காரியதரிசி வைத்தியபூபதி பண்டிட் கே. வி. பொன்னம்பலம் எழுதுகிறார்.

மதுரை எலெக்ட்ரிக் கம்பெனி Ltd

ஷேர் 1-க்கு ரூ. 10.

தயவு செய்து ஷை கம்பெனியில் பங்குகள் எடுத்துக்கொள்ளுங்கள். மிகவும் லாபகரமானது. பிராஸ்பக்டஸ்களுக்கும் விண்ணப்ப பாரங்களுக்கும் எழுதுங்கள்.

9-ம் பதிப்பு! வெளி வந்து விட்டது 9-ம் பதிப்பு!!

ஆங்கில ஆசான் (ஒன்பதாம் பதிப்பு)

தமிழ் நாட்டில் சுமார் 2,50,000 இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ஜனங்களுக்குச் சுலபமாய் இங்கிலீஷ கற்றுக்கொடுத்ததும், இதைப்போன்ற அநேக புஸ்தகங்கள் பின்னால பணம் பறிக்கும்பொருட்டு அநேகரால் தயார் செய்யப்பட்டாலும் முதன் முதல் வெளிவந்ததும், சிகாற்றதும், நற்கியாதியும் ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றதும் சென்னை சட்டசபை வித்யா இலாகா மந்திரி அவர்களால் நன்கு மதிக்கப்பட்டு அவரிடமிருந்து உயர்ந்த நற்சாக்ஷிப் பத்திரம் வாங்கப்பட்டதுமான எமது ரிஜிஸ்டர்டு லேடி டிரேட்மார்க் போட்டுள்ள,

ஆங்கில ஆசான் என்ற பெயர் பார்த்தும், இப்படத்தில் காட்டியுள்ள லேடி டிரேட்மார்க் இருக்கிறதா வென்று கவனித்தும் புத்தகம் வாங்குங்கள்,

800 பக்கம் முழு காலிகோ பயின்டு விலை ரூ. 2—0—0
வி. பி. தபால் செலவு அணா 0—8—0

தி. இராஜகோபால் முதலியார், 302 தங்கசாலைத் தெரு, மதராஸ்

புதுவருஷ பஞ்சாங்கம்.

(1) தார்வார் "கர்நாடக விருத்த" பத்திரிகாலயத்தார்.
(2) கோவில்பட்டி, புஸ்தக வியாபாரம் சிவஞான நிலயத்தார்.
(3) ஈரோடு, கிருஷ்ணா பைண்டிங் அச்சாப்பீஸ் கம்பெனியார்.
(4) மூக்கூடல், பீடி தொழிற்சாலை டி. எஸ். கம்பெனியார் ஆகியவர்கள் அனுப்பிய தத்தம் கம்பெனியின் 1928-ம் வருஷத்திய அழகிய காலண்டர்கள் வந்தனத்துடன் வரப் பெற்றோம்.

அன்பும் திருவள்ளுவரும்.

கட்டுரை 9

சிதம்பரனார் எழுதியது.

மக்கள் என்று சொல்லப்படுபவர்கட்கு அமைய வேண்டிய முதன்மையான குணம் அன்பேயாகும் அன்பற்ற மக்கள் மக்களல்லர். ஏனெனில் மக்களின் வாழ்க்கை ஒருவர்க்கொருவர் உதவி செய்து வாழவேண்டிய நிலையிலமைந்துள்ளது ஒருவர்க்கொருவர் உதவி யுடையவராயிருப்பதற்குக் கார காரணம் அன்பாகும். அன்பில்லாதவர்கள் மற்றவர்களின் கூட்டுறவைப் பெற முடியாது. அன்புடையவர்கள் தமது அன்புக்குரியவர்களுக்குத் துன்பம் உண்டானதைக் கண்டால் மிகவும் வருந்தி அவர்கள் துன்பத்தை நீக்க முற்படுவார்கள். அதற்கு அறிகுறியாக மற்றவர்களின் துன்பத்தைக் காணும்போது அன்புடையவர்களின் கண்களில் நீர் ததும்புவது அன்பின் குணமாகும். இதனை 1 "அன்பிற்கும் பிறர் அறியாமல் அடைத்து வைக்குந் தாழ் உண்டோ? அஃது தம்மால் அன்பு செய்யப்பட்டவர்களின் துன்பத்தைக் கண்ட போது தமது கண்ணீரினால் வெளிப்படுத்தும்" என்ற குறளால் அறியலாம்.

இவ்வுலகில் பொதுநலங்கருதி யுழைக்க முற்படுகிறவர்களுக்கெல்லாம் அன்பு இன்றியமையாததாகும் இது கருதியே நமது பெரியார் தாயுமானவரும் "அன்பர் பணி செய்ய வென்னை ஆளாக்கி விட்டால், இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே" என்று கூறி உலக மக்களுக்கு தொண்டு புரியும் அன்பு நெறியை விரும்புகின்றார். இராமலிங்க சுவாமிகளும்" அப்பா நான் பற்பல நால் வேண்டுவதொன்றுண்டு, ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்" என்று கடவுளை வேண்டுகின்றார். ஆகவே பொதுநலம்புரிவதற்கு அன்புதான் வேண்டும். அன்பில்லாதவர்கட்கு ஒரு நாளும் பொது நலம் செய்வதற்கு மனம் உண்டாகாது. அவர்கள் சுயநலங் கருதக்கூடியவர்களாகவே யிருப்பார்கள். இதனை 2 " அன்பிலார் எல்லா நலங்களையும் தாமேயடையும் சுயநலங்கருதியவராவர்" என்ற குறளால் அறியலாம்.

பிறர்பால் அன்புடன் நடந்து அவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டே கடவுள் நம்மைப் படைத்தார் என்பது அறிஞர் கொள்கை. இவ்வெண்ணம் ஒவ்வொருவர் மனத்திலுமிருத்தல் வேண்டும் இவ்வெண்ணத்தைக் கொண்டிருப்பவர்கள் எப்பொழுதும் உதவி செய்யுங்குணத்தை யுடையவராயிருப்பார் மனிதனுக்குரிய இயற்கைக் குணம் அன்போடு கூடிய செய்கையாகும் என்பதே தமிழர் மதம். ஆரியர்களைப்போல் மற்றவர்களையெல்லாம் துன்புறுத்தித் தனது நலத்தை மேன்மைப்படுத்துங்குணம் தமிழர்களுக்கில்லை. இதனை இப்பொழுதுங் காணலாம். யாரேனும் ஒருவன் துன்புற்று வீழ்ந்து கிடக்குங்காலத்தில் அவனைக்காப்பாற்ற முற்படுவோன் தமிழனாக இருப்பான், ஆரியப்பார்ப்பனனாயிருந்தால் அவனைத் தொடுவதற்கும் அஞ்சி விலகிச் செல்வான் மனிதன் இயற்கை அன்பு என்பதனை "உலகில் வாழும் உயிர்களுக்கு உடலோடு பொருந்திய நட்பு' அன்போடு கூடிய செய்கைகளேயாகும்" என்ற குறளால் அறியலாம்.

முதன் முதலில் தன் நட்பினர்கள் பாலும் உறவினர்மாட்டும் அன்பு செலுத்துங்குணம் வரவர வளர்ந்து எல்லோரிடத்தும் அன்புண்டாகும். ஜாதிமத பேதமின்றி எல்லா மக்களையும் உயர்வு தாழ்வின்றி ஒன்றாகக் கருதி தொண்டு செய்யும் அன்பே பேரன்பாகும் அதற்கே ஆர்வமென்று பெயர் ஆர்வமுடையவர்களே எல்லாருடைய நட்புரிமையையும் அடையத்தகுதியுடையவராவர் எல்லோருடையநட்புரிமை யென்பது நல்லவர்கள்எல்லோருடையநட்புரிமையமாகும்எப்பொழுதும் எந்தப்பெரியார்க்கும் சுயநல வாதிகளின் பகை யிருந்து கொண்டு தான் இருக்கும் அதை ஒரு பொருளாக எண்ணுதல் கூடாது உலகில் மக்கள் அனைவரும் நலமுடையவராக வேண்டும்; எல்லா மக்களும், உயர்வுடையவராக வாழ வேண்டும் என்று முயல்கின்றவர்களுக்கு, மற்றவர்களைக் கீழ்ப்படுத்தி தாமே உயர்வாக வாழவேண்டுமென்னும் சுயநலக் கூட்டத்தார் தீங்கு செய்வது திண்ணம் ஆதலால் எப்பொழுதும் தீயாரின் நட்புரிமையைப் பெறுதல் இயலாத காரியம் இதனை எல்லா மக்களும் ஒரு தன்மையாக சுயமரியாதையுடன் வாழவேண்டும் என்கின்றவர்களுக்கு நமது நாட்டுச் சுயநலக் கூட்டத்தாராகிய பார்ப்பனர்கள் இழைக்கும் இன்னலால் அறியலாம் அன்புடையவர்களுக்கு நல்லோர் எல்லாருடைய நட்புரிமையும் உண்டாகுமென்பதை (4) "அன்பே யாவரிடத்தும் அன்பு செய்கின்ற பேரன்பைத்தரும் அப்பேரன்பு நல்லோர் யாவரும் நட்பினர் என்று கூறும்படியான சிறப்பைத்தரும்" என்ற குறளால் அறியலாம்.

இவ்வுலக வாழ்க்கை சிறப்பாக நடை பெற வேண்டுமானால் எல்லாரும் இன்ப மடைய வேண்டும் இன்ப வாழ்க்கையை நடத்துகின்றவர்களே சிறந்த வாழ்க்கையுடையவராவார், துன்ப வாழ்க்கையை நடத்துகின்றவர்களோ சிறப்பற்ற வாழ்க்கையுடையவராவர் கடவுள் சிலரைத் துன்ப வாழ்க்கையுடையவராகவும், சிலரை இன்ப வாழ்க்கை யுடையவராகவும் படைத்தாரா வென்றால் ஒரு நாளுமில்லை எல்லா மக்களையும் சமத்துவமாகத்தான் படைத்திருக்கின்றார் ஆனால் இவ்வுலகில் படித்தவர்களென்று சொல்லிக் கொண்டிருக்கின்ற சுயநல வாதிகள் தங்கள் நலத்தையும் உயர்வையும் எண்ணி மற்றவர்களைத் தாழ்த்தித் துன்ப வாழ்க்கையிலிருக்குமாறு செய்துவிட்டார் மீண்டும் எல்லோரையும் இன்ப வாழ்க்கையாகிய சிறந்த வாழக்கையை நடத்துமாறு செய்யவேண்டுமாயின் அறிஞர்கள் அனைவரும் அன்போடு கூடிய வழக்கங்களை மேற்கொண்டு அனைவரையும் உயர்வுறச் செய்வதற்கு முயல வேண்டும் இதனை (5) "இவ்வுலகில் இன்ப வாழக்கையிலிருக்கின்றவர்கள் அடையும் சிறப்பெல்லாம் அன்போடு விரும்புகின்ற செய்கைகளினாலேயே உண்டாகும்" என்று திருவள்ளுவர் கூறுவதனாலறியலாம்.

அறத்திற்கு மட்டிலுந்தான் அன்புதுணையாகும் என்று சிலர் கூறுவார்கள் அவர்கள் அன்பின் தன்மையை முற்று மறியாதவர்களாவார்கள் கொடிய தன்மைக்கும் அன்பு துணையாகக்கூடும் அஃதெவ்வாறெனில் கொடியதன்மையுடையவர்கள் பாலும் அன்பு செலுத்தி வருவோமாயின் அவர்கள்தன்மைநீங்கிநல்லதன்மையுடையராவர் (6) அறத்திற்கேஅன்புதுணையென்றுசொல்லுவார்கள் அன்பின் தன்மையை முற்றுமறியாதவர்கள் கொடுந்தன்மையை நீக்குவதற்கும் அதுவே துணையாகும் "என்று திருவள்ளுவர் கூறுவதனாலறியலாம் இக்குறள் தமிழர் இயற்கையையறிந்து கூறியதாகும் தமிழர்களிடம் கெட்ட குணம் காணப்படுமாயின், அவர்களை நல் வழிப்படுத்துதல் கூடும் ஆரியப் பார்ப்பனக் கூட்டத்தாரிடம் நெடுங்காலமாக அமைந்து கிடக்கும் தீய குணத்தை அகற்றுவதென்றால் அது மிகவும் கடினமான செய்கை தான் ஆகவே அன்பினால்அகற்றமுடியாதவற்றை வன்பினால் அகற்ற முற்பட வேண்டுவதே முறை.

அன்பற்ற ஒருவனை யாரும் விரும்ப மாட்டார்கள். முதலில அவன் தன் அன்புக்குரிய மனைவி மக்கள் பெற்றோர் முதலிய உரிமையுடையவர்களாலேயே வெறுக்கப்படுவா னென்றால் வேறு யாரால் தான் வெறுக்கப்படமாட்டான் மற்றவர் உதவியையும் பெற முடியாதவனாய் எல்லோராலும் புறக்கணிக்கப்பட்டு துன்புறுவான் எவ்வாறு எலும்பற்ற புழுப்போன்ற உயிர்களை வெயில் மிகவும் வருத்துமோ அதைப் போல அன்பற்றவர்களை அறமே துன்புறுத்துமாம் அன்பற்ற அம்மக்களை, மனிதன் என்று கூறக்கூடாது ஒரு உயிர் என்ற அளவில் தான் கொள்ள வேண்டும் இதனை (7) "எலும்பில்லாத உயிரை வெய்யில் சுடுவதைப் போல அன்பில்லாத உயிர்களை அறம் துன்புறுத்தும் என்று திருவள்ளுவர் கூறுகின்றார்,

வலிய பாலை நிலத்தில் சிறிதும் பயன்படாத பாலற்ற மரம் தளிர்த்து நிற்குமாயின் அதனால் யாருக்கு என்ன பயன் பாலை நிலத்திலொருயிரும் வாழ்வதற்குதகுதியில்லாமையால் அம்மரம் மற்றவுயிர்களுக்கு நிழலைத்தரக்கூடிய உதவியைக்கூடச் செய்ய முடியாது அதைப் போல அன்பில்லாத உயிர் ஒன்றிருக்குமாயின் அதனாலும் யாருக்கும் பயனில்லை அவ்வுயிரும் தனித்து நின்று துன்புற்று வாழ வேண்டியது தான் (8) "மனத்தில் அன்பில்லாத உயிர் இவ்வுலகில் வாழ்தல் வலிய பாலை நிலத்தில் பாலற்ற மரம் தளிர்த்திருப்பதையொக்கும் என்று திருவள்ளுவர் கூறுவதனால்அறியலாம்.

மனத்தில் அன்புடையவர்கள், கண்களாற் பிறர்துன்பத்தை காண்பார்கள் காதினாற் பிறர் முறையீட்டைக் கேட்பார்கள் வாயினாற் பிறர்க்கு இனிய மொழிகளைக்கூறிச் சமாதானப் படுத்துவார்கள் கைகளாற் பிறர்க்கு உதவி செய்வார்கள் அன்பில்லாதவர்கள் ஒன்றையும் காணாதவர் போலிருந்து தனது செய்கைகளை மட்டும் குறைவறச் செய்து கொண்டு வாழ்வார்கள் இதனை (9) உடலின் உள் உருப்பாகிய அன்பில்லாதவர்களுக்கு புறத்தில் உள்ள உறுப்புகளாகிய கண், காது, கை, முதலிய உறுப்புக்களிருந்தும், அவை என்ன பயனைத்தரும் !" என்று திருவள்ளுவர் கூறுவதனாலறியலாம் இக்காலத்தில் உள்ள அறிஞர் அனைவரும் அன்புடையவர்களாயிருப்பார்களானால், தாழ்த்தப்பட்ட மக்களும், பார்ப்பனரல்லாதாரும், சுயமரியாதை யிழந்து அடையும் துன்பங்களை நீக்க முற்படாமலிருப்பார்களா அந்தோ இன்னும் நமது நாட்டுப்பார்ப்பனர் பாலும் இந்த அன்பென்னும் அகத்துருப்பிருக்குமாயின் ஏன் நமது நாடு இத்தகைய துன்பத்தையடைகின்றது பார்ப்பன சகோதரர்களும் குறளைப்படித்து அன்படையுமாறு வேண்டுகின்றோம்.

அன்பு செய்து வாழ்கின்றவர்களையே உயிரோடிருப்பவர்களென்று கூறலாம் ஏனெனில் உயிரோடிருப்பதற்குரிய நல்ல செய்கைகள் அவர்களிடம் காணப்படும் அத்தகைய அன்பில்லாதவர்கள் எத்தகைய ஆடம்பரத்துடன் வாழ்ந்தாலும் அவர்கள் உயிருள்ளவர்களாக மாட்டார்கள் அவர்களைப் பிணம் என்று தான் கூற வேண்டும் இதனை (10) "அன்பின் வழியிலிருக்கின்றவர்களே உயிருள்ளவர்களாவார்கள் அன்பு இல்லாதவர்கள் எலும்பைத் தோலினால் மூடப்பட்டிருக்கும் உடம்பை ஒத்தவர்களாவார்கள்" என்று திருவள்ளுவர் கூறுவதனாலறியலாம்.

சிறப்பாக தமிழர்க்குரிய கொள்கை அன்பாகுமென்பதை இது காறுங்கூறியவாற்றால் அறியலாம், ஆகையால் தமிழர்களனைவரும் பார்ப்பனர்களைப் போல் சுயநலம் பிடித்தவர்களாயிராமல் சாதிமத பேதங்களை யொழித்து எல்லார் மாட்டும் அன்புடன் நடந்து மேன்மை பெற முயல வேண்டும்.

இறந்தவர்களை திருப்தி செய்ய

பார்ப்பனர் வயிற்றை

நிரப்பாதே.

இதிகாசங்கள்

II

இராமாயணம் 1 பாலகாண்டம்

திரு சந்திரசேகரப் பாவலரவர்கள் எழுதுவது

25-12-27 'குடி அரசு'த் தொடர்ச்சி

அயோத்தியா புரியிலே சூரியகுல மன்னனாகிய தசரதன் அரசு புரிந்து வந்தான். அவன் வசிஷ்ட முனிவரின் நல்லுரையாலும், அமைச்சனாகிய சுமந்திரனுடைய நன்மந்திரத்தாலும் செம்மையாக அறுபதினாயிரம் ஆண்டுகள் அரசுபுரிந்தான். இவனுக்கு கௌசலை, கைகேயி, சுமத்திரை என்ற பட்டப் பெண்கள் மூவரும், வேறு அறுபதினாயிரம் பெண்களும் மனைவியர். இவர்கள் ஒருவருக்காவது குழந்தை உண்டாகவில்லை. அதனால் மிகவும கவலை யடைந்த தசரதன் தமது குலகுருவோடும் மந்திரிகளோடும் ஓர் நாள் பலவாறு சிந்தித்துப் பிள்ளை பேறுக்காக அசுவமேதயாகம் செய்வதாகத் தீர்மானித்தனன். குல குருக்களின் அனுமதி பெற்ற அரசன் தனது மந்திரிகளை நோக்கி குருக்களின் ஆணைப்படி வேண்டும் பொருள்களைத் தயாரிக்கும் படி கட்டளை யிட்டனன். அச்செய்தி கேட்ட அவன் மனைவியர் மகிழ்ந்தனர்.

அப்போது சுமத்திரன் அரசனைஏகாந்தத்தில் பார்த்துப் பின் வருமாறு சொல்லுற்றான்.

"முன்னர் முக்கால ஞானியாகிய சநத்குமார் சொன்னவைகளைச் சொல்லுகிறேன். காசியப முனிக்கு விபண்டகரென்ற மகனிருக்கிறார். அவருக்கு ருசியசிங்கரென்ற ஒரு மகன பிறப்பான. அந்தக்காலத்தில் அங்கதேசத்திலே ரோமபாதரெனனும் அரசர் தோன்றுவார். அவர் நாட்டில் தீராத பஞ்சமுண்டாக, அதனை நீக்குவதற்காக அம்மன்னர் ஆலோசித்து தாசிகளால் அம்முனி மகனை அழைத்து வந்து தமது மகள் சாந்தையை மணஞ் செய்து கொடுப்பார். அம்முனி மகன் வந்தால் மழை பெய்து பஞ்சம் நீங்கும். அவரை அழைத்துவந்து தசரதர் யாகம் செய்து மகப்பேறடைவார். இவ்விதமாக அம்முனிவர் சொல்லியிருக்கிறபடியால் ருசியசிருங்கரை அழைத்து வந்து தாங்கள் அந்த யாகத்தைச் செய்யவேண்டும்."

இவ்வாறு சுமந்திரன் சொன்ன மொழியைக் கேட்ட தசரதன் ருசியசிருங்கரை ரோமபாத மன்னர் எவ்வாறு தமது நாட்டுக்கு அழைத்த வந்தார் என்று கேட்டனன். அந்த வரலாற்றை சுமந்திரன் கூறினான். (அவ்வரலாறு வால்மீகி ராமாயணத்தில் ஒன்பதாவது பத்தாவது சருக்கங்களில் உள்ளது.

(இவ்வாராய்ச்சியில் நாம் குறிப்பனவெல்லாம் நமது சொந்த மொழிகளென எண்ணுதல் கூடாது. வால்மீகி முனிவர் இராமாயணத்தைத் தமிழில் பண்டித நடேச சாஸ்திரியாரும், பண்டித அநந்தா சாரியாரும் மொழி பெயர்த்து அச்சிட்டிருக்கின்றனர். பண்டித தத்தர் என்பவர் ஆங்கில மொழி பெயர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். இவர்களுடைய சொற்களின் போக்கையே நாம் எடுத்தாள்வோம். இவ்வாராய்ச்சியினால் வால்மீகி இராமாயணம் படியாதவர் மயக்கம் ஒருவாறு நீங்குமென்பது எமது நம்பிக்கை.)

ருசியசிங்கர் வாலாற்றை ஆராய்வோம்.

உரோமபாதரென்னும் அங்க மன்னர் சில புரோகிதர்களை யழைத்து ருசியருசிங்கரை அழைத்து வருமாறு ஏவினர். ஆனால் அவர்கள் மன்னரை நோக்கி "யாங்கள் போகமாட்டோம், பாலியராகிய அவரை எங்களால் வசப்படுத்த முடியாது. மாந்தர் மனதைக் கவரச் செய்யும் இனிய சிற்றின்பங்களால் அவரை மயக்கி வசப்படுத்தவேண்டும். நல்ல அழகுள்ள தாசிகளை நல்ல அலங்காரங்களைச் செய்துகொண்டு அவரிடம் அனுப்பி பலவித உபாயங்களைக்கொண்டு அவரை அன்பு கூரச்செய்து வசப்படுத்தி அழைத்துவரச செய்யவேண்டும்" என்றனர். அதன் படி பல அழகு மிக்க தாசிகள் அனுப்பப் பெற்றனர். அத்தாசிகள் ருசியசிங்கரைக் கண்டனர். அம்முனி மகன் தாம் ஆசைப்படும் படியான அழகுடையர்களாக அம்மாதர்கள் இருப்பதைக் கண்டு அவர்களிடம் அன்பு கொண்டனன். அப்பெண்கள் அவனை நன்றாக ஆலிங்கனம் பண்ணிக்கொண்டு மகிழ்ச்சியோடு அவனுக்குக் கொழுக்கட்டை முதலிய பலகாரங்களை ஊட்டினர் அம்முனிவனுடைய ஆச்சிரமத்தில் இவ்வாறு ஆலிங்கனம் செய்து அவரை மயக்கி விட்டு அவர்கள் தாங்கள் தங்கியிருந்த இடத்துக்குச் சென்றார்கள். அவர்கள் பிரிந்ததும் அவன் மனங்கலங்கி ஓரிடத்திலுமிராமல் மயங்கித் திரிந்துகொண்டிருந்தான். மறுநாள், அவர்களிடம் சென்ற மனதைத் திருப்பமுடியாதவனாய் அவன் மனமருட்டும் அம்மங்கையரிருந்த இடத்திற்குச் சென்றனன். அவர்களும் அவனைப் பலவாறு மயக்கி "நீர் எங்களோடு வந்தால் உமக்கு இதைப்போல இன்பம் அதிகமாகக் கிடைக்கும்" என்றனர். உடனே அவன் தனது தந்தைக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளையெல்லாம் மறந்து அவரிடம் சொல்லாமல் அப்பெண்களோடு புறப்பட்டுச் சென்றான். பின் அங்கதேசத்தை அடைந்து அம்முனி மகன் அரசன் மகள் சாந்தையை மணந்து காம இன்பம் நுகர்ந்து கொண்டு அரண்மனையிலேயே இனிதிருந்தான். உடனே மழை பொழிந்து நாடு செழித்தது.

இவ்வரலாற்றைக் கவனித்துப்பார்த்தால், தனது தந்தைக்குச் செய்யும் பணிவிடையை மறந்து அவரிடம் சொல்லாமல் காமவசப்பட்டு தாசிகளோடு காட்டிலிருந்து ஓடி வந்து நாடு புகுந்து ஓர் பெண்ணைக் கலியாணஞ் செய்துகொண்ட ஒருவன் கால்வைத்த புண்ணியத்தால் மழை பெய்வது என்றால் அத்தெய்வத்தின் தெய்வத்தன்மைதானென்னே! தந்தைக்குச் செய்ய வேண்டிய கடமையினும் வேசையர் காமவசப்படிருத்தலே மேன்மையான புண்ணியம் போலும்! இத்தகைய மகானுபாவரையே பிள்ளைப் பேறு கருதி யாகம் செய்யத் தொடங்கும் தசரதன் யாககர்த்தாவாக அழைத்து வருகின்றனன். ருசிய சிருங்கர் வரவைக்கண்டு மழை பொழிந்தவன் இந்திரன். இவ்விந்திரனின் மகிமைகளைப் பின்னர் ஆராய்வோம். பரதாரகமனப்பிரியனாகிய இந்திரன் வேசையர் லோலனாகிய ருசியசிருங்கனைக்கண்டு மகிழாமல் வேறு யாது செய்திருப்பன்?

இந்த ருசியசிருங்கன் வரலாற்றை கம்பர் எவ்வாறு கூறுகிறாரென்று கவனிப்போம். தசரதன் வசிட்ட முனிவரிடம் தன் பிள்ளையில்லாக் குறையைச் சொன்னதாகவும், அம்முனிவர் "திருமால் அவனுக்குப் பிள்ளையாகப் பிறக்கப் போவதாக சொல்லியிருக்கிற தாகவும், அதனால் கலைக்கோட்டு முனிவரை (ருசிய சிருங்கரை) அழைத்து வந்து அசுவமேத யாகஞ் செய்தால் திருமால் வந்து பிறப்பார்" என்றும் சொன்னதாக எழுதுகிறார். இது வால்மீகி வரலாற்றுக்கு மாறுபட்டது. தசரதனுக்குத் தன்னிடம் திருமால் வந்து பிறக்கப்போவதாகத் தெரியாது. அவனிடம் ஒருவரும் சொல்லவில்லை சுமந்திரன் கூட இதை உணர்ந்தவனுமல்லன், தசரதனிடம் சொன்னவனுமல்லன். கம்பரே உண்மையை மாற்றி வசிட்டர் திருமால் பிறப்பைத் தசரதனிடம் சொன்னதாக எழுதுகிறார்.

மேலும் கம்பர் தமது நூலில், ரோமபாத மன்னன் புரோகிதரை நோக்கி கலைக்கோட்டு முனிவரை அழைத்து வரவேண்டியது என்றதும் அவர்கள் தம்மாலாகாது மனிதருடையமனதைக் கவரும இனிய சிற்றின்பத்தால்தான் அவரை மயக்கிஅழைத்துவரவேண்டும்என்று கூறியதும் ஆகிய வரலாற்றைக் கூறாது மறைத்து விட்டார். அப்பெண்களை "சோதி நுதற் கருநெடுங்கட் டுவரிதழ்வாயத் தரள நகைத்துணை மென்கொங்கை மாதர்" என்றும் "பனிப்பிறையைப் பழித்தநுதற்பணைத்தவேய்த் தோள் வஞ்சுமிடைதடித்தமுலை இருண்ட குழல் மருணடவிழி இலவச் செவ்வாய்ப் பூங்கொடியீர்" என்றும் வருணித்த கம்பர் அவர்கள் வனஞ்சென்று தவசிகளைப் போல இருந்தார்கள் என்றார். இதுவும் வால்மீகர் கூறாதது. பின் அவர்கள் கலைக்கோட்டு முனியை ஆலிங்கனஞ் செய்ததையும் கம்பர் மறைத்தார்.

"அம்மாதர்கள் அந்த ருசிய சிருங்கர் ஆசைப்படும்படியான அழகுடையவர்களாய்" (வால்மீகி ராமாயணம் பத்தாவது சர்க்கம்) என வருவதையும் மற்றும் நாம் மேலே வால்மீகி கூறியதாக எடுத்துக்காட்டியுள்ள வரலாற்றையும் மறைத்து ருசிய சிருங்கரை மிகவும உத்தமராகக் காட்டுகிறார்.

பின் சுமந்திரனுரைத்த மொழிப்படி தசரதன் "புதல்வருண்டாகச் செய்ய வல்லவராகிய சாந்தையின் கணவரான ருசிய சிருங்கரை" அழைத்து வரும்பொருட்டுத்தானே அங்க நாடு சென்றான். அங்கே ரோமபாத மன்னரால் உபசரிக்கப்பட்டு சின்னாளிருந்து பின் கலைக்கோட்டு முனிவனைச் சாந்தையோடும் அழைத்துக்கொண்டு அயோத்தியை வந்தடைந்தான். அதன்பின் தசரதமன்னன் பிள்ளைப்பேற்றுக்காக அசுவமேத யாகஞ்செய்யத் தொடங்கினான்.

தொடரும்

ஸ்ரீ நாயக்கருக்கு வரவேற்புப் பத்திரம்.

கூத்தூர் குருக்கத்தில் 29—1—28ல் திரு சாமிநாத பிள்ளை குமாரர் சி. பக்கிரிசாமி பிள்ளைக்கும், திரு துரைசாமி பிள்ளை குமாரத்தி சௌ. பட்டம்மாளுக்கும் நடந்த பார்ப்பனியமொழிந்த திருமணத்துக்கு விஜயம் செய்த வைக்கம் வீரரும் 'சுயமரியாதை' இயக்கத் தலைவரும் 'குடி அரசின்' ஆசிரியருமான

ஈ. வெ. ராமசாமி நாயக்கர்

அவர்களுக்கு ஷை. மணமக்களின் பெற்றோர்களும் சுற்றத்தார்களும் அளித்த

வரவேற்புப் பத்திரம்.

உண்மையே உருக்கொண்ட உள்ளமும், அஞ்சா நெஞ்சம் படைத்த வீரமும் கொண்டு, மக்கள் உள்ளத்தில் 'சுயமரியாதை' யென்னும் சீரிய உணர்ச்சியை எழுப்பி அறக்கிளர்ச்சி செய்து வெற்றிமாலை சூடி வரும் எமது உண்மைத் தலைவ! உத்தமத்தலைவ— வருக! வருக!! தங்களது வரவு நல்வரவாகுக!!!

இல்லறம் துறவறம் என்னும் இருகூறுபடும் மனித வாழ்க்கையில் 'இல்லற மல்லது நல்லற மன்று' என்னும் ஔவை மூதாட்டியின் அமிழ்த வாக்குக் கிணங்க சிறந்து விளங்கும் இல்லறம் என்னும் ஓர் சிறந்த அறத்தொழிலை நடாத்துதற் பொருட்டு இரு இளமக்கள் ஒன்று சேரும் திருமணத் திருநாளாகிய இன்று எங்கள் இல்லத்துக்கு எழுந்தருளி, தங்களது உண்மை, அன்பு, வீரம் என்னும் சிறந்த தத்துவங்களின் மணங்கமழப் பெறும் தூய உள்ளத்தின் வியாபகத்தினால் எமது மண மக்களின் சேர்க்கையை மங்களமான ஆரம்ப முடையதாகச் செய்து ஆசி கூறிய தங்கள் சீரிய நன்றிக்கு நாங்கள் சாலவும் கட்டுப்பாடுடையோம் என்பதை வணக்கமாகத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

கண்ணியமிகுந்த அண்ணலே!

சில்லாயிர ஆண்டுகளுக்கு முன்னதாக பன்னலஞ் சிறந்த பாரத நாடாகிய நம் திருநாட்டுக்கு வயிற்றுப் பிழைப்பு காரணமாகக் குடியேறி, இயற்கையிலேயே தமக்கு அமைந்த சூழ்ச்சி அறிவின்வன்மையால் அக்காலத்திலிருந்து களங்கமில்லா உண்மைத்திராவிட மக்களாகிய நமது முன்னோர்களைத் தம்வயப் படுத்தி, அக்காலத்திய சிற்றரசர்களிடையும், தனவந்தர்களிடையும் தாம் சம்பாதித்த ஆதிக்கத்தை அனுகூலமாகக்கொண்டு, பார்ப்பனீயமென்னும் தமது மதத்தை ஸ்தாபித்து, நாடு முழுவதும் பரவச்செய்து, அந்தணர், பார்ப்பனர், பிராமணர் என்றவை முதலான விழுப் பொருள் பயக்கும் அழகிய பதங்களைத தமக்குரித்தாக்கிக் கொண்டும், அடிமைகள், வைப்பாட்டி மக்கள் என்று பொருள்படும் சூத்திரர் என்னும் இழிந்த பதத்தை நமக்குச் சூட்டியும், மக்கள் அறிவு நிலையையும் உணர்வு நிலையையும் வளர்க்கும் மத நூல்களை நாம் கற்கக் கூடாதென்றும், கேட்கக் கூடாதென்றும், அவர்களுக்கு அடிமைவேலை செய்வதே நமக்குரிய மதத் தருமமென்றும் கூறி, திராவிடமக்களின் அறிவு எந்தத் துறையிலும் வளரவொட்டாமல் மழுங்கச் செய்து, பிறந்தது முதல் இறக்கும் வரையில்—ஏன்? இறந்தாங்கூட சடங்குகள் செய்வதே அறவொழுக்கமாக கற்பித்து, அச்சடங்குகளை இயற்றுவிப்பதற்கு அதிகாரிகள் தாமேயென்று, நாம் கண்ணியமாக உழைத்துச் சம்பாதிக்கும் பொருளைக் கொள்ளைகொண்டு, தம்இனத்தார் உழைப்பில்லாத சுகவாழ்வு வாழும்படியாகச் சூழ்ச்சி செய்து நாளிதுகாறும கொடுங்கோலாட்சிசெய்து வரும் பார்ப்பனர் என்னும் ஒரு கூட்டத்தாரின் சூழ்ச்சிப் பொல்லாங்கினின்றும் எம்மை மீட்டுவித்து எமது வாழ்வை சுதந்தர அறவாழ்வாகச் செய்வதே தாமெடுத்த பிறவியின் பெரும் பயனாகக் கருதி, அறக்கிளர்ச்சி செய்து அக்கிளர்ச்சியின் ஆக்கத்துக்கு தமது உடல் பொருள் என்ற இரண்டையும் தியாகம் செய்து அவசியமாயின் தமது ஆவியையும் தியாகஞ் செய்யத் தயாராயிருக்கும் தியாக மூர்த்தியாகிய உண்மைத்திருவாள! தங்கள் முயற்சி இணையில்லாத் தெய்வ வலிவோடும் சிறந்து விளங்குவதாக என்று எம் மனமார வாழ்த்துகின்றோம்.

தமிழ்நாட்டில் மட்டுமன்றி பாரதநாடுமுழுவதுமே புகழைக் கொள்ளைகொண்டு, உண்மைத் திராவிட மக்களின் வணக்கத்தையும், நன்மதிப்பையும் தமக்குரித்தாக்கிக் கொண்டு, எமது உள்ளத்திலெல்லாம் அரசு வீற்றிருக்கும் அய்யனே!

தங்களது அற இயக்கத்துக்கு ஆங்காங்கு பார்ப்பனர்களும் அவர்கள் சூதறியாத பேதைத் திராவிட மக்கள் பலரும் எதிர் மறையாக சூழ்ச்சிமிக்க பெருங்கிளர்ச்சி செய்து வருகிறார்கள் என்பதை நாமறிவோம். ஆனால் தமது 'குடி அரசின்' அரிய சேவையாலும், தங்கள் ஊக்கமும் வீரமும் மிக்க அருமையான சொற்பொழிவுகளாலும் விழிப்புப் பெற்று இயற்கையறிவுணர்ச்சியும், வீர எழுச்சியும் பெற்றிருக்கும் நமது திராவிட இளைஞர்களின் சுயமரியாதை இயக்கத்தின் வேகமான வெள்ளப் போக்கில் அம்மறுப்புகள் சிறிதும் நிற்கத் தகாதன என்ற நம்பிக்கை கொண்டு எமது இயக்கத்துக்குத் தலைமை பூண்டு நடத்த என்றுங் குன்றாத ஊக்கமும், ஆற்றலும் தங்களுக்கு அளித்தருளுமாறு எல்லாம்வல்ல இறைவனை வழுத்துகிறோம்.

தன்னல நோக்கோடும் அடிக்கடி தமது கொள்கைகளை மாற்றிக்கொண்டு மனதிலொன்றுவைத்து வெளிக்கொன்று பேசியும் எழுதியும் வரும் சில தலைவரைப் போலன்றி தமது அறிவுக்கும் அனுபவத்திற்கும் ஒத்த உண்மைகளை உள்ளது உள்ளவாறே ஆண்மையோடு எடுத்துக்கூறிப் போதரும் வீரப்பெருமானே!

பொருளற்றதும் மக்கள் அறவாழ்க்கைக்குச் சிறிதும் பயனில்லாததுமான நேர்மையற்ற புரோகிதம் என்னும் பொய்யொழுக்கத்தை யொழிக்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும், மக்கள் மெய் வாழ்வுக்கு இன்றியமையாத சுயமரியாதை என்னும் அறிவுணர்ச்சி வளரவேண்டிய அவசியத்தைப் பற்றியும் யெடுத்துக்கூறி யெமக்கு அறிவு கொளுத்தி மெய் நெறியிற்செலுத்துமாறு வணக்கமாய் வேண்டிக் கொள்ளுகிறோம்.

மணமக்களின் பெற்றோர்கள்.

வாழ்த்துகின்றோம்

தேவகோட்டை தனவணிக குலத்தைச் சேர்ந்த திருவாளர் அ. வெ. தியாகராஜர் அவர்கள் தமது அருமை மனைவியாருடன் கப்பல் யாத்திரையாகப் பர்மாவுக்குச் செல்கின்றார்.

தனவணிக நாட்டு மக்களில் திருவாளர் தியாகராஜா அவர்களே முதல் முதல் தம் மனைவியுடன் கப்பல் பிரயாணம் செய்பவராவார். இதன் மூலம் அக்குலத்தினர் தங்களது அருமை மனைவியார்களைக் கப்பலில் அழைத்துப் போவதால் குலத்திற்கே கேடு என்றும் ஜாதியை விட்டு விலக்கப்படவேண்டியதாகும் என்றும் நினைத்திருந்த மூட நம்பிக்கையும் குருட்டு வழக்கங்களும் ஒழிந்து வெளி நாட்டுக்கு 3 வருடம் 4 வருடம் மனைவி மக்களை விட்டுப் பிரிந்து வாழும் கொடூர வாழ்வு முறை ஒழிந்து இன்ப வாழ்க்கை வாழும் நிலை ஏற்படக்கூடும் என்று நினைப்பதுடன் அப்பெரிய சமூகத்திற்கு வழிகாட்டியாக ஏற்பட்ட அன்பர் தியாகராஜாவுக்கும் அவரது அருமை மனைவியாருக்கும்நாம் உள்ளம் நிறைந்தவாழ்த்துக் கூறுகின்றோம்.

இந்திய தேசீய மகாசபையும் பணச் செலவும்.

42 வது இந்திய தேசீய மகாசபை.

சென்னையின் கண்ணுள்ள எழும்பூருக்கு அருகாமையில் அமைக்கப்பட்டிருந்த ஒரு பெரிய பந்தலில் நடை பெற்ற விஷயம் யாவருமறிந்ததே. இப்பந்தலைக் கட்டி முடிக்க ஏராளமான பணம் பிடித்திருக்குமென்பது நேரில் கண்ட கனவான்களுக்கு நன்கு விளங்காமற் போகாது. இப்பணத்தைக் கொண்டு, சாமிகளென்று காவியுடுத்தித்திரியும் போலிச் சாமிகளுக்கு வேலை கொடுத்து அவரவர்கள் கஷ்டப்பட்டு அவரவர்கள் உண்ணும்படி செய்வார்களாயின் நாடு மேம்பாடு அடையும். இதை விடுத்து ஆயிரக் கணக்கான ரூபாய்களைக் கொண்டு பெரியதோர் பந்தல் கட்டி முடித்து அதில் அனுஷ்டிக்க முடியாத சில தீர்மானங்களை நிறைவேற்றித் தத்தம் ஊர் போய்ச் சேர்வதால் வரும்பயனென்ன? இனியாவது பணத்தை அனாவசியமான காரியத்தில் செலவழிக்காமலிருப்பதுடன் அனுஷ்டானத்துக்குக் கொண்டு வரமுடியாத தீர்மானங்களை நிறைவேறச் செய்வது தேச நன்மைக்கும, பாதகம் செய்ததாகும் என்று திரு வீராசாமி பிள்ளை, எழுதுகிறார்.

அய்யம்பாளையம் பஞ்சாயத்துக்கோர்ட்டு பிரசிடெண்டு எலெக்ஷன்

இவ்வூரில் 3-1-28 தேதி செவ்வாய்கிழமை காலை 7-30 மணிக்கு ஷை கோர்ட்டு மெம்பர்கள் மீட்டிங்கூடி மகா-ள-ஸ்ரீ எஸ். அழகிய சுந்தரம் பிள்ளை அவர்களை பஞ்சாயத்துக் கோர்ட்டு பிரசிடெண்டாக தெரிந்தெடுத்தார்கள். பிள்ளை அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டதைப் பற்றி இந்நகர் வாசிகளுக்கு சந்தோஷம் என்று ஐயம்பாளயத்திலிருந்து ஒரு நிருபர் எழுதுகிறார்.

குரு பீடங்கள்.

நமது தேசத்தில் சகோதரத்துவம் சமத்துவம் இவைகள் நிலவாமலிருப்பதற்கும், அடிக்கடி பூசல்கள் உண்டாவதற்கும், மூல காரணமாயிருப்பது ஒருவன் தன்னை உயர்ந்தவன் என்றும் மற்றவன் தாழ்ந்தவன் என்றும் நினைப்பதேயாகும். இது பெரும்பாலும் மனுதர்ம நூலினை ஆதாரமாகக்கொண்டு வருணாசிரமத்தை அவலம்பிக்கின்ற வைதிகர்களாலேயே என்பதில் தடையில்லை. நமது தென்னாட்டைப் பொருத்தமட்டிலும் பிராமணர்கள்தான் இதற்குக் காரணம் என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. அது வாஸ்தவமாயிருந்தாலும் வைதிகர்கள்தான் இக்கொடுமையை அதிகப்படுத்துகிறார்களென்பதில் தடையில்லை. ஆகவே புரோகிதக் கூட்டம் ஆச்சாரியக் கூட்டங்களைத் தொலைத்தாலன்றி தேசம் ஒற்றுமைப்பட்டு வாழ முடியாது. படித்த பிராமணர்களை அவ்வளவு மோசமாய்ச் சொல்வதற்கில்லை. இவர்கள் தங்களுக்குள்ள ஆஸ்திகளையெல்லாம் செலவு செய்து படித்துவிட்டு தங்கள் புத்திக்கூர்மைக்குத தகுந்தபடி ஏதோ உத்தியோகம் சம்பாதித்துக்கொண்டு மேல் ஜாதியென்றும் கீழ் ஜாதியென்றும் பாராமல் எல்லாருக்கும் ஊழியம் செய்து வந்து பென்ஷன் வாங்கும் வரையாவது உயர்ந்தவன் என்ற மமதையை விட்டிருக்கிறான். தவிர, இப்போது ஆங்கிலப் படிப்பைப் படித்து விட்டு வேலையின்றி எல்லார் பின்னும் ஓடி பல்லைக் காட்டி கெஞ்சுகிற சிறுவர்களைப் பார்த்தால் பரிதாபமாயிருக்கிறது. இவர்கள் உள்ளத்தில் வருணாசிரம மமதை போய் விட்டதென்றேசொல்லலாம். மற்றும் சில பெரிய படிப்பாளிகள் கப்பல்யாத்திரைசெய்து எல்லாரோடும் உண்டுகளித்து வருவதையும் பார்க்கும்போது உத்தியோகங்களில் கணக்குக்கு மீறி அடித்துக்கொண்டு போய் விட்டு எல்லாவற்றையும் தங்களினத்தாருக்கு நிரப்புகின்றார்களே என்ற ஒரு விஷயத்தைத் தவிர வேறு சமூகக்கொடுமைகள் அவர்களிடம் அதிகம் இல்லையென்றே சொல்லலாம். ஆனால் நமக்கு இழிவைத்தரக் கூடியதாயிருப்பது வைதீகக்கொடுமைதான். இவைகளில் புரோகிதக் கொடுமையைப்பற்றி சென்றவாரம் எனக்குத்தெரிந்த வரையில் எழுதினேன். இக்கட்டுரையில் குரு பீடங்களைப்பற்றி சில சிலவற்றை எழுதத்துணிந்தேன்.

குருவேன்பவர் யார்.

குருவென்பதன் பொருள் என்ன என்று யோசிப்போம். நமக்கு அறிவைப்போதித்து இகத்திற்கும் பரத்திற்கும் நல்லொழுக்கத்தையும் ஆத்மார்த்தத்தையும் அடையும்படி செய்பவரே குரு ஆவார். முன் காலத்திய சரித்திரங்களைப்பார்த்தாலும் வசிஷ்டர் பிரகஸ்பதி, சுக்கிரர், வியாசர் என்பேர்கள் அப்படித்தான் செய்து வந்து குரு ஸ்தானம் பெற்றதாகத் தெரிகிறது. இப்போதும் கிருஸ்துவ மதாச்சாரியர்களாகிய போப் முதலியவர்களும், மகமதிய குருமார்களும், நபிகள் நாயகமும், பைபில், குர்ஆன் முதலிய தம்தம் வேதங்களை எல்லா சிஷ்யர்களுக்கும் போதித்து எல்லோரும் படிக்கும்படி செய்து தங்கள் சிஷ்யர்களை நல்வழிப்படுத்தி வருகின்றார்கள். வேறு மதஸ்தர்களும் தாராளமாகப் படிக்கும்படியும் வசதி செய்திருக்கிறார்கள். அவர்களுக்குள் இன்னார்தான் படிக்க வேண்டும், இன்னார் படிக்கக்கூடாதென்ற பாகுபாடில்லை.

நமது குருமார்களோ

"வேதத்தை படித்தால் நாக்கை அறு. பார்த்தால் கண்ணைக்குத்து. கேட்டால் காதில் ஈயத்தைக்காய்ச்சி விடு. நினைத்தால் நெஞ்சைப்பிளந்து விடு. தொட்டால் கையை வெட்டு" என்று சட்டம் செய்திருக்கிறார்கள். நாம் இந்த குருமார்களை நம்பி கடைத்தேறுவதெப்படி? பிராமணக் 'குரு' சாப்பிடுவதை பிராமணரல்லாத சிஷ்யன் பார்த்தால் சாப்பாடுபூராவும் விஷமாய்ப் போகிறதென்கின்றார்கள். ஒரு லோட்டா தண்ணீர்கொடுத்தால் கிணற்று ஜலம் பூராவும் தீட்டாய்ப் போகிறதென்கிறார்கள். சாப்பிடும்போது பேசினால் காசிக்குப்போய் பாவந் தொலைக்கவேணுமென்கிறார்கள். இவ்வளவு ஆகாசத்திலிருக்கிற குருவுக்கும் அவ்வளவு பாதாளத்திலிருக்கிற சிஷ்யனுக்கும் என்ன விதமான பற்றுதலும் சம்மந்தமும் இருக்கமுடியும் என்பதை யோசித்துப் பாருங்கள். இந்த மாதிரி நிலையில் உள்ள குருமார்களால் நமக்கு என்ன நன்மை ஏற்படும் என்பதை கவனிக்க வேண்டாமா? தொழில் பாகுபாட்டால் பலவேறு ஜாதியாய்ப் பிரிந்தவர்களுக்கு அநேக உட்பிரிவுகளாகக் குலம் கோத்திரம் அனந்தம் ஏற்பட்டிருக்கிறது. இந்த பல வேறு ஜாதிகளுக்கும், குலங்களுக்கும் தனித்தனியாகக் குலகுரு என்று ஒவ்வொருவர் ஏற்பட்டு, வருஷம் வருஷம் தென்னாப்பிரிக்காவில் தலைவரி இந்தியர்களிடம் வசூல் செய்தது போல் தலைக்கட்டுவரி இந்தக் குருமார்கள் வசூல் செய்கிறார்கள். நாம் எதற்காக அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்பதைக்கவனிக்கிறார்களா? நம்ம பாட்டன் பூட்டன். தகப்பன் கொடுத்தார்களே அதைப்பின் பற்றவேண்டுமென்கிறார்களே தவிர இதில் ஏதாவது பாத்தியமோ அருத்தமோ உண்டா?

குல குரு

சாதாரணமாக பாமர மக்களை ஏமாற்றும் கூட்டத்தில் குரு பீடங்கள் தான் தலைமையாயிருக்கிறது. எப்படி யென்றால் புரோகிதனாவது உள்ளூரிலிருந்துக்கொண்டு பஞ்சாங்கம் சொல்லி, மாவிலை தர்ப்பைகொண்டு வந்துகொடுத்து ஏதோ குருட்டு மந்திரங்களைச்சொல்லி பணம் வாங்குகின்றான். கோவில் அர்ச்சகனோ? சுவாமி முன்னால் நின்றுகொண்டு மணியடித்துக்கொண்டு ஏதோ தவளைபோல் கத்தி மந்திரம் சொல்லி கூலி வாங்குகிறான். ஒருவிதத்தில் இவர்கள் நமது வேலைக்காரரென்றாவது சொல்லி விடலாம். ஆனால் குல குருமார்களோ வென்றால் முழு மோசக்காரர்களென்று சொல்லவேண்டியிருக்கிறது. முதலாவது இக்கூட்டத்தில் படித்தவர்கள் ஒருவர் இருவர். மற்றவர்கள் தற்குறிகள் சாப்பாட்டு ராமன்கள் சாப்பிடுவதைத் தவிர வேறு எந்த விஷயமும் தெரியாதவர்கள். அதாவது இவர்களுக்கு பணம் வசூல்செய்கிற வேலையைத்தவிர வேறு ஒன்றும்தெரியாது எந்தசிஷ்யனையாவது உங்கள் சாமியார் எப்படி யென்றால் 5, 6 வண்டி மாடு 10, 15 ஆட்கள் என்பதுதான் குருவின் மகத்துவம். தவிர, குரு பரம்பரையிலும் சுத்தமாய்ப் படிப்புவராத களிமண் மூளையுடையவர்களைத் தான் அநேகமாய் குருவாக்கப்படுகிறது. ஏனென்றால் இவருக்கு வேறு வேலையில்லை. பணம் கணக்கு விடாமல் அதாவது போனவருஷம் பங்குனியில் கல்யாணமானவனிடம் நடப்பு வருஷம் வைகாசி மாதம் காணிக்கை வாங்கும்போது இரண்டு வருஷ கணக்குபோட்டு வாங்க வேண்டியவர்களாவார்கள் ஏனையா 2 மாதம தானே ஆச்சு என்றால் மாதம் இரண்டானாலும் வருடம் இரண்டாவது ஆய்விட்டதென்று கலகம் செய்து வாங்குபவர்கள் இதற்கு படிப்பு வேண்டுவதில்லை. ஆள்மட்டும் தடிப்பாயிருந்தால் போதும். இவர்களுக்கும் நாம் வருடம்தவறாமல் தலைக்கட்டு வரி கொடுத்து சாமியார் கோபித்தால் குடி நசித்துப் போகும் என்று நினைத்து ஒளிக்காமல் கொடுத்து அவர்களது காலைக் கழுவின தண்ணீரைக் குடித்து மீதி உள்ளதை தலையில் தடவிக்கொள்ளுகிறோம். இதற்கு ஆதாரம் என்ன வென்று கேட்டால் ராமனுக்கு வசிஷ்டர் இந்திரனுக்கு பிரகஸ்பதி இருந்ததையும் குருவை மதிககாததால் தேவேந்திரனுக்கு பிரம்ம ஹத்தி வந்ததென்றும் புராணங்களை விரித்துக் காட்டுகிறார்கள் நாமோ? அந்தக் குருவின் யோக்கியதையும் இந்தக்குருவின் யோக்கியதையும் ஒன்று தானென்றும் நமக்கும் அப்படி கெடுதி வந்துவிடுமாக்கும் என்றுபயந்து அந்த புராணத்திற்கும் இந்தக் குரு பீடங்களுக்கும் சந்ததி சந்ததியாக மீளாத அடிமையாய்க்கொண்டு வருகிறோம்.

மனித வேட்டை.

சில குருமார்களுக்கு மனிதவேட்டை கூட உண்டு இதை எழுதுவது மிக வெட்கக்கேடான காரியம் ஆனால் மூட வழக்கங்களை யொழிக்க வேண்டிய நிமித்தம் எழுதாமலிருக்க என் மனம் சம்மதிக்கவில்லை. குருமார்களின் சிஷயர்களில் பல பாலியவிதவைகள் உண்டு. அவர்களுக்கு சில மைனர் வார்சுகளோ அல்லது வார்சுகள் இல்லாமலோ பல பேர்களிருக்கிறார்கள் குல குருக்களாகி தடிச்சாமியார்கள் வந்துவிட்டால் இவ்வூரை விட்டு பல ஆண்டுகள் போவதில்லை. இந்த விதவையின் தோட்டம் பூமிகளில் விளைகிற சகல வரும்படிகளும் சுவாமி பூஜைக்கும் சன்னிதானத்தின் செலவுகளுக்குமேயாகும் சுருங்க கூறுமிடத்து உடல் பொருள் ஆவி மூன்றும் குருவுக்கே சொந்தம் மற்றவர்களோ வென்றால் அம்மாளுடைய தெய்வபக்தியையும் தர்மசிந்தனையையும் குரு பக்தியையும் புகழ்கிறார்களே யொழிய அதிலுள்ள படிற்றொழுக்கங்களை ஆராய்வதில்லை சில சமயங்களில் சாமிகள் கூடவே அம்மையாரும் போய்விட்டு சில மாதங்கட்கு பின் வருவதுமுண்டு அப்போதும் அம்மையாரின் மேலான குணத்தையே அதாவது குரு பக்தியை போற்றுவதுண்டு.

இதன் தொடர்ச்சி 13-ம பக்கம் பார்க்க.

சென்னையில் வேலை நிறுத்தத்தின் யோக்கியதை.

3—2—28உ 9 மணிக்கு சென்னை தங்கசாலைத் தெருவில் சுமார் 200 காலிகள் கூச்சலிட்டுக்கொண்டு அங்கிருந்த 4, 5 காப்பிகிளப்பு கடைகளையும், வெற்றிலை பாக்கு கடைகளையும் தடிகளால் தகர்த்து மூடும்படி செய்து விட்டனர். கடைகளை மூடிய பின்னரும் கற்களை வாரியடித்து மின்சார விளக்குகள், போர்டுகள், கதவுகள், முதலியவைகளையும் உடைத்தெறிந்தனர். இம்மாதிரியே செய்துகொண்டு போயினர்.

ஃ ஃ ஃ

மண்ணடியில் சைபுல் இஸ்லாம் பத்திரிகையின் பிரசாரத்தினால் முகமதியர்களின் கடைகள் முழுதும் இந்துக்களின் கடைகளில் பாதியும் திறந்திருக்கின்றன. பிராட்வே சந்திப்பிலும், சென்ட்ரல் ஸ்டேஷன் முன்னிலையிலும் காலிகளினால் போக்குவரத்து தடை செய்யப்பட்டது. டிராம் வண்டி, மோட்டார், சைகிள், ஜட்கா, போனால் ஷேம் என்று கத்தி அதில் போகின்றவர்களை சண்டபடி திட்டுகின்றார்கள். அங்கங்கே உள்ள போலீசார் சில முக்கியமான காங்கிரஸ் காலிகளைக் கைதுசெய்து போலீஸ லாக்கப்பிற்குக் கொண்டுபோயும் ஜனங்களின் பீதி அடங்கவில்லை. இராயபுரத்தில் பாதி கடைகள் திறந்திருக்கின்றன.

ஃ ஃ ஃ

திருவல்லிக் கேணியில் முகம்மதியர்களின் கடைகளும் இந்துக் கடைகளில் சிலவும் வழக்கம் போல் திறக்கப்பட்டு அமைதியாய் வியாபாரம் செய்து வருகின்றனர். மவுண்ரோட்டிலுள்ள எல்லா பெரியகடைகளும் கம்பெனிகளும்திறந்து வியாபாரம் செய்துவருகின்றன. திருவல்லிக்கேணியிலும், மவுண்ரோட்டிலும் ஹார்த்தல் ஒன்று உண்டு என்பதையே யாரும் உணரமுடியாதபடி தினசரி வழக்கம்போல் வண்டிகள், டிராம்கள் நடைபெறுகின்றன.

* * *

பீச்ரோட்டிலுள்ள எல்லா வியாபார ஸ்தலங்களும், பாங்கிகளும் சரிவர நடைபெறுகின்றன. பிராமண வக்கீல்களும், குமஸ்தாக்களும், காப்பி கிளப்புகாரர்களும் வழக்கம்போல் ஒருசிறிதும் ஹார்த்தாலை லக்ஷியம் செய்யாமல், டிராமிலும், பஸ்விலும், சொந்த மோட்டாரிலும் தங்கள் தங்கள் வேலைக்குப் போய்க் கொண்டிருக்கின்றனர். பிராமணர்களின் சூழ்ச்சியிலகப்பட்டு வழிதெரியாது ஏமாந்த பிராமணரல்லாத ஏழை மக்கள்தான் கடைகளையும், வண்டிகளையும், தொழிலையும் கட்டிவைத்து விட்டு தெருவில் நின்று வேடிக்கை பார்க்கின்றனர்.

* * *

புரசைபாக்கம், எழும்பூர், இராயபேட்டை முதலிய இடங்களில் எல்லா கடைகளும் திறக்கப்பட்டிருக்கின்றன. சூளையிலும், பெரம்பூரிலும் தொழிலாளர்களுக்குப் பயந்துகொண்டு கடைகள் அடைக்கப்பட்டிருக்கின்றன. சர்க்கார் உத்தியோகசாலைகள், ரயில்வே தொழிற்சாலைகள், மில்கள், கார்ப்பொரேஷன் ஆபீசிலும், பள்ளிக்கூடம், தொழிற்சாலைகளும் இன்னும் இதர பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் ஒழுங்காய் திறக்கப்பட்டு வழக்கம்போல் நடைபெறுகின்றன.

ஃ ஃ ஃ

பகிஷ்காரப் பிரசாரப்பத்திரிகை ஆபீஸ்களாகிய சுயராஜ்யா, ஹிந்து, மித்திரன், டெய்லி எக்ஸ்பிரஸ், முதலிய இடங்களில் ஒரு கருப்புக்கொடியாவது சுயராஜ்யக் கொடியாவது பறப்பதை நமது விசேஷ நிருபர் பார்க்க முடியவில்லை. இவைகள் எல்லாம் ஊருக்குப் புத்தி சொல்லமட்டும் ஏற்பட்டிருக்கிறதாகத் தெரியவருகிறது.

* * *

பொதுவாக சென்னையில் ஹார்த்தால இந்த தடவை கால் பாகங்கூட வெற்றிபாக வில்லை. ஆனால் இந்த ஹார்த்தால் பகிஷ்காரக் கட்சியாரைவிட, சைமன் கமிஷனை பகிஷ்கரிக்கக் கூடாது என்கிறவர்களுக்குத் தான் அதிக வெற்றியைக் கொடுத்திருக்கிறது. எப்படியெனில் காங்கிரஸ் நிதியிலிருந்து பெரிய பணச் செலவில் ஏராளமான காலிகளை ஏவிவிட்டு பலமான பிரசாரங்கள் பலநாள்நடைபெறும்படி செய்ததும் ஈரோடு ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்களின் வால் நோட்டீசுகளும், 'திராவிடன்' பத்திரிகையில் வெளிவந்த ரிக்ஷா வெற்றிலை சம்பாஷணை நோட்டீஸ்கள் ஆயிரக்கணக்காய் விநியோகிக்கப்பட்டதும், ஆதிதிராவிடர்கள் உறுதியாய் ஒற்றுமையுடன் நின்று கமிஷனை வரவேற்பதும், முசல்மான்கள் இந்துத்தலைவர்களை நம்பாமல் பிணங்கி நிற்பதும், பகிஷ்காரக் கட்சியை வெட்கித் தலை குனியும்படி செய்து தோல்வியை உண்டாக்கியது. இப்பேருபகாரத்திற்குக் காரணமாயிருந்த ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்களைப் பொதுவாக எல்லா பிராமணரல்லாதாரும் சிறப்பாக ஆதிதிராவிடரும் முசல்மான்களும் கொண்டாடி மனமாற வாழ்த்துகின்றனர்.

* * *

இன்று காலை 10-மணிக்கு ஒரு பெருங் கூட்டம் பிராட்வேயிலுள்ள ஹாரிசன் அண்டு கம்பெனியாரின் கடையை மூடும்படி கேட்டனர். அவர்கள் மறுத்து போலீசுக்கு டெலிபோன் செய்தனர். போலீஸ் உதவி வருமுன்னர் அவர்களின் கடையிலுள்ள கண்ணாடி ஜன்னல்கள், பீரோக்கள் சாமான்கள் முதலியவைகளை தூள் தூளாக உடைத்து தெருவில் எறிந்தனர். சுமார் ரூ. 3000-க்கு மேல் நஷ்டமுண்டாகியிருக்கலாம். பக்கத்திலிருந்த பெரிய அச்சாபீசுகளாகிய ஹோ அண்டு கம்பெனியையும், ஆநந்த பிரசையும் சில காலிகள் கல்லெறிந்து தாக்க ஆரம்பித்தனர். இவ்வளவும் நடந்த பிறகு போலீசார் ஸ்தலத்திற்கு வந்து காவல் காத்து வருவதுடன் பல பேர்களைக் கைதுசெய்து மிருக்கின்றனர்.

* * *

மண்ணடியில் உள்ள பிராமணர் காப்பி கிளப்புகள் எல்லாம் இன்று காலை 4 மணிக்கே திறக்கப்பட்டு கப்பல் பிரயாணிகளுக்கு உணவு பலகாரங்கள் முதலியவற்றை சப்ளை செய்து வந்தனர். இதையறிந்த மண்ணடி மகமதியர்கள் எல்லாம் பார்ப்பனர் தங்களை ஏமாற்றிவிட்டதாக மனக்கொதிப்பு கொண்டு தங்கள் கடைகளை திறந்து வைத்துக்கொண்டு பார்ப்பனர்களை எல்லோரும் பகிஷ்கரிக்கும்படி தூண்டி வருகின்றனர்.

இந்து முஸ்லிம் கலகத்திற்கு சென்னையில் இப்பார்ப்பனரே தூபம் போட்டு விட்டனர். திருவல்லிக்கேணியில் பகிஷ்காரம் கூடாதென்ற கட்சியார் ஒரு பெரிய ஊர்வலம் நடத்திவருகின்றனர். இன்று மாலை இவர்களும் கடையடைப்பால் துன்பப் பட்டவர்களும் காங்கிரஸ் பார்ப்பனர்களின் சூட்சியை திருவல்லிக்கேணி கடற்கரையில் எடுத்துக் காட்டி கண்டிக்கப்போவதாக பலர் பேசிக்கொள்கின்றனர்,

பிராட்வேயில் குழப்பம்

இன்று ஆர்த்தல் நடத்த வேண்டுமென்று சொல்லிய தலைவர்கள் பலாத்காரம் செய்யக் கூடாதென்று ஏற்கனவே எச்சரிக்கை செய்திருந்த போதிலும் ஹார்த்தல் சமாதானமாக நடைபெறாது என நம்மில் பலர் அஞ்சியது கடைசியில் உண்மையாகவே வந்து முடிந்தது. ஹார்த்தல் வெற்றி கரமாக முடிவடையும் பொருட்டு ஆங்காங்கு சில துஷ்டர்களும் போக்கிரிகளும் முன்னதாக உற்சாகப் படுத்தப் பட்டிருந்தனர். இன்று பொழுது விடிந்தது முதல் இவர்கள் டிராம் வண்டிகளில் ஜனங்கள் போகவொட்டாமலும், டிராம் வண்டிகள் செல்லவொட்டாமலும், தெருக்களில் நின்று பெருங் கூச்சலிட்டுத் தடை செய்தார்கள். சூளை புரசவாக்கம் போன்ற இடங்களில் டிராம் கண்டக்டர்கள் கல்லெறி பட்டார்களென்றும், அவ்வண்டிகளில் ஏறிவந்த பிரயாணிகளிடமிருந்து கேள்விப்பட்டோம் பலர் தங்களுடையஉயிருக்குஆபத்துஏற்படக்கூடுமோஎன்று பயந்துதாங்களாகவே வண்டியைவிட்டுஇறங்கி ஓடவேண்டியதாயிருந்தது. சில பஸ் கண்டக்டர்கள் தெருக்களில் துணிந்து வந்தார்கள். அவர்களும் பின்னால் தங்களுடைய உயிருக்கு ஆபத்துவரக் கூடுமென்று பயந்து நின்று விட்டார்கள் மவுண்டு ரோட்டிலிருந்து போகும் பஸ் வண்டிகள் எவ்வித ஆபத்துகளுமின்றி சென்டிரல்ஸடேஷன் வரை ஓடிக்கொண்டிருந்தன. சைனு பஜாரில் ஒரு பஸ் வண்டி நிறைய ஆட்களை ஏற்றிக்கொண்டு நின்றுகொண்டிருந்தபோது காலிகள் வண்டிக்கு இருபுறங்களிலிருந்தும் கல்லெறிந்தார்கள். கற்கள் அதிகமாக விழவே அவ்வண்டியிலிருந்த பிரயாணிகள் இறங்கி ஆபத்தினின்றும் தப்பும் பொருட்டு நாலாபக்கங்களிலும் ஓடினார்கள். இச்சம்பவம் நமது நிருபர் நேரில் பார்த்த விஷயம். டிராம் வண்டிள் முக்கிய தெருக்களில் தாராளமாக ஓடிக்கொண்டிருந்தன தெருக்களிலுள்ள ஜனங்கள் காலித்தனம் செய்ய ஆரம்பித்ததினால் கடைசியாக டிராம் வண்டிகள் ஓட்டுவதை நிறுத்த வேண்டியதாயிற்று. டிராம் வண்டிகள் ஓடுகையில் வண்டிகளை தண்டவாளத்தை விட்டு விலகும் படி தண்டவாளத்தின்மீது கற்களை அடுக்கி வைத்தார்கள். அன்றியும் டிராம் கம்பிகளை அறுக்கவும் முயற்சித்தார்கள். புரசவாக்கத்துக்குப் போகும் டிராம் 'வண்டிகளைத் தடிகளாலும் கற்களாலும் தாக்கியதனால் அவைகளுக்குப் பலத்தசேதம் ஏற்பட்டிருக்கிறது. பிராட்வே சந்தில் குழப்பம் அதிகமாயிருந்தது. அங்கு ஏறக்குறைய 10,000 ஜனங்கள் கூடியிருந்தனர்.

மெஸர்ஸ் ஹாரிசன் கம்பனியும் ஆனந்தா பிரசுக்காரரும் ஹார்த்தால்காரருடைய விளம்பரத்தைக் கவனியாமல் தங்கள் கம்பெனிகளைத் திறந்து வைத்திருந்தனர். கலகக்காரர் அதைக் கண்டு கோபங்கொண்டு அந்த இரண்டு கம்பனிகளையும் தாக்கி பெரிதும் சேதம் விளைவித்து விட்டனர். கலக்காரர் ஹாரி கம்பனியில் நுழைந்து ஏறக்குறைய 4000 ரூ பெறுமான சாமான்களை நாசம் செய்து விட்டனர். அந்தக்கம்பனிக்கு முன்னால் தெருவெங்கும் ஹாரிசன் கம்பெனியிலிருந்து கலகக்காரர் வெளியில் எடுத்தெறிந்த பீர் பிராந்தி பாட்டில்கள் உடைந்து நிறைந்து கிடந்தன. ஹாரிசன் கம்பெனி மேல் மெத்தையில் வட்ட மேஜைகளில் அலங்காரமாய் வைக்கப்பட்டிருந்த பூச்செடி சட்டிகளையும் காலிகள் தூக்கி வெளியில் எறிந்து விட்டனர் நாலு பேரை போலீசார் கைது செய்து லாகாலேஜ் போலீஸ் ஸ்டேஷனுக்கு கொண்டுபோகையில் கலகக்காரர் செங்கற்கட்டிகளையும் கற்களையும் எடுத்துப் போலீஸ் ஸ்டேஷன் மீது எறிந்தனர். கூட்டம் அதிகரித்ததினால் போலிஸ் ஸ்டேஷனிலிருந்த சார்ஜண்டுகள் வெளியிற்பாய்ந்து கலகக்காரரைகலைத்து விடமுயற்சித்ததில் அவர்கள் மீதும் கல்லடி வீழ்ந்தது.

போலீசார் மீதும் கல்லெறிய போலீஸ் டிப்டி கமிஷனருக்கு கல்லடி பட்டது. அந்தச்சமயத்தில் போலீஸ் ஸ்டேஷனிலிருந்த சார்ஜெண்

(இதன் தொடர்ச்சி 12 ம் பக்கம் பார்க்க)



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு

ஈரோடு பிரபவ ஞு தை மீ 23 வ

எதிர்பார்த்தபடியே.

கமிஷன் பகிஷ்காரம் கூலிக்கு மாரடிப்பவர்களின் காலித்தனத்தில் முடிந்தது.

"காங்கிரஸ்" "தேசியம்" என்பவைகளின் புரட்டுகள் வெளியாகி, தலைவர்கள், தேசபக்தர்கள், என்கின்றவர்களின் சுயநலத்தையும் அயோக்கியத்தனங்களையும் பாமர மக்கள் அறிய நேர்ந்து விட்ட பிறகு வேறு வேஷத்தின் மூலம் வெளியாகலாம் என்று காத்திருந்த பல தலைவர்கள் சைமன் கமிஷன் பகிஷ்காரம் என்கின்ற ஒரு புதிய வேஷம் போட்டுக் கொண்டு வெளியில் தலைநீட்ட முயற்சித்து வந்ததைப்பற்றி பல முறை எழுதி விட்டு, கடைசியாக கமிஷன் பகிஷ்காரம் காலித்தனத்தில் முடியும் என்பதையும் எடுத்துக்காட்டியிருந்தோம். அது போலவே சென்னை மீட்டிங்குகளும் வேலை நிறுத்தங்களும் காலித்தனத்திலேயே முடிந்து விட்டது. நேற்று சென்னையில் நடந்த சம்பவங்களைப்பற்றி சென்னைப்பத்திரிகையில் உள்ள விஷயங்களை வேறு இடத்தில் பிரசுரித்திருக்கின்றோம். அதைப்பார்த்தால் ஆரம்பமுதல் முடிவுவரை காலித்தனத்திலேயே முடிந்திருப்பது யாவருக்கும் நன்றாய் விளங்கும். 'சில்லரைக்கடை வியாபாரிகளை தடிகொண்டு விரட்டி அடித்து மூடச்செய்தும், கடை அடைக்க ஒப்பாதவர்களின் கடைக்குள் நுழைந்து சாமான்களுக்கு சேதம் விளைவித்தும், சாமான்களை கொள்ளை அடித்தும், தொந்திரை செய்தும், வண்டியில் போய்க்கொண்டிருந்த வழிப்பிரயாணிகளை கல்லெறிந்தும், காரி உமிழ்ந்தும், துர்ப்பாஷைகளால் வைதும், வருத்தியும், மோட்டாரில் போன கனவான்களை அடித்துத் துரத்தியும், வண்டியை கொளுத்தியும், நியாயஸ்தலங்கள் மீது கற்களை எறிந்தும், பொது ஜனங்களுக்கு தொல்லைகளை விளைவித்திருப்பதுடன் பலருக்கு உயிர்ச்சேதமும் உண்டாக்கத்தக்க அளவு முயற்சி எடுத்து போலீஸ் அதிகாரிகள் காலிகளின் தொல்லையை அடக்கவேண்டியும், வந்திருப்பதாகவும் தெரியவருகிறது.

காங்கிரஸ் நாடகத்தில் மீதியான ரூபாய்களை காலிகளுக்கு கண்மூடி வாரி இறைத்து வெறியுண்டாக்கி பாமர மக்களின் மேல் ஏவி விடுவதன் மூலம் ஏற்பட்ட பலன்களே இச்சென்னைக்காலித் தனமாய் முடிந்தது என்பதை யாரும் உணராமலிருக்க முடியாது'

முகமதிய சமூகமும் ஆதி இந்து சமூகம் என்று சொல்லப்பட்ட தாழ்த்தப்பட்ட சமூகமும் இக்கமிஷன் பகிஷ்காரத்தில் ஒரு சிறிதும் கலந்து கொள்ளாமல் பகிஷ்காரத்திற்கு சம்மதமற்ற தங்கள் கருத்தையும் முதலில் இருந்தே காட்டி வந்திருக்கின்றார்கள். மற்றும் பொது மக்களில் பலரும் பகிஷ்காரத்தையும் வேலை நிறுத்தத்தையும் கண்டித்து வந்திருக்கின்றார்கள். எனவே பார்ப்பனக் கூட்டமும், படித்து விட்டு உத்தியோகத்திற்கு அலையும் ஒரு சிறு அல்லாதார் கூட்டமும், பிழைக்க வேறு வழியில்லாமல் அரசியலையே பிழைப்புக்கு மார்க்கமாய் வைத்துக்கொண்டிருக்கும் ஒரு சிறு வயிற்றுச் சோற்று தேசபக்த கூட்டமும், கூடிக்கொண்டு சர்க்காரையும் பாமர மக்களையும் ஏமாற்றுவதற்காக செய்த காரியம் தான் இந்தப்புரட்டு என்பதையும் அவ்வப்போது தெரிவித்தும் வந்திருக்கின்றோம்.

இத்தனை ரூபாய் செலவும் இவ்வாறு சுயநலமிகளுடையவும், காலிகளுடையவும், கூட்டுறவும் சூழ்ச்சியும் தந்திரமும் காலித்தனமும் ஒரு மனிதனையாவது ஒரு கடைக்காரனையாவது இவர்களது காரியத்தை சரி என்று ஒப்புக்கொள்ளச்செய்து தானாகவே வேலை நிறுத்தம் செய்யவோ கடை அடைக்கச் செய்யவோ முடியாமல் போய் விட்டது என்கின்ற விஷயம் இந்த வேலை நிறுத்தத் தோல்வியாலும் அளவுக்கு மீறிய காலித்தனம் செய்ய வேண்டி நேர்ந்ததாலும் நன்றாய் விளங்கிவிட்டது! நன்றாய் விளங்கி விட்டது!!

இதைப்போல் இதற்கு விரோதமாக எண்ணமுள்ளவர்களும் ஒரு சிறிதாவது முயற்சி எடுத்திருப்பார்களானால் இச்சுயநலமிகளும் காலிகளும் இருந்த இடம் தெரியாமல் ஓடிப்போயிருக்க முடியும். ஆனால் எவரும் முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை. ஒவ்வொருவரும் 'நமக்கென்ன' 'நமக்கென்ன' என்று கவலையீனமாகவே இருந்து விட்டார்கள். இம்மாதிரி குணம தான் நம் இந்திய நாட்டை அடிமையாக்கி ஆங்கில அரசாங்க முறையை அசுரத்தனமாக்கி தேசத்தையும் மக்களையும் காட்டிக்கொடுத்துவரும் துரோகிக்கூட்டங்களாகிய பார்ப்பனக் கூட்டத்தையும வயிறு வளர்ப்பு தேசியக் கூட்டத்தையும் வாழச்செய்து வருவதுடன பாமர மக்களையும் தொழிலாளர்களையும் ஏழைகளாக்கி கஞ்சிக்கு வழியில்லாமல் நாட்டை விட்டு கூலிக்கு ஓடச் செய்து வருகின்றது. எனினும் பாமர மக்களுக்கு இது சமயம் சற்று உணர்ச்சி ததும்பியிருப்பது மாத்திரம் நன்றாய்த் தெரிகின்றது. எப்படியெனில் பகிஷ்காரத்துக்கும் கடை அடைப்புக்கும் எதிரிடையாகவும் பகிஷ்காரப் புரட்டை வெளியாக்கவும் 'குடி அரசு' என்கின்ற ஒரே ஒரு பத்திரிகைதான் முனைந்து வேலை செய்தது. சுமார் ஒரு லக்ஷம் துண்டு பிரசுரமும் 5000 சுவர் விளம்பரமும் தான் வெளியாக்கப்பட்டது. இவைகளில் பகுதி சரிவர விநியோகிக்கப்பட்டிருக்காது என்றுகூட தெரிய வருகின்றது. 15 அல்லது 20 இடங்களில் தான் உபந்நியாசம் செய்திருக்கக் கூடும். இவைகளுக்கு ஏற்பட்ட செலவு 500 ரூபாய் கூட இருக்காது. சமீபகாலத்தில் ஆதி இந்து சகோதரர்களில் சிலரும் முகம்மதிய சகோதரர்களில் சிலரும் வெளிவந்து சற்று முயற்சித்தார்கள். ஆனால் அதையும் தேசியக் காலிகள் உபத்திரவித்தார்கள். எனவே காங்கிரசுப் பத்திரிகைகள் முழுதும், காங்கிரஸ்ஸ்தாபனங்கள் முழுவதும், அதில் சேர்ந்த ஆட்கள் முழுவதும், மற்றும் வக்கீல் அதிகாரமும், சட்ட மெம்பர் அதிகாரமும், பார்ப்பனமாணவர் கூட்டமும், திருட்டுத்தனமாய் பல பார்ப்பன அதிகாரிகளும் சேர்ந்து வேலை செய்தும் 5000, 6000 ரூபாய் செலவும் ஒவ்வொரு ஸ்தாபனத்திற்கும் பணம் அனுப்பச் செய்தும் பகிஷ்கார வேலை நிறுத்த யோக்கியதை இவ்வளவு தோல்வியிலும் காலித்தனத்திலும் முடிந்ததைப்பார்க்கும் போது பொது ஜனங்களும் பாமர ஜனங்களும் எவ்வளவோ விழிப்புடனும் சுய அறிவுடனும் இருக்கின்றார்கள் என்றே சொல்லவேண்டும்

இந்த முடிவினால் நமக்கு பெருத்த நன்மையோ தீமையோ ஒன்றும் ஏற்பட்டு விட்டதாகக் கருதி எதையும் இங்கு சொல்லவரவில்லை. தேசியத்தின் பெயரால் வாழும் சுயநலக்காரர்களின் சூழ்ச்சியை மக்கள் அறியத் தகுந்த நிலை ஏற்பட்டுவருகின்றது என்பதற்கு அறிகுறிகள் காண்கின்றன என்கின்ற சந்தோஷத்தையே தெரிவிக்க விரும்புகிறோம். தவிர நமது உண்மையான சுயமரியாதைக்கு நாம் செய்யவேண்டிய பகிஷ்காரங்களும் வேலை நிறுத்தங்களும், சத்தியாக்கிரகங்களும் நமது நாட்டில் அநேகம் இருக்கின்றன. அதை நடத்த சர்க்காரும் ஒப்பார்கள். ஏனென்றால் நமக்கு உண்மை சுயமரியாதை வந்து விட்டால் நாம் (இந்திய மக்கள்) எல்லோரும் ஒன்று சேர்ந்து விடுவோம். அப்போது இங்கு ஆங்கிலேயர்களின் ஆட்சி முறைக்கு சாவுமணி அடித்து விடும்—ஆதலால் அவர்கள் நமக்கு எவ்விதத்திலும் உதவ மாட்டார்கள்.

பின்னையோ பார்ப்பனர்களும் நமக்கு உதவாததோடு எதிரிகளாகவும் இருப்பார்கள். ஏனென்றால் நமது சுயமரியாதை என்பது பார்ப்பனீயம் சாவதில்தான் இருக்கின்றது. அப்பார்ப்பனீயம் ஒழிந்தால் பார்ப்பனர்கள் ஒன்று பிச்சை எடுக்கவேண்டும், அல்லது நம்மைப்போல் உடல் வேலை செய்து ஜீவிக்கவேண்டுமே யல்லாமல இம்மாதிரி மக்களை பிரித்துவைத்து ஏமாற்றிப் பிழைக்க முடியாது.

நிற்க நமது சுயமரியாதைக்கு மற்றொரு வகை எதிரிகள் யார் என்றால் இப்போது தேசியத்தின் பெயரால் வாழ்கின்ற வயிற்றுப்

வேலை நிறுத்தத்தினால் யாருக்கு லாபம்

வேலை நிருத்தத்தினால் யாருக்கு லாபம் என்று பார்ப்போமானால் பஹிஷ்காரப்புரட்டு பிரசாரக்கார பத்திரிகைகளுக்குத் தான் என்று சொல்ல வேண்டும். ஏனெனில் பகிஷ்காரத்தின் பேரைச் சொல்லிக் கொண்டு அந்தச் சாக்கில் பத்திரிகை ஆபீசை மூடி அன்றைய பத்திரிகையை மூடி விட்டார்கள் இதனால் ஒவ்வொரு பத்திரிகை ஆபீசுக்கும் ஸ்டாம்பும் கடிதமும் இங்கியும் மோட்டார் பவருமாக 100 ரூபா முதல் 400 ரூபா வரை லாபமுண்டாயிருக்கும் பத்திரிகை சந்தா தாரர்கள் இஞ்சிதின்ற குரங்கைப்போல் விழித்திருப்பார்கள்' எப்படியும் புரட்டுக்காரர்களுக்குத்தான் லாபம்.

பிழைப்பு தேச பக்தர்கள் என்பவர்கள். அவர்களும் நமது உண்மை சுயமரியாதைக்கு உதவி செய்ய முடியாதவர்கள்.

ஏனெனில் நமக்கு உண்மை சுயமரியாதை வந்து விட்டால் போலி தேசியத்திற்கு இந்த நாட்டில் வேலை இருக்காது. அதுசமயம், இப்பொழுது இந்த தேசியத்தின் பெயரால் பிழைத்துக் கொண்டிருக்கும் கூலி பக்தர்களுக்கு தேசிய பிழைப்பு கிடைக்காது, அவர்கள் ஒன்று பாடுபட்டுப் பிழைக்கவேண்டும் அல்லது கொள்ளைக்காரர்கள் திருடர்கள் முதலியவர்களுடன்சேர்ந்து வாழ வேண்டும். ஆகையால் நமது நாட்டு சுயமரியாதைக்கு மேற்கண்ட அரசாங்கமும், பார்ப்பனர்களும், தேசிய வாழ்வுக் காரர்களும் எதிரிகள் என்பதை நன்றாய் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

உண்மை சுயமரியாதைக்காக எங்கு நாம் பகிஷ்காரமும் வேலை நிறுத்தமும் சத்தியாக்கிரகமும் ஆரம்பித்து விடப்போகிறோமோ என்ற பயத்தாலேயே இந்தப்பார்ப்பனர்களும் தேசிய வாழ்வுக்காரர்களும் கூடி யோசித்த சூழ்ச்சியே இந்த கமிஷன் பகிஷ்காரம் வேலை நிறுத்தம் என்பவைகளுக்கு மற்றொரு காரணம் என்பதை உணரவேண்டுகின்றோம்,

ஆதலால் சூழ்ச்சிகளாலும் இந்த உபத்திரவங்களினாலெல்லாம் நாம் ஏமாறாமலும் நமது முயற்சியை தளரவிடாமலும் தைரியமாய் இருந்து நமது சுயமரியாதைக் கிளர்ச்சியை தொடர்ந்து செய்து கொண்டுபோக வேண்டும். என்பதே நமது விண்ணப்பம்.

அன்றியும் இச்சுயமரியாதைக்கு அனுகூலமாய் இருந்தால் எந்தக் கமிஷனையும் வரவேற்போம்; எந்த சாத்தானையும் வரவேற்போம். விரோதமாயிருந்தால் கடவுளையும் பகிஷ்கரிப்போம். தேசியத்தையும் குழிதோண்டிப் புதைப்போம் உயிரையும் துறக்க முந்துவோம் என்கின்ற துணிவு ஒவ்வொருவருக்கும ஏற்படவேண்டு மென்கின்ற கவலைதான் பகிஷ்காரப் புரட்டையும் வேலை நிறுத்த காலித்தனத்தையும் வெளியாக்க முயற்சி எடுத்துக கொள்ளச் செய்ததே ஒழிய வேறில்லை.

காலித்தனமும் வட்டி சம்பாதிக்கின்றது,

சென்னை கடற்கரையில் பார்ப்பனரல்லாதாரால் கூட்டப்பட்ட ஒரு கூட்டத்தில் கதர் இலாகா காரியதரிசி ஸ்ரீ எஸ்,ராமநாதன் அவர்கள் பகிஷ்காரப் புரட்டைப்பற்றி பேசிக்கொண்டிருக்கையில் காங்கிரசு வீரப்புலிகள் என்று சொல்லிக்கொள்ளும் பார்ப்பனர்கள திருட்டுத்தனமாக கூட்டத்தின் மத்தியில் இரண்டு செருப்புகளை வீசி எறிந்துவிட்டு ஓடிப்போய் விட்டார்கள் என்றும் அந்தச் செருபபுகள் ஏலம்போடப் பட்டன வென்றும் கேள்விப் பட்டோம். ஆனால் அடுத்த சில தினத்தில் அதே கடற்கரையில் பார்ப்பனர்களால் கூட்டப்பட்ட ஒரு கூட்டத்தில் பல பார்ப்பனரல்லாதார்களை கூலிக்குப் பிடித்துக் கொண்டு போயிருந்துங் கூட கல்லும் செருப்பும் பறந்ததோடு கலகமும் அடிதடியும் காயமும் எற்பட்டு விட்டதாம். காங்கிரசு காரர்கள் தாங்கள்தான் மிக புத்திசாலிகள் என்பதாக கருதி காலித்தனத்தை ஆரம்பித்து விடுகிறார்கள். இதனால் அந்த சமயம் வெற்றி கிடைத்தது போல் காணப்பட்டாலும் வட்டியுடன் திரும்பவும் அனுபவித்து விடுகின்றார்களேயொழிய இதுவரை ஒருஇடத்திலாவது தப்பித்துக்கொண்டதாகச்சொல்வதற்கேஇல்லை—

பஹிஷகார இயக்கப் பிரசாரத்திற்கு ஸ்ரீ சத்தியமூர்த்தி தலைவராகிவிட்டார்,ஸ்ரீ வரதராஜுலு வாலராகி விட்டார். மற்றபடி ஸ்ரீமான்கள் குழந்தை, ஒ. கந்தசாமி செட்டியார், பஷீர் அகமது முதலியவர்களுக்குள்ளாகவே தேசபக்தி அடங்கிவிட்டது. இவர்கள் போகும் கூட்டங்கள் முழுவதும் இந்த கதியையே அடைந்து வருகின்றன,

பிரசாரத்திற்கு என்று காங்கிரஸ் நாடகத்தில் மீதியான ரூபாயில் 5000, 6000 ரூபாய்களை எடுத்து வீசி எறிகின்றார்கள். இந்த ரூபாய்களுக்காக எப்போதும கூட்டங்கள் கூடிக்கொண்டே இருக்கின்றன. இது எங்குபோய் முடியும் என்பது மாத்திரம் விளங்கவில்லை.

ஸ்ரீமான் வரதராஜுலு பேச ஆரம்பித்தவுடன் கலகம் ஏற்பட்டதென்றும், அடிதடிகள் நடந்ததென்றும் பொது ஜனங்கள் அவரை பேசவிடாமல் உட்காரச் செய்துவிட்டாரர்கள் என்றும் பத்திரிகைகளில் காணப்படுகின்றன. பொது ஜனங்களால் இந்த யோக்கியதை பெற்ற ஸ்ரீ வரதராஜுலு அவர்கள்,ராமசாமி நாயக்கர் சர்க்கார் பிரசாரம் செய்கின்றார் என்று எழுதுகின்றார் பேசுகின்றார்.வாசகர்களைசுத்தமுட்டாள்கள்என்றும் எதையும்நம்பிவிடுவார்கள்என்றும்எண்ணிக்கொண்டு இம்மாதிரி தந்திரங்களைச்செய்கின்றார்.

அப்படியே நாயக்கர் சர்க்கார் பிரசாரம் செய்வதாக வைத்துக் கொண்டாலும், பார்ப்பன பிரசாரததைவிட சர்க்கார் பிரசாரம் எத்தனையோ மேலானதென்பதை இவரே பலதடவை உணர்ந்திருந்தும்-பேசியிருந்தும் இன்று மாத்திரம ஸ்ரீ வரதராஜுலுககுபார்ப்பனப் பிரசாரம் இவ்வளவு பயனளிககக் கூடியதாகி விட்டதின் இரகசியமென்ன?

அரசியல் புரட்டை வெளியாக்கும் பிரசாரம்.

ராயல் கமிஷன் என்பதின் பெயரால் சில சோம்பேறிகள் வயிறுவளர்ப்பதற்கு பாமர மக்களை எமாற்றி நடத்திவரும் புரட்டுகளையும் சூட்சிகளையும் வெளியாக்க திருவாளர் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் கொஞ்ச காலமாய் தமிழ்நாடு முழுவதும் பிரசாரம் செய்துவருவது யாவரும் அறிந்திருக்கலாம். இம்மாதம் 26உ ஸ்ரீமான் நாயக்கர் சென்னைக்கு வந்து பகிஷ்கார விஷயமாய் எதிரிகள் செய்யும் சூட்சிகளைப்பற்றி பல தலைவர்களிடம் நேரில் கலந்து பேசியும் பல துண்டுப் பிரசுரங்களைவழங்கச்செய்துவிட்டு மறுநாள 27உ கும்பகோணம் சென்று அங்கு 28உ மாலையில் ஒரு பொதுக்கூட்டத்தில் ராயல் கமிஷனும் சுயமரியாதையும் என்பதைப்பற்றி 3 மணிநேரம் பேசிவிட்டு மறுநாள் அதாவது 29உகாலையில் கூத்தூர் குருக்கத்தியில் நடந்தஒருசுயமரியாதைதிருமணத்திற்கு விஜயம் செய்ததுடன் அன்று மாலையில் பெரிய கூட்டத்தில் பல உபசாரப் பத்திரங்கள் பெற்று சுயமரியாதை என்பதைப் பற்றி 3-½ மணி நேரம் நீண்ட பிரசங்கம செய்துவிட்டு மறுநாள் காலையில் 30-தேதி தஞ்சைக்கு வந்து அங்கு மணிக்கூண்டு மைதானத்தில் பார்ப்பனர்களும் பகிஷ்காரப் புரட்டும் என்று சுமார் 2-30 மணி நேரம் பெருத்த கூட்டத்தினிடையில் பேசி விட்டு நேரே திருச்சிக்கு வந்து அங்கு சில பிரமுகர்களிடம கலந்து பார்ப்பனப் புரட்டிலிருந்தும் அவர்களது அடிமைகளான அரசியல் பிழைப்புக்காரர்களிடமிருந்தும் பாமர மக்களை தப்புவிக்கத்தகுந்த முயற்சி எடுத்துக் கொள்ளத் தக்க எற்பாடுகள் செய்து விட்டு நேரே ஈரோடு வந்து மறுநாள் தாராபுரம் தாலூகா கொடுவாய் என்கின்ற ஊரில் கூடும் செங்குந்த மகாஜன சங்க மகாநாட்டுக்கும் கதர் காஷி திறப்புக்குமாக சென்று 2-உ இரவு ஈரோடு வந்து சேர்ந்தார்.

சென்னையில் காலிகளுக்கும் பார்ப்பன தாக்ஷண்ணியத்திற்கும் கட்டுப்பட்ட சிலர் ஏமாந்த போதிலும் வெளி இடங்களில் 100-க்கு 90 பேர்களும் 90 இடங்களும் இப்புரட்டுகளை நன்றாய் உணர்ந்து விட்டது.

ஓர் நிருபர்

ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்கார் தலைமையும், இரங்கசாமி அய்யங்கார் காரியதரிசித் தன்மையும் ஒழிந்த பிறகு ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி அய்யரின் தலைமையும் வரதராஜுலுவின் காரியதரிசித் தன்மையும் இவ்வருஷம் முழுவதும் தாண்டவமாடக் கூடும். இனி இவர் தலைமையில் அவர் பிரசங்கமும் அவர் தலைமையில் இவர் பிரசங்கமும் மாறி மாறி நடந்ததாக பத்திரிகை கலங்கள் நிறையக்கூடும். ஆனாலும் நம்புவதற்குத்தான் இனி தமிழ்நாட்டில் ஆட்கள் கிடையாது என்பதும் அவர்களுக்கே தெரிந்துவிட்டது.

ஆனாலும் ஜனங்களின் முட்டாள்தனத்தில் அவர்களுக்கு இன்னமும் நம்பிக்கை இருக்கின்றது. பொது ஜனங்கள் சீக்கிரம் இவர்களுக்கு புத்தி கற்பிப்பார்களாக,

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

டுகளில்கல்லெறியால்காயப்படாதவர்ஒருஆள்கூட இல்லை யென்று சொல்லப்படுகிறது. கலகக்காரர் கூட்டத்தின் மத்தியில் சில கருப்பு கொடிகள் தெரிந்தன. ஹர்த்தால் இயக்கத்தலைவர்கள் சிலர் அந்தக் கூட்டத்தாரை தூண்டி விட்டுக் கொண்டிருந்ததாகக் காணப்பட்டது. சார்ஜண்டுகள்கூட்டத்தைக் கலைத்து குழப்பத்தை அடக்க தங்களாலான முயற்சி செய்தனர்.

சட்ட காலேஜிலிருந்து பச்சையப்பன் காலேஜ் வரை ரோட்டில் எங்கும் கற்கள் எறியப் பட்டன இதைக்கண்டு காலையில் திறந்து வைத்திருந்த கடைக்காரர்களும் தங்களுடைய கடைகள் எங்கே கொள்ளையடிக்கப்பட்டு விடுமோ வென்று பயந்து மூட நேர்ந்தது நமது நிருபர் திரும்பி வருகையில் அந்த விடத்தில் பிரதம பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட் நின்று கொண்டிருந்ததைப் பார்த்தார்.

சைனு பஜார், பிராட்வே ஆகிய விடங்களிலுள்ள கடைகளனைத்தும் மூடப்பட்டிருக்கின்றன. மண்ணடி வண்ணாரப்பேட்டை ஆகியவிடங்களில் சில கடைகள் மட்டும் மூடப்பட்டிருந்தன இதைத் தவிர சென்னையில் மற்றப்பாகங்களில் கடைகள் வழக்கம்போல் திறக்கப்பட்டிருந்தன வென்றும் காங்கிரஸ் தொண்டர்கள் தெருத்தெருவாகச் சென்று கடைகளை மூடும்படி அவர்களை வேண்டிக் கொண்டார்கள் என்றும் சொல்படுகிறது. சிலவிடங்களில் அவர்கள் கடைக்காரர்களால் பெரிதும் அவமதிக்கப் பட்டனர்,

திராவிடன் நிருபர்,

ஐக்கோர்ட்டில்

10. 30 மணிக்கு நான் ஐக்கோர்ட்டுக்குச் சென்றேன். கணக்கற்ற பிராமண வக்கீல்கள் அங்குக்கூடியிருக்கக் கண்டேன். இந்த மாதிரி பிராமண வக்கீல்கள் எப்பொழுதும் கூட்டமாய் வந்தது இல்லை. ஏனெனின் எப்பொழுதும் வக்கீல்கள் 11 மணிக்குத்தான் கோர்ட்டுக்கு வருவது. 11 மணிக்கு கோர்ட் நடவடிக்கை எப்போதும் போல்துவங்கியது. 11. 30 மணிக்குக் கோர்ட்டுக்குள் பல காலிகள் பெருங்கூட்டம் உள் நுழைந்தது. இதனால் கோர்ட்டு மண்டபங்களின் கதவுகள் மூடப்பட்டன. கோர்ட்டு நடவடக்கைகள் எல்லாம் 12 மணிக்கு ஒரு முடிவக்கு வந்து விட்டது. நீதிபதிகள வாலர், பீஸ்லி, ஐக்கோர்ட் ரிஜிஸ்ட்டரார் சீப் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டுடன் 12 15 க்குப் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன் எல்லா ஜட்ஜுகளும் தம் கோர்ட்டு மண்டபங்களை விட்டு விட்டு சத்தம் அறைக்குச் சென்று விட்டார்கள் நீதிபதிகள் வாலர், பீஸ்லி, வாலர் சீப்பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டுடன் பேசிக் கொண்டிருக்கும்போது அவர்கள் மேல் கல் எறியப்பட்டன வக்கீல்சங்கமமேல் மிகுந்தகற்கள் எறியப்பட்டன. பகிஷ்காரம் வேண்டுமென்றபல வக்கீல்கள் கோர்ட்டுக்குப்போவது ஜனங்களுக்கு பெருத்த ஆத்திரத்தை ஊட்டியது. அகில இந்திய காங்கிரஸ் வாலணடியர்களின் தலைவராய சஞ்சீவி காமத்து தம் வக்கீல் சவுனுடன் நடந்து கொண்டிருக்கும்போது கூட்டம் "ஏ! பாப்பார வக்கீல்களே எங்கள் வயிறளிய நீங்கள் உள்ளே இருந்து சம்பாதித்துக் கொண்டிருக்கின்றீர்களே வெளியே வாருங்கள்" என்று கூக்குரல் இட்டார்கள். இதற்குள் போலீஸ் கமீஷனர் வந்துவிட்டார். இவர்மேலும் கற்கள் எறியப்பட்டன. கூட்டம் இன்னும் கற்கள் எறிந்துகொண்டே யிருந்தது. பகல் 1 மணிக்கு போலீசார் வெற்று வெடி வெடித்தார்கள். அதைப் பார்த்து கூட்டம் சிரித்தது, மணிக்கு அரை டசன் சார்ஜெண்டுகள் குதிரைமேல் சென்று கூட்டத்தைத் தாக்கச் சென்றார்கள். ஆனால் அவர்கள்மேலும்கற்கள் எறியப்பட்டன. பகல் $1\frac{1}{2}$ மணிக்கு மற்றொரு வெற்று வெடி வெடிக்கப்பட்டது. அதனாலும் ஒரு பயனும விளையவில்லை,

மோட்டார் எரிக்கப்பட்டது.

அரசாங்க சொலிசிட்டர்மிஸ்டர் மோர்சிஹைகோர்ட்டை விட்டு தம் மோட்டாரில் வடகிழக்குவழியாய் வெளியில் வந்தார். அவரை எல்லாப் பக்கங்களிலும் கூட்டம் வளைத்துக் கொண்டது. அவர் இப்பக்கமும் அப்பக்கமும் போக முடியவில்லை. டிரைவர் பின்னால் ஓட்டியபொழுது இருவர்பேரில் மோட்டார் வண்டி ஏறிவிட்டது.

இது ஜனங்களுக்குக் கோபத்தை உண்டாக்கிவிட்டது. மோர்சியை ஜனங்கள் தாக்கினார்கள். அவர் காரை விட்டுவிட்டு ஓடிவிட்டார். டிரைவர் தாக்கப்பட்டார். மோட்டார் சாம்பலாக்கப்பட்டது.

* * *

15 வது செங்குந்த மகாநாடு

இம்மாதம் 1, 2, உகளில் கொடுவாயில் செங்குந்த மகாஜன சங்கத்தைச் சேர்ந்த 15 வது மகாநாடு திருக்கோவலூர் ஸ்ரீமான் வடிவேலுமுதலியாரவர்கள் அக்கிராசனத்தில் சிறப்புடன் நடை பெற்றது. ஆச்சமூக பிரமுகர்கள் எல்லோரும் விஜயம் செய்திருந்தார்கள் அன்றியும கதர் காட்சியும்நடை பெற்றது. ஸ்ரீமான்கள் திருக்கோவலூர் ம. ரா. குமாரசாமி பிள்ளையவர்களும் கதர் இலாகா காரியதரிசி எஸ்.ராமநாதன் அவர்களும் ஈ வெ ராமசாமி நாயககரவர்களும் திருச்சி ம.வை.துரைசாமி உடையார் அவர்களும் மற்றும் பலரும் விஜயம் செய்திருந்தார்கள். மகாநாடு முதல் நாள் சுமார் 4 மணிக்கு கூட்டப்பட்டது. அக்கிராசனர் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டதும் வரவேற்புத்தலைவர் ஸ்ரீமான் சு. ஆறுமுக முதலியார் அவர்களால் வரவேற்பு உபந்நியாசம் செய்யப்பட்டதுடன் அக்கிராசனர் அக்கிராசனத்திலமர்ந்தகும் சங்கத்தலைவரால் உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்கபபட்டது. அக்கிராசனர் முன்னுரைக்குப் பின்னர் காரியதரிசி ஸ்ரீமான் பழனியப்ப முதலியாரவர்களால் அறிக்கைப் பத்திரம் படிக்கப்பட்டது. மகாசபைக்கு கொடுவாய் செங்குந்த வாலிப சங்கத்தார் ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்தார்கள். திருவாளர் ஈ வெ ராமசாமி நாயக்கர், கதர் காட்சி திறந்து வைக்கப்பட்டபின் "சுயமரியாதை என்பதைப் பற்றி நீண்ட உபந்நியாசம செய்தார்.

மறுநாள் ஸ்ரீஎஸ்.ராமநாதன் அவர்கள் 'சமூக சீர்திருத்தமே தேசிய விடுதலைக்கு முதற்படியாகும்' என்பது பற்றி ஒரு அரிய உபந்நியாசம் செய்தார். பிறகு,

ஸ்ரீ ம ரா குமாரசாமி பிள்ளையவர்கள் "நம் நாடு" என்பது பற்றி உபந்நியாசம் செய்தார். பிறகு

திருவாளர் வி தங்கவேலு முதலியார் பி ஏ அவர்கள் தன்மதிப்பு என்பது பற்றி உபந்நியாசம் செய்தார் பிறகுஸ்ரீமான் லக்ஷ்மண முதலியார் அவர்கள் நமது சங்கமும் சமூகமும் என்பது பற்றி உபந்யாசம் செய்தார் சாப்பாட்டுக்காக மகாநாடு கலைந்து 3 மணிக்கு மறுபடியும் கூடி பல தீர்மானங்கள் செய்து இரவு மகாநாடு இனிது நிறைவேறிற்று.

நிருபர்,

தூத்துக்குடி ஆதித்திராவிட ஐக்கிய சங்கத்தில் ராயல்கமிஷனுக்கு ஆதரவு

31-1-28 தூத்துக்குடி ஆதித்திராவிட ஐக்கிய சங்கத்தில் கனம் டி. எஸ். ஜேக்கப் அவர்களின தலைமையின்கீழ் ஓர் மாபெருங் கூட்டம் கூட்டப்பெற்றது.

தலைவரின் முகவுரைக்குப் பின் கனம் டி. எம். லாசர்ஸ்போ. இ பால்வண்ணம், எம் பி பலவேசப், ஏ.ஆர்.ஆரோக்கியசாமி முதலியவர்கள் ராயல் கமிஷனின் பகிஷ்கார விஷயமாக காங்கிரஸ் சுயராஜ்யக் கக்ஷியினராகிய பார்ப்பனர்களின் சூழ்ச்சிகளையும் குடியரசு திராவிடன் வாயிலாக வந்த வியாசங்களையும் வாசித்துக்காட்ட, காங்கிரஸ் சூழ்ச்சிகளில் அகப்படாமல் யாட்சிமை தங்கிய ராயல் கமிஷனை சென்னை ஆதித்திராவிட சங்கத்தின் தீர்மானப் பிரகாரம் ஆதரிக்க வேண்டுமென்று தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

கோவில்கள் கண்ணுக்கு அசங்கியமாய் தெரிகின்றன

ருஷியா தேசத்தில் உள்ள கிரீக் கத்தோலிக் மதத்தைச் சேர்ந்த மாதா கோவில்கள் என்னும் கிருஸ்துவக்கோவில்கள் அந்நாட்டு அரசாங்கத்தாரின் கண்களுக்கு அசங்கியமாய் தெரிகின்றன என்று சொல்லி இடிக்கப்பட்டு வருகின்றன.

ஆப்பானிஸ்தானத்து அமீர் அரசர், முட்டாள் புரோகிதர்களை ஒழித்து விடவேண்டும் என்று சொல்லுகிறார். எனவே கோவில்களின் முட்டாள் தனங்களையும் புரோகிதர்களின் புரட்டுகளையும் கிருஸ்தவ அரசாங்கமும மகமதிய அரசாங்கமும் உணர்ந்து கொண்டு இடித்தெரிவதும் ஒழித்துத் தள்ளுவதுமான வேலையில் முனைந்து நிற்கின்றன.

நமது பாழும் மதமோ இதைப்பற்றி பேசினால் பாவம் என்கின்றது. மற்ற ராஜ்யங்கள் சுவாதீனம் பெற்றிருப்பதற்கும் நமது ராஜ்யம் என்பது அடிமைப் பட்டு கிடப்பதற்கும் காரணம் என்ன என்பதைப்பற்றி ஜோசியம் கேட்கவேண்டுமா.

கோர்ட்டுகள்.

ஸ்மால் கோர்ட் ஜட்ஜ்கள் 11-45 வரைக்கும் வேலை செய்துகொண்டிருந்தார்கள். சிட்டி சிவில் கோர்ட் ஜட்ஜ் பால் அப்பாசாமி பகல் 2 மணி வரைக்கும் வேலை நடத்திக்கொண்டிருந்தார். எங்கும் கூச்சலும் குழப்பமுமாயிருந்தது.

ஐக்கோர்ட்டில் கலகம்.

வக்கீல் சங்கத்தார் மேல் கல்.

இன்று பகல் 12 மணிக்கு ஐக்கோர்ட்டு நீதிபதிகள் எழுந்து விட்டார்கள். ஜஸ்டிஸ் குமாரசாமி சாஸ்திரியும், ஜஸ்டிஸ் ஜாக்ஸனும் கோர்ட்டு நடத்திக் கொண்டு வருகின்றார்கள். ஆகாயத்தில் சோல்ஜர்களால்வெடிவெடிக்கப்பட்டன. கூட்டம்ஹைக்கோர்ட்டிலும் வக்கீல் சங்கத்தார்மேலும் கல் எறிந்தது, எந்த நிலையிலும் கூட்டம் சுடப்படலாம்

ஐகோர்ட்டுக்கு முன் கலகக்காரர்மீது போலீசார் சுட்டதில் ஒருவன் கொல்லப்பட்டான். நாலு அல்லது ஐந்து பேர் காயம்பட்டனர். அ. பிரஸ்.

8 பக்கத் தொடர்ச்சி

இம்மாதிரியான மூட வழக்கங்கள் நமது தேசத்தில் இருக்கும் வரை நமக்கு விடுதலையேது? கன்னிமேயோ அவர்களை குறைகூற உரிமையேது? இது தானா குரு பக்தி? கொடுமை! கொடுமை.!!

லோக குரு.

குலகுருவைப்பற்றி இன்னும் சொல்ல வேண்டுவதென்றால் குடிஅரசு இடந்தராது. இத்துடன் விட்டு ஜெகத்குருவைப் பற்றி யோசிப்போம். சங்கராச்சாரியார் என்றவர்களைத்தான் நாம் இப்போது ஜெகத்குரு அல்லது லோகக்குரு வெல்கிறோம். லோக குருவென்றால் சர்வ கண்டங்களிலுமுள்ள சர்வ மதஸ்தர்களுக்கும் குருவாயிருக்க வேண்டும். ஆனால் இப்போது அப்படியில்லை. பல கண்டங்களில் ஒன்றா யுள்ள ஆசியாகண்டத்தில், பல மதஸ்தர்களில் ஒன்றாகிய ஹிந்துக்களில் பல ஜாதிகளில் ஒன்றாகிய பிராமண ஜாதியில், பல உட்பிரிவுகளிலுள்ள ஸ்மார்த்தப்பிராமணர்களுக்குத்தான் குருவாயிருக்கிறார். பெயருக்கும நிலைமைக்கும், பார்த்தால் சமுத்திரத்தில் ஒரு துளியை ஒப்பிடலாம். இப்படி சுமார் இருநூறு கோடி ஜனத்தொகையுள்ள உலகத்தில் சில ஆயிரக்கணக்குள்ள ஸ்மார்த்த பிராமணரின் குருவுக்கு ஜெகத்குரு என்ற எப்படி பெயர்வந்ததென்பதை யோசிக்கும்போது முருகக் கடவுள் ஔவைபிராட்டியிடம் 'பெரியது' கேட்கும்போது பிராட்டி பெரிது பெரிது 'புவனம் பெரிது' என்று ஆரம்பித்து 'உமையவன் இறைவருள்ளத்தடக்கம்' இறைவர் 'தொண்டருள்ளடக்கம்' ஆகவே தொண்டர் தம் பெருமை 'பெரிது' என்று ஒரு நீண்ட கதை சொல்லியபடி இந்த நாட்டில் அரசியல் சமூகவியல் முதலிய எல்லா இயல்களுக்கும் ஸ்மார்த்த பிராமணர்களே முன்னணியில் நிற்பதால் அவர்களுக்குள் உலகம் அடங்குகிறதென்று எண்ணி அவர்களுக்குக் குருவாகிய சங்கராச்சாரியர் லோக குருவென்றுதீர்மானித்திருக்லாம். அல்லது அவருக்கு தினப்படி நூற்றுக்கணக்கான ரூபாய்கள் வேண்டியிருக்கிறது. இதை சிஷ்யர்களாகிய சிறு தொகையினர் கொடுத்து வரமுடியாமல் அவர்களின் படிப்பு, உத்தியோகம் பதவி இவைகளின் செல்வாக்கிலிருந்து பல சுய நலங்களை எதிர்பார்த்து நிற்கும் பணக்காரர்களையும், மடாதிபதிகளையும் ஜமீன்தாரர்களையும், சிற்றரசர்களையும் ஏமாற்றி பணம் பறிப்பதற்காக ஏற்பட்ட சூழ்ச்சியேயாகும். இன்றைக்கும் நாம் தினப்படி பார்த்து வருகிற தென்ன? மகாசந்நிதானம் வருவதாக உத்தியோகஸ்தாகள், வக்கீல்கள் பிரபுக்களிடம் போகவேண்டியது தான் பாக்கி ரூபாய்கள் கேட்பின் வந்தாச்சுது. சுவாமிகளை மேளவாத்யம், ஆனை, குதிரை சகிதம். அழைத்தாச்சுது. சரி சுவாமிக்கு பூஜாகாலம போஜனகாலமாச்சுது, நீங்கள் போய் சாயங்காலம வாலாமென்று பிரபுக்களைக் கலீத்தாக் கொடுத்தாய்விட்டது. இதுமட்டும் தான் நமக்கு லோககுரு சொந்தம். என்னே மடமை! மடமை!!

ஒரு சம்பவம்.

சென்ற மே மாதம் நானும் சில நண்பர்களும் திருக்குற்றாலம் அருவிஸ்நானத்திற்குப் போயிருந்தபோது பாபநாசம் போய் ஸ்நானம் செய்து வாலாமென்று போயிருந்தோம். அப்போது ஸ்ரீ சங்கராச்சாரியார் அவ்விடம் விஜயம் செய்திருந்தனர். சுமார் 3 மாதம் போல் அங்கேயே இருந்தார். அவர் இருந்த இடம் கோவிலுக்கு தென்புரம் உள்ள மண்டபம். வடபுரம் மண்டபங்களில் வண்டி, யானை, குதிரை, மாடு இவைகள். கோவில் முன்மண்டபங்களில் வெகு தூரத்திலிருந்து பிள்ளை குட்டிகள் சகிதம் வந்திருந்த சிஷ்யர்களாகிய பிராமணர்கள். கோவில் மண்டபங்களில் தான் பகலிலும் இரவிலும் படுக்கை. அங்கு குழந்தைகள் மலபாதைஜலபாதை பெரியவர்கள் வெற்றிலை பாக்கு எச்சில் பொடிபோட்டு சிந்திய எச்சில் இவைகள் இல்லாத இடமில்லை. சுவாமி கோவிலுக்கு சுமார் 20 அடிக்குள் குளிக்கும் துறை. இதன் மத்தியில் தென்வடலாக ஒரு பாதை. இந்த இடத்திலும் கோவிலுக்கு சுற்றுப்பக்கங்களிலும் பெரியவர்கள் மலபாதை ஜலபாதை செய்து கால் வைப்பதற்கிடமில்லாமல் செய்துவிட்டார்கள். நாங்கள் பாப நாசம் போய் பாபம் சம்பாதிக்காமலிருக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு அதை விட்டு 2 மைல் தெற்கே மேலேயுள்ள கல்யாண தீர்த்தத்திற்குப் போய் ஸ்நானம் செய்து விட்டு உடனே குற்றாலத்திற்குப் போய் விட்டோம். இதைப்பற்றி 'குடி அரசில்' கூட மகாசன்னிதானத்துக்கு திருக்கக்கூசு கோவிலுக்குட் புறமே கட்டியிருப்பதாக ஒரு நிருபர் எழுதியிருந்தது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

இதுதானா நல்ல வழி காட்டுகிறது?

ஒரு பையனுக்கு ஹரி ஓம் நன்றாக என்று நெடுங்கணக்கு (அரிச்சுவடி) சொல்லிக்கொடுத்தவரை ஆயுள் உள்ளளவும் வித்யா குருவென்று மதித்து நடந்து வருகிறோம். நமக்கு பிறவி நோயைத் தீர்த்து நல் வழிக்கு அழைத்துச் செல்வதாகச் சொல்கிற ஞான குரு எப்படியிருக்கவேண்டும்? ஒரு சமயம் சங்கராச்சாரியாவர்களுக்கு கடவுள் இல்லை யென்றோ அல்லது கடவுளை விட தான் மேம்பட்டவரென்றோ எண்ணமிருக்கலாம். ஆனால் கோவிலில்தான கடவுள் இருக்கிறாரென்று நினைத்துக்கொண்டிருக்கிற தாழ்ந்த நிலைமையிலுள்ளவர்களை மேலே கொண்டுவருபவர்கள் தாங்கள் முதலாவது தெய்வ பக்தி, ஆசார பக்தி, குரு பக்தி இருப்பதாக் காட்டவேண்டாமா? மேலே கண்ட இவர்கள் நடத்தையால் எவனாவது கோவிலென்றும், கடவுளென்றும் எண்ண இடமிருக்கிறதா? இப்படிப்பட்ட ஒழுங்கீனத்தை யாராவது கண்டித்தால் நாஸ்திகன் பிராமண துவேஷி, குருத்துரோகி, மதத்துரோகியென்று சொன்னால் யாராவது ஒப்புக்கொள்ளுவார்களா? மற்றொரு விஷயம்:- சங்கராச்சாரியார் அவர்களுடன் வந்திருந்த பல பிராமணரல்லாத ஆட்கள் பசியுடன் உட்கார்ந்திருந்ததைப் பார்த்து "உங்களுக்கு சாப்பாடு சுவாமிகள் அடிகையிலா" என்று கேட்டோம். அவர்கள் சொன்னதாவது:—

தங்களுக்கு அரிசி பருப்புக் கொடுத்து விடுவதாயும் அதை தங்களுக்கு ஒழிந்த வேளையில் சமைத்து சாப்பிடுவதாயும் இந்தசாமியின் அடிசைச்சாப்பாடு தாங்கள்பார்த்ததேயில்லை யென்றும் பிராமணர்களுக்குப் போட்ட மிச்சம் இருந்தால் அதை குதிரை, யானை, மாடுகளுக்கு வைப்பதே தவிர பிராமணரல்லாதாருக்கு கொடுக்கிறதில்லை யென்றும் அப்படிக் கொடுப்பது பாவ மென்று சொல்கிறார்களென்றும் சொன்னார்கள். இதைக்கேட்ட மாத்திரத்தில் எங்களுக்கு எப்படி வயிறு பற்றி எரிந்தது என்பது இதில் எழுதக்கூடியதல்ல. இக்கொடுமையை யாருடன் சொல்கிறது? "பாத்திர மறிந்து பிச்சையிடு" என்று சொல்லப்படும் முதுமொழிக்கு விரோதமாக வாரிக்கொடுத்த பிரபுக்களிடமா! அல்லது கொஞ்சமும் சுயமதிப்பில்லாதவர்களும் நல்வழியில் செலவிடத் தெரியாதவர்களுமாகியவர்களுக்கு ஏராளமாகத் திரவியத்தைக் கொடுத்த கடவுளிடமா? சொல்லுவது.

ஆடம்பரம் எதற்கு?

மகா ராஜாக்களுக்கும் சக்ரவர்த்திகளுக்கும்தான் ரத, கஜ, துரக, பதாதிகள் என்னப்பட்ட சதுர்வித படைகள் இருப்பதாகப் பார்த்திருக்கிறோம். அது அவர்களுக்கு அவசியமுமாகும். முற்றத் துறந்த சன்யாசிகளுக்கு, இவைகள் எதற்காக? மகாராஜாவாக எல்லா போகங்களையும் அனுபவித்துக் கொண்டிருந்த ஜனகர், விஸ்வாமித்திரர்கூட சன்யாசம் வாங்கும்போது, யாவுந் துறந்திருக்க, சன்யாசி ஆச்சிரமம் என்று பெயர் வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு ராஜ போகங்கள் எதற்காக? ஒரு சில இந்து மதஸ்தர்களை பயப்படுத்த வருஷம் லக்ஷம் ரூபாய் சிலவில் படைகள் வேணுமென்றால் எத்தனையோ ஜனங்களை பயப்படுத்திக்கொண்டு எவ்வளவோ வல்லரசுகளை எதிர்த்து நிற்கும் பிரிட்டிஷார் வருஷம் அறுபதுகோடி ராணுவச் செலவு செய்வது அதிகமென்று சொல்வதற்கில்லை.

நமக்கு சுயமரியாதை வேணுமா வேண்டாமா?

என்று யாராவது கேட்டால், வேணும் என்றுதான் சொல்வோம். அதற்கு நாம் முதலாவது புரோகித வைதீகக் கொடுமையை ஒழிக்க வேண்டும். நம்முடைய ஜோலிக்கு இன்னொருவரை தேடக்கூடாது. இங்கிருந்து காசுக்குப் போய் திதி கொடுத்தும், நூறுபேருக்கு பூரிதானம் கொடுத்தும், கயாவில் விஷ்ணு பாதத்தில் பிண்டம் போட்டும், பிதுர்க்கள் மோக்ஷமடையவில்லையென்று நினைத்து கயாவாளிகள் என்ற ஒரு கூட்டம் பஞ்சாப் உருமாலை கட்டிக் கொண்டு கெய்சர் சக்ரவர்த்திபோல் மீசையும் தாடியும் வைத்துக்கொண்டு நெற்றியில் ஒரு ரூபாய் அகலம் குங்குமப் பொட்டு வைத்துக்கொண்டு குடிகாரனின கண்ணைப் போல் சிவந்த பார்வையுமுடையவர்கள் தங்களுடைய தாசி வீடுகூட ஒரு சிறிய அரண்மனைபோல் கட்டிவைத்துச் சுகித்து வருவ

றவர்கள் பல்லக்கில் வந்து வடவால விருக்ஷத்தில் பிண்டம் போட்டு அவர்கள் பிடி குடித்துக்கொண்டிருக்கும் வாயால் பிதுர்க்கள் மோட்சம் அடைந்தார்கள் என்று சொன்னாலல்லாமல் மோட்சமில்லையென்று நினைத்து, வக்கீலிடம் பீசு பேசுவதுபோல 50 ரூபாயிக்குக் குறையாமல் நூற்றுக் கணக்காய் கொட்டி காலைப்பிடிக்கிற மூட வழக்கம் ஒழிய வேண்டும். நம்ம பிதுர்க்களுக்கு புரோகிதர் வயிறு மூலமாய் தபாலில் அனுப்புகிற திதி, சோதானம், பூதானம் அழிய வேண்டும். கோவிலிலிருக்கும் கல் சாமிக்கும், நமக்கும் மத்தியில் அந்து ஏற்படுத்தி நீ இங்கே வரப்படாது, பிரசாதம் கையில் வாங்கப் படாது, விழுந்து கும்பிடப் படாது என்று இழிவுபடுத்தியும், இதுதான் சாமி, இவர்தான் பூசை செய்பவர், இவர்தான் மொழி பெயர்ப்பவர், அவர் செய்கிற அர்ச்சனைதான் சாமிக்கு பிரீதி, நம்ம பொங்கல் பழம்தான் சாமிக்கு ஆகாரம் என்று நினைத்துக்கொண்டிருக்கிற அறியாமை நீங்கவேண்டும். இந்தத் தீர்த்தத்தில் குளித்தால் பிரம லோகம் என்று சொல்லிப் பணம் வாங்கிக்கொண்டு நாற்றத் தண்ணீரில் விழுந்து கோவு சம்பாதிக்கிற மூடத்தன்மை போக வேண்டும். வயிர மாலைக்கும் முத்துமாலைக்கும், ஆனை, குதிரை, மாடுகளுக்கும் ஒரு நேரமெல்லாம் காதடைத்துப் போகும்படியாக சேகண்டி, தத்தாரி, வாத்தியங்களுக்குப் படந்து ரூபாய் பவுன் அர்ச்சனை செய்கிற அடிமைப்புத்தி தொலையவேண்டும். சாமியார் பெயர் வெகு நீளமாயிருப்பதாலேயே எல்லாம்தெரிந்த பெரிய சாமியாரென்று நினைக்கிற அருத்தமற்ற எண்ணம் தொலைய வேண்டும்.

உண்மையான குரு யார்?

நமக்கு உண்மையான குருமார்கள் எப்படியிருக்க வேண்டும்? எல்லாரிடமும் பக்ஷமாயும், அன்பாயும், தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்பவராயும், காம க்ரோதாதிகளிலிருந்து விடுபட்டவராயும், சத்திய சீலராயும், ஆடம்பர மற்றவராயும் ஜீவன்களிடத்தில் அன்பு உடையவராயும், எல்லோரையும் சமத்துவமாய் நேசிப்பவராயும், நல்லது கெட்டது தெரியாமல் அலைந்துக் கொண்டிருக்கிற மானிடர்களுக்கு உகந்த கல்வியையும் அதின் பயனாக அறிவையும் அதின் பிரயோஜனமாக ஞானத்தையும் சத்தியத்தையும்போதிப்பவரா யிருப்பவரே நமது குரு எக்குலத்தவரா யிருந்தாலும் அவரே தெய்வம்.

அதைவிட்டு இன்ன பாவத்துக்கு இன்ன பரிகார மிருக்கிறது. இன்ன குற்றத்திற்கு இன்ன தானமிருக்கிறது, இன்னது செய்தவனுக்கு இன்ன பதவியென்று எழுதிவைத்துக்கொண்டு,சும்மாகிடக்கிறவனையுங்கூட பரிகாரமிருக்கிற தென்கிற தைரியத்தினால் படிற்றொழுக்கத்திலீடுபடும்படி செய்து, அதற்கு பரிகாரார்த்தம் ஆயிரக்கணக்காய் கொள்ளையடித்து குடியைக் கெடுக்கிற குரு, குருவேயல்ல.

அவர்கள் வந்து உங்கள் அப்பன், பாட்டன் கொடுத்துவந்தபடி தலைவரி கேட்டால் அந்தக் காலம் வேறு, இந்தக் காலம் வேறு, அவர்கள் கட்டை வண்டியில் போனார்கள். நாங்கள் ஆகாயக் கப்பலில் போகிறோம். அவர்கள் சக்கி முக்கி தட்டினார்கள், நாங்கள் மின்சார வில்லையை அழுத்துகிறோம். அவர்களுக்கு பக்கத்தூர் சமாச்சாரம் தெரியாது, நாங்கள் உட்கார்ந்த இடத்தில் ஒரு நிமிஷத்தில் அமரிக்காக் காரரோடு பேசுகிறோம், அவிடத்திய சமாச்சாரம் தெரிகிறோம் உங்களுடைய சமாசாரமும் அறிவோம். என்று சொல்லி அனுப்பிவிட வேண்டியதுதான்.

க. வா. வெங்கிடாசலம் பிள்ளை.

உபாத்திம சங்க மேடையில் பார்ப்பன ஆதிக்கம்.

ஈரோடு தாலூகா ஊஞ்சலூரிலுள்ள போர்டு ஆரம்பபாடசாலை கட்டிடத்தில் சென்ற 28—1—28-ந் தேதி காலை 8மணி முதல 12–மணிவரை ஊஞ்சலூர் உபாத்திம சங்கத்தின் வருஷோற்சவ வைபவம் மகா-ா-ஸ்ரீ ஈரோடு டிப்டி இன்ஸ்பெக்டரான ஒருபார்ப்பனரல்லாதார் அவர்களின் அவைத்தலைமையின் கீழ் நடந்தேறியது.

அவ்வமயம் சில பெரியார்களின் கல்வி சம்பந்தமான சொற்பொழிவு இனிது நடைபெற்றதும் சில பார்ப்பனர் சமயம்பார்த்துக் கொண்டேயிருந்து மேடையினின்று தங்களது விஷத்தைக் கக்கி, கூடியிருந்த பார்ப்பனரல்லாத பெரியார்களின் மீதுங்கூட தமது ஆதிக்கத்தைச் செலுத்தினதாகத் தெரிந்தது. அதாவது நூற்றுக்கணக்கான வருஷங்களாய் பார்ப்பன ஆதிக்கத்தில் பதிமயங்கியிருக்கும் நமது தேசத்தவர்களை இன்னமும் அடிமைப்படுத்துமாறு ஷையார் இந்து மார்க்கம், ஆச்சாரம், ஜாதி என்னும் பேரால் வானம் அளாவுமட்டும் கூச்சலிட்டு, “ஐரோப்பிய பாதிரிமார்கள் நமது தேசத்துக்கு வந்ததின் காரணமாய், இந்து மார்க்கம் போயிற்றே! ஆச்சாரம் போயிற்றே! ஜாதி ஒழிந்ததே” என்று நீலிக்கண்ணீர் சொரிந்தார். அந்தோ இதுவன்றோ பார்ப்பன தந்திரம்! ஆம், இதுவே பார்ப்பன ஆதிக்கம்! இத்தகைய பிரசாரங்களுக்கும் பொறுமையுடன் செவிசாய்க்கும் திராவிட சகோதரர்களே! உங்களது அன்பையும், மனப்பான்மையையும் என்னென்று சொல்ல! இவ்வித அன்பும் பொறுமையும் விவேகமற்றதன்றோ? நீங்கள் பார்ப்பனர்களின் மீது எவ்வளவேனும் அன்பு பாராட்டுங்கள். ஆனால் பார்ப்பன ஆதிக்கம் தலை விரித்தாடும் பொழுது நீங்கள் உங்களது சுயமரியாதையைக் காத்துக்கொள்வதுதான் வீரத்தன்மையாகும்.

இந்து மார்க்கம், ஜாதி ஆசாரம் வருணாசிரம தர்மம், என்னும் பேரால் எவனொருவன் பிரசாரம் செய்து அவைகளை நிலை நிறுத்தப் பிரயத்தனப்படுகின்றானோ அவனே நமது சத்துரு, தேசத்துரோகி, என்ற சுயமரியாதைச் சிங்கமாகிய திரு. நாயக்கர் பெருமானின் பேரொலியைக் கேட்டு பார்ப்பனர்களின் திருட்டுத் தனத்தையும் மயக்குந் தன்மையையும் கண்டறியுங்கள். பார்ப்பன ஆதிக்கம் ஒழிந்தால் தான் வெள்ளைக்கார ஆதிக்கம் ஒழிய வழியுண்டாகும்.

ஊஞ்சலூர் உபாத்திம சங்க மேடையில் “இந்து மார்க்கம் போயிற்றே, ஜாதி ஒழிந்ததே” என்று நீலிக்கண்ணீர் சொரியும் பார்ப்பனர் தாம் வசிக்கும் ஊரில், தாம் குடியிருக்கும் வீட்டிற்கு முன்பாகப் போடப்பட்டிருக்கும் பொது ரஸ்தாவில் ஆதிதிராவிடர் முதலிய தாழ்த்தப்பட்டோர் நடந்து போக சுதந்திரமளிக்க தயாராயிருக்கிறாரா? சர்க்கார் திரவிய சகாயம் பெற்று மிகுதியான பார்ப்பனரல்லாதார்களடங்கிய நிர்வாகக் கமிட்டியின் பேரால் நடை பெற்று வரும் கொடுமுடியிலுள்ள ஹைஸ் கூலில் ஆதிதிராவிடர், குறவர் முதலிய தாழ்த்தப்பட்டோர் எவரேனும் கல்வி கற்க சுதந்திரம் அளிப்பதற்கு ஷை பார்ப்பனர் கனவிலும் நினைத்திருப்பாரா? தீண்டாமை விலக்கு, சுயமரியாதை, சமத்துவம், என்ற தத்துவங்கள் இம்மாதிரியான பாடசாலையில் போதிக்கவோ, அனுஷ்டிக்கவோ, ஷை பார்ப்பனர், வழியுண்டாக எந்த விதத்திலாவது பாடுபட்டிருக்கிறாரா? அல்லது ஊஞ்சலூர் உபாத்திம சங்கமேடையில் “ஐரோப்பிய பாதிரிகள் வர, மதம் போச்சு, ஜாதி போச்சுது, ஆசாரம் ஒழிந்தது” என்று எக்காள சத்த மிட்டு, இருதயத்தை பிளக்கும்படியான பிரசாரம் செய்யும் பார்ப்பனர்கள் தங்களது வீட்டிலோ பள்ளிக்கூடத்திலோ, தம் வீட்டிற்கு முன்னால் போடப்பட்டிருக்கும் பொது ரஸ்தாவிலோ, தம் ஊரிலோ, பக்கத்து ஊர்களிலோ, மக்களின் சுயமரியாதைக்கென்றும், சமத்துவத்திற்கென்றும், தீண்டாமையை நீக்குவதற்கென்றும், சிறிதேனும் பிரயாசை எடுத்து தம் சுண்டுவிரலையாவது அசைத்திருப்பாரா? செய்கையிலல்லாமல் வெறும் வாயின் வார்த்தையினாலாவது இதற்கென்று பிரயாசை எடுத்திருப்பாரா? இதுவும் செய்யாது வாயை சும்மா மூடிக்கொண்டிருந்தாலும் போதும். அப்படியில்லாமல், சுயமரியாதைக் கென்றும், மக்களின் சமத்துவத்திற் கென்றும் தம உடல பொருள் ஆவியுடன் அரும்பிரயாசை எடுத்து பாடுபட்டு வரும் மேனாட்டுப் பாதிரிமாரையோ, மகா ஊக்கத்துடன் உழைத்து வரும் ஸ்தாபனங்களையோ, குறைகூறுவதும் கேவலமாக எண்ணிப் பிரசாரம் செய்வதும் தேசத்துரோகமன்றோ? இப்போது மக்களுக்குள் ஏற்பட்டிருக்கும் சுயமரியாதை உணர்ச்சிக்கும், தீண்டப்படாதார் அநேகர் முன்னேற்றம் அடைந்ததற்கும் மூல காரணம் ஐரோப்பிய பாதிரிகளின் ஸ்தாபனங்களென்பதை யாரேனும் மறுப்பரோ? ஐரோப்பிய பாதிரிகளின் மூலம் நமது தேசத்துக்கு எண்ணிறந்த நன்மைகள் வந்திருக்க அவைகளை முற்றிலும் மறந்து, நன்றிகேடு நினைத்து விஷமப்பிரசாரம் செய்யும் பார்ப்பனர்களோ, பார்ப்பன ஆதிக்கத்தைச் சேர்ந்தவர்களோ தேசத் துரோகிகளென்றும் தெய்வ சாபத்துக்கிடானவர்களென்றும் உணர்ந்து கொள்ளட்டும்.

பார்ப்பன ஆதிக்கம் ஒழிக! சுயமரியாதை வாழ்க!

‘சுயமரியாதைவீரர்’

ஆலய அர்ச்சகர்.

கோவை ஸ்ரீமான் ஸி. எம். ராமச்சந்திரன் செட்டியார் அவர்கள் ஆலயங்களின் நிலை, ஆலய ஒழுக்கம், ஆலய பூஜை, ஆலய மேற்பார்வை, ஆலயப் பிரவேசம் என்பவைகளைப்பற்றி தொடர்ச்சியாக 'குடி அரசு' பத்திரிகை மூலம் ஐந்தாறு வியாசங்கள் வெளியிட்டிருந்ததை நேயர்கள் வாசித்திருப்பார்கள். அவ்வியாசங்களில் கண்ட விஷயங்களை (சீர்திருத்தும் நோக்கங்கொண்டு கொண்டுவரப்பட்ட தர்ம பரிபாலன சட்டத்தை எதிர்த்த] பார்ப்பனர்களுங்கூட ஆக்ஷேபிக்கவில்லை. அவர்கள் ஆக்ஷேபிக்காததையே பெரிய கைம்மாறாக நினைத்து ஸ்ரீ செட்டியார் அப் பார்ப்பன வகுப்பாராகிய அர்ச்சகர்களின் யோக்யதையைப் பூரணமாக வெளியிடாது ஜாடையாக "அவர்கள் நாணயக் குறைவுக்குக் காரணம் அவர்கள் குடும்ப வாழ்க்கைக்குப் போதிய சம்பளம் இல்லாமையே" என்று நோகாமல் அடித்து விட்டுவிட்டார் போலும். ஆலயத்தைப் பொறுத்த எல்லா விஷயத்தையும் பூரணமாக விளம்பரப்படுத்திவிட்டு அர்ச்சகரை மட்டும் சரியாக விளம்பரப் படுத்தாவிட்டால் அவ்வர்ச்சகர்கள் கோபித்துக் கொள்ளமாட்டார்களா? ஆதலால் எனக்குத் தெரிந்தவரையில் அவ்வர்ச்சகர்களை விளம்பரப்படுத்த 'குடி அரசு' இடங்கொடுக்குமென்று நம்புகிறேன்.

முதலாவது "இவ்வர்ச்சகர்களின் நாணயக் குறைவுக்கு காரணம் போதிய சம்பளமின்மையே" என்ற பாயிண்டை (விஷயத்தை) எடுத்துக் கொண்டு அது எவ்வளவு தூரம் உண்மை, உண்மையல்ல என்பதை ஆராய்வோம்.

பல கோவில்களுக்கு ஏராளமான மானியங்கள் இருக்கின்றன. அவைகளுக்கு அக்கோவில் அர்ச்சகர்களும் அவர்கள் உறவினராகிய சில பார்ப்பனருமே தர்ம கர்த்தாக்களாகவும் இருக்கின்றனர். ஏராளமான சம்பளமும் மானியத்திலிருந்து கணக்கற்ற வரும்படியும் அடைந்தும் கோவிலுக்கு வரும் பக்தரிடமிருந்து தக்ஷிணை பறிக்காமலிருப்பதில்லை. பக்தர்கள் பூஜைக்குக் கொடுக்கும் சாமான்களில் தங்கள் தங்கள் தாசிக்குக் கொடுக்க கொஞ்சமாவது மறைக்காமலிருப்பதில்லை. அநேக அர்ச்சகர்கள் பிதுரார்ஜிதமாகவே ஏராளமான பூஸ்திதியும் பொருளும் படைத்திருந்தும், வார்சு, பாத்தியம், மிராசு, என்று அர்ச்சக வேலையையும் ஒப்புக்கொண்டு அதனால் வரும் சொற்ப சம்பளத்தையும் விடாமல் மேற்கொண்டும் பக்தர்களிடம் தாகு வாங்குகிறார்கள். இன்னும் சில அர்ச்சகர்கள், பல கோவில்களை பிடித்துக்கொண்டு தங்களுக்குக்கீழ் பல அர்ச்சகர்களை வைத்துக்கொண்டு அவ்வக் கோவில்களில் வரும் ஊதியத்தின் ஒவ்வொரு பாகத்தை மட்டும் அவர்களுக்குச் சம்பளமாகக் கொடுத்துவிட்டு பெரும் பகுதியைத் தாங்கள் எடுத்துக் கொள்கின்றனர். இன்னும் சிலர் சம்பளம், ஊதியம், மானியம் எவ்வளவு கிடைத்தும் திருப்தியடையாது ஊரில் புரோகிதமும் செய்கிறார்கள். உள்ளூர் புரோகிதமுமன்றி, காத தூரமானாலும், காற்படி அரிசியானாலும், சுற்று வட்டத்திலுள்ள கிராமங்களுக்கும் போகிறார்கள். ஆகவே இவர்களுடைய நாணயக் குறைவுக்கு காரணம் ஸ்ரீமான் செட்டியார் சொன்னது போன்றதல்ல. அது அவர்கள் ஜாதிக்குணம். ஆதலாலன்றோ 'காக்கையைப் படைத்து கல்மனப் பார்ப்பனரை என்செயப் படைத்தாய்" என்று ஒரு பெரியாரும் "...பிள்ளைக்குப் பூணூலா மென்பான், பிச்சுப்பணங்கொடெனத் தின்பான்..." என்று தேசீயகவி பாரதியவர்களும் பாடினார்கள்.

எவ்வளவு சம்பளம் பெற்றாலும் இப்பார்ப்பனர் திருப்தியடையமாட்டார்கள் என்பதற்கு இன்னுமெத்தனையோ உதாரணங்கள் காட்டலாம். ஆனால் 'குடி அரசில்' அதிக இடமில்லாமையால் இன்னும் இரண்டொன்றை மட்டும் குறித்துவிட்டு மேற் செல்வாம்.

சர்க்கார் உத்தியோகத்தில் இருக்கும் பார்ப்பனர்களும், அதில் தாராளமான சம்பளமும் ஏராளமான வருவாயும் அடையும் பார்ப்பனர்களும், கச்சேரியை விட்டு வீட்டுக்குப் போகும்போது வழியில் ஏதாவதொரு தாசி வீட்டில் மேள சப்தம் கேட்டாலும் மாவிலைத் தோரணம் கண்டாலும் அவ்வீட்டினுள் நுழைந்து என்னவென்று பார்க்காமலும் தக்ஷிணை வாங்காமலும் போகார்கள். இதைப்பார்த்திராதவர்கள் தமிழ் நாட்டில் இருக்கமாட்டார்களென்றே நம்புகிறோம்.

குருக்கள் என்று சொல்லப்படும் இன்னும் சில பார்ப்பனர்கள், சர்க்கார் கச்சேரிகளில் வருஷத்தில் பதினொரு மாதம் உத்தியோகம் செய்து விட்டு, ஒரு மாதம் லீவ் எடுத்துக்கொண்டு, அதுவும் சம்பளத்துடன் லீவ் எடுத்துக்கொண்டு, ஒரு போர்வையை எடுத்து போர்த்திக்கொண்டு "சாமியார்" "குல குரு" "ஜாதிக் குரு" என்று புரப்பட்டு குடும்பச் செலவுக்கு ஒரு வருஷத்திற்கு வேண்டிய அணி மணி துணிகளை பருந்தடிப்பது போல் ஒரு மாதத்தில் அடித்துக் கொண்டு வந்து விடுகிறார்கள், இவைகளெல்லாம் வயிற்றுப் பசிக்கு வாங்கவா அல்லது வயிரத் தோடும் பங்களாவும் வாங்கவா? ஆகவே அர்ச்சகரும் அவர் தம் வகுப்பாரும் செய்யும் நாணயக் குறைவான காரியங்களுக்கு ஸ்ரீமான் செட்டியார் செட்டியார் சொல்லும் காரணம் சரியல்ல என்று சொன்னால்தான் அர்ச்சகர்கள் விஷயமாயும் ஆலய விஷயமாயும் பாரபக்ஷமின்றி நாம் நடந்தவராவோம்.

இதுகாறும் அவர்கள் உளத்தைப்பற்றியே கூறினோம். அவர் தம் உடலைப்பற்றிக் கொஞ்சமாவது கூறாவிட்டாலும் கோபங் கொள்வார்கள். ஆதலால் அதையும் கொஞ்சம் விவரித்து விஷயத்தை முடிப்பாம்.

பெரிய தொழிற் சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் சாமான்களுக்கு "டிரேட் மார்க்" அதாவது "வியாபாரக்குறி" என்ற ஒரு அடையாளம் முத்திரித்து வியாபாரத்துக்கு அனுப்புவதுண்டு. அதே போன்று கடவுள், அர்ச்சகர் என்று அறியும் பொருட்டு சில "டிரேட் மார்க" அடையாளமிட்டு இவ்வர்ச்சகக் கூட்டத்தாரை அனுப்பினாரோ என்னவோ என்று நினைக்கும்படி இக்கூட்டத்தாருக்கு சில அடையாளங்கள் உண்டு. அவையாவன:- குட்டையான பருத்தசரீரம், தொந்தியும் தொப்பையும் அவர் நடையை வாத்து நடைபோன்ற அழகு செய்யும். பாதத்தில் சேற்றுப் புண் அல்லது ஆனைக்கால் வாதம்: முழங்காலிலிருந்து இடுப்புவரை துணி மூடிக்கொண்டிருப்பதால் தொடைகளிலுள்ள சொரியும் இடுப்பைச் சுற்றியுள்ள மேகத்தடிப்புகளும் பூரணமாகத் தெரியாது. எண்ணைச் சிக்காலும் வேர்வையாலும் மூடப்பட்டதும் நெருப்பில் போட்டால் வேகக் கஷ்டப்படுவதுமான 'சோமன்' 'பஞ்சகச்சம்' 'மடி' என்னும் அவர்களது ஆடையும் அவர்கள் மீது வீசும் கற்றாளை வாடையும் அவர்களைத் தொட நமக்கு யோக்கியதை இல்லை என்பதை ருசுப்படுத்துகிறதால் அவர்கள் விஷயத்தில் மட்டில் தீண்டாமை இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டால் ஒரு சமயம் நாயக்கரும் ஒப்புக்கொள்வார். இவைகள் தவிர இடுப்புக்குமேல் தோளிலிருந்து தொங்கும் பூணூல், கருத்த பூணூல் மற்றொரு டிரேட் மார்க். அப் பூணூல் ஒவ்வொரு அர்ச்சகருக்கும் பலகாரக்கடைப் பார்ப்பனருக்கும் அவசியம் வேண்டியது தான். எதற்காக என்றால், அவர்கள் அடிக்கடி பலகாரமும் பிரசாதமும் வழங்குவதற்கு காகிதமும் வாழை இலையும் அறுக்கவேண்டியிருக்கிறது. பூணூலிருந்தால் நின்ற நிலையில் நினைத்த இடத்தில் பூணூலைக் குறுக்கே விட்டு காகிதத்தையும் இலையையும் கத்திகொண்டறுப்பது போல் அறுக்கலாம். தவிர அந்நூல் அவர் பிராமணர் என்பதைக் காட்டவும் பிரயோஜனப்படுகிறது. மற்ற ஜாதியாரும் பூணூல் அணிந்திருக்கிறார்களே என்றாலும் முன் சொன்ன மற்ற 'டிரேட் மார்க்' அடையாளங்கள் மற்ற ஜாதியாருக்குக்கிடையாது. தவிரவும் மற்ற பூணூல்கள் சற்று வெண்மையாகவும் எண்ணைச்சிக்கில்லாமலும் இருக்கும். கழுத்தில் உருத்திராக்ஷ மாலை அல்லது துளசிமணி மாலை மற்ற விசேஷ அடையாளங்களாகும். வாயில் நாக்குக்கு இடமில்லாமல் நிரம்பி உதட்டையும் தள்ளிக் கொண்டு எட்டிப்பார்க்கும் பாசம் பிடித்த பற்களும் வெற்றிலை பாக்கு புகையிலை குழம்பிய அதரங்களும் அவர்களுடன் நெருங்கிப் பேசவும் நமக்கு உரிமையில்லை என்பதை நிலைநாட்ட வில்லையா? முன் சொன்னது போல், வைக்கம் வீரர் இவர்களைப் பார்த்திருந்தால், தீண்டாமையும் நெருங்காமையும் பார்க்காமையும் கூட இருந்தே தீரவேண்டும் என்று பிரசாரம் செய்யத்தொடங்கி விடுவார். ஆதலால் வைக்கம் வீரர் இத்தகைய அர்ச்சகர்களையும் பலகாரக்கடைப் பார்ப்பனர்களையும் நீங்கலாக மற்றவர்களைப் பொறுத்து தீண்டாமை விலக்குப் பிரசாரம் முதலிய பிரசாரங்களையும் விடாமல் செய்து வர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அர்ச்சகர் பிரசாதம் வழங்கும் கையின் விரல்களைப் பார்த்தால் அவர்கள் தெய்வப் பிறவியென்றே கொள்ளவேண்டும். ஐந்து விரல்களும் நீளத்தில் ஏற்றத்தாழ்வில்லாமல் சமமாய், நுனிகளில் நகமில்லாமல் மொண்ணைப் பாம்புகளைப் போல் இருக்கும். கொ

ழுந்து விட்டெரிகிற கற்பூரத்தை நிதான மாகக் கையிலெடுத்து மூடி அணைத்து விடுவார்கள். ஆவி கிளம்பும் சூடாயிருந்தாலும் பிரசாதம் எடுத்து விழுங்குவார்கள்; அல்லது வழங்குவார்கள்.

அவைகள் அவ்வர்ச்சகர்களைச் சுடாததற்குக் காரணம் அவர்களது தெய்வ மகிமையோ அல்லது சுரணையற்ற மேக வாத குஷ்ட மகிமையோ அறியோம். இத்தகைய இவர்கள் கையிலிருந்து தீர்த்தமோ பிரசாதமோ வாங்கி உட்கொண்டால் கைமேற் பலன் கிடைப்பதற்கு என்ன ஆக்ஷேபம். பக்தர்களே முந்துங்கள்! முந்துங்கள்!!

அங்குள்ள தீர்த்தம் சாதிக்கும் தன்மையோ! எட்டு நாள்களுக்கு முன் பிடித்து வைத்த தண்ணீர்! அதில் வெளவால் புழுக்கை! அழுகின துளசித்தழை! இவைகளின் வாடை உதட்டையும் விட்டு விலக ஒரு வாரமாவது வேண்டும். சுவாமிக்கு அவர்கள் அர்ச்சனை செய்யும் மந்திரங்களின் பெருமையோ! அவ்வர்ச்சகர்களின் வாயிலிருந்து தெறிக்கும் எச்சில் பன்னீர் தெளிப்பது போல் தெளித்து சுவாமியின் தலையையும் முகத்தையும் மாத்திரம் நனைப்பதுடன் துணி கட்டப்பட்டிருந்தால் அதையும் நனைக்க ஒரு கை பார்த்து விடுகின்றது. மற்றும் சில விஷயங்கள்:- அதாவது அந்த சாமி இருக்கும் கர்ப்பக்கிருகத்திற்குள் அவ்வர்ச்சகர்கள் அவசரம் நேர்ந்தபோது மூக்குச் சிந்துவதும் மூத்திரம் பெய்து விடுவதுமான காரியங்களைப்பற்றி சொல்வது நமக்கு கஷ்டமாயிருக்கின்றதே தவிர அவ்வர்ச்சகர்களுக்கு ஒரு சிறிதும் கஷ்டமில்லை.

ஏனெனில் கோவிலுக்குள் கக்கூஸ் கிடையாது. மூத்திரம் அவசரமாய் வந்துவிட்டால் போவதற்கு நேரமும் இல்லை. இவைகள் தவிர கர்ப்பக் கிருகத்திற்குள் போதுமான இருட்டும் சவுகரியமான மறைவும் இருக்கின்றது. தவிர சுவாமியைப் பற்றிய பயம் அவர்களுக்கு ஏதாவது இருக்குமோ என்று நினைக்கவும் வேண்டியதில்லை. அதற்கு எத்தனையோ உதாரணங்கள் உண்டு. ஆதலால் அர்ச்சகர் கர்ப்பக் கிருகத்திற்குள் மலவாதைக்குப் போகாமல் இருந்தால் அதுவே நாட்டுக்கோட்டை செட்டியார்மார்கள் கோவில் கட்டின புண்ணியம் அவ்வர்ச்சகர்களுக்கு உண்டு.

ஆதலால் இவ்விஷயங்களையும் சத்தியமாயும் தைரியமாயும் ஸ்ரீமான் செட்டியார் வெளியிட்டிருப்பாரானால் அது ஒரு சமயம் உண்மைச் சீர்திருத்தத்திற்கு வழிகாட்டியாயிருக்கும். "குமாரசாமி"

இந்தவாரத்தில் பார்ப்பனியமொழித்த வீரர்கள்.

ஸ்ரீமான்கள்

1. பி. வீராசாமி பிள்ளை, பெரியகுப்பம், திருவள்ளூர்.
2. தி. முத்துஸாமி பண்டிதர், மருத்துவசங்க காரியதரிசி, திருநெல்வேலி.
3. சா. கோவிந்த ஆசாரியார், சா. சினிவாச ஆசாரியார், சாக்கோட்டை.

சுயமரியாதை.

வெண்பா.

திக்கொருவ ரின்றித் தியங்குந் தமிழுலகம்
மிக்க நலமெய்தி மேன்மையுற—வைக்கம் வாழ்ச்
சிங்கம் திருவீரர் சேகரித்த சாம்புநதத்
தங்கம் சுயமரியாதை. (1)

இப்பிறப்பி லல்ல எடுக்கும் பிறவியிலும்
விப்பிரர்கள் நேசமதை வேண்டாதீர்—எப்பொழுதும்
மாய்கை யொழித்து மகிழ்ச்சிதர நம்மவர்க்குத்
தாய்தான் சுயமரியாதை. (2)

ஆதரவாய் நித்தம் அழைத்திரண்டு வேளையிலும்
பாதம் பணிந்துபயப் பட்டதெலாம்—போதும்
மருமங் குணத்து மறையோரை யோட்டுந்
தருமம் சுயமரியாதை. (3)

வெள்ளையர்க்கும் பல் வகையில் வேலை செய்து நம்பெருமை
கொள்ளையிட்ட தன்றி இன்னுங் கோரிநிற்கும்—கள்ளமனத்
திராவிடர் தம்பால் இடருறுவோர்க் குப்பாணு
தாருஞ் சுயமரியாதை. (4)

சொந்த மிகுத்த சுயமரியாதைக் கொடியை
நந்தம் உலகில் நிலை நாட்டு வித்து—சந்ததமும்
மக்களுக்கென் றேயுழைக்கும் மானபரா னானதிரு
வைக்கம்வீ ரர்க்கேயென் வாழ்த்து. (5)

A. M. நடராஜன்.

இவைகளில் எது வேண்டும்?

ஜீவ வசிய பரம ரகசியம் ரூ 3—0, மணவாழ்க்கையின் மர்மங்கள் 2—4, இல்வாழ்க்கையின் இரகசியங்கள் 2—0. சதிபதிகளின் மர்மம் 1—0. ஸ்திரீ புருஷ ரகசியம் 1—0. கொக்கோகம் 1—0. மதனரதி ரகசியம் 1—0. ரதிமதனசிங்கார ரகசியம் 1—0. மோகனவல்லி அல்லது தாசியின் மோசம் 0—3. இன்னும் எல்லாப் புத்தகங்களும் எம்மிடம் கிடைக்கும்:

சீ. டி. ராஜன்
புஸ்தக வியாபாரி,
58, முருகப்ப முதலித் தெரு, வேப்பேரி, மதறாஸ்.

திருச்சி தலைவர்களுக்கு வேண்டுகோள்.

இவ்வூரில் பல காபிக்ளப்புகளிலும் சாப்பாட்டு கிளப்புகளிலும் "பிராமணர்களுக்கு மாத்திரம்" என்று எழுதிய பலகைகள் தொங்கவிடப் பட்டிருக்கின்றன, பார்ப்பனரல்லாதார் சாப்பிடக்கூடிய உணவு விடுதிகளிலும் பார்ப்பனர்களுக்கு இடம் வேறாகவும் பார்ப்பனரல்லாதார்களுக்கு இடம் வேறாகவும் இருப்பது வருந்தத் தக்கது. இத்தகைய இடங்களில் பார்ப்பனரல்லாதாரின் சுயமரியாதை குறைவுபடுகின்றது.

தஞ்சையிலும் சென்னையிலும் சுயமரியாதையுள்ள பார்ப்பனரல்லாதார்களுக்காக "தியாகராயர் கிளப்" என்ற பெயருடன் ஒருகிளப்நடைபெற்று வருவது குறிப்பிடத் தக்கது. இவ்வூரில்சுபர்கல் லூரியில்பார்ப்பனரல்லாதமாணவர்கள்தங்குவதற்குரிய "கால்ட்வெல்" மாணவர் விடுதியின் சோற்றில்லம் பார்ப்பனரல்லாத சமயல் காரர்களைக்கொண்டுநடை பெற்று வருவதும் குறிப்பிடத் தக்கது. இத்தகைய சுய மரியாதை உணர்ச்சி வளர மூன்று கல்லூரியிலுள்ள மாணவர்களுக்கும் சமீபமாகிய தெப்பக்குளத்திற்கு அருகாமையில் பார்ப்பனரல்லாதார் காபி கிளப்பொன்று ஏற்படுத்தும் படியாகவும் அதனை சிறப்புற நடத்தும்படியாகவும் தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தாரையும் சுயமரியாதைச் சங்கத்தாரையும் பார்ப்பனரல்லாத இளைஞர் சங்கத்தையும் கேட்டுக்கொள்ளுகிறேன். என்றுஓர் மாணவன் எழுதுகிறார்.

"திராவிடன்"

மின்சார ரசம்.

சகல வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது

உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்கலாம்.

பத்தியமில்லை! மின்சார ரசம்.

அநுபானமில்லை! மின்சார ரசம்.

இதற்கு இயற்கையாகவே ஒருவித மின்சார சக்தியுண்டு. ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம். மனிதன் தலைமுதல் கால் வரையில் வரும் எல்லா ரோகங்களுக்கும் தேவாமிருதம் போன்றதென்பது ஜகத் பிரசித்தம். பலரின் அநுபவம். கைகண்ட மருந்து.

REGISTERED TRADE MARK
MINSARA RASAM

எச்சரிக்கை:- ரிஜிஸ்டரான டிரேட்மார்க்

தனிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். எவ்வித ஆபத்துக்கும் மின்சார ரசம் உதவும். டாக்டர்களை தேட வேண்டியதில்லை. உங்கள் காலத்தையும் சிரமத்தையும், பணத்தையும் மிச்சப்படுத்தும். ஆயிரக்கணக்கான நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்றது.

உண்மை யறிய ஒரே முறை பரீக்ஷியுங்கள்! கேட்லாக் இனாம்.
உங்களை ஆச்சரியமுறச் செய்யும்! இன்றைக்கே எழுதுங்கள்.

ஒரு புட்டியின் விலை ரூ. 2. தபாற் செலவு வேறு.

விலாசம்:- **மின்சார ரசம் கம்பெனி Ltd., சேலம்.**

மதுரையில் இதன் முக்கிய வியாபாரிகள் } மெசர்ஸ். T. N. சொக்கலிங்கம் பிள்ளை & சன்ஸ். இங்கிலீஷ் மருந்து ஷாப், வடக்குசித்திரை வீதி, மதுரை.

அறிக்கை.

ஜவுளி ஜரிகை வியாபாரிகளுக்கு

எங்களிடம் பிரான்சி 8 லடி ரங்குள்ள ஜரிகை மார்க்குகளும் பாம்பே குவால்டி 8 லடி ரங்கு சரிகை மார்க்குகளும் சூரத்பட்டு கயிர்கட்டின அதிக ரங்குள்ள கம்பி ரங்குகள் மார்க்குகள் தயாரிலிருக்கிறது. இத்துடன் உள்ளூரில் தயாராகும்படியான ஜவுளிதினுசுகளில் வெள்ளை 100 கெம்பர் முதல் 200 கெம்பர் வரை நூல்களில் 5, 6 முழம் சதுரம் ஜரிகை ருமால்களும் ஷை கெம்பர்களில் 2-½ முழம் அகலம் 6 முழம் பலவிதமான நவீன கொடி பேட் ரகங்களில் ஜரிகை துப்டாக்களும் தனிப்பட்டும், பட்டும் நூலும் கலந்த பலவிதமான இங்கிலீஸ் பேன்ஸி சிகப்பு ரோஸ் கலர்களில் 2-உ அகலம் 18 முழம் நீளம் பல விதமான பேட்கரையும் ஜரிகை முந்தாணியுள்ள சேலை ரகங்களும் ஷை கண்ட ரகங்களில் 6 முழம் ரவிக்கை தினுசுகளும் பேட்டா தினுசுகளும தயாரிலிருப்பதால் தேவையுள்ளவர்கள் எழுதினால் விலை ஜாப்தா அனுப்பப்படும்.

சி. லிங்கி செட்டி, S. வெங்கிட்டராம செட்டி,
ஜவுளி & ஜரிகை வியாபாரம், கோயமுத்தூர்.

சிருங்காரமான போட்டோ படங்கள்.

பாரிஸ் மாதர்கள், ஐரோப்பிய மாதர்கள் முதலோரின் அழகையும், அவர்களின் விநோத நடை உடை பாவனைகளையும் விளக்கும் பொட்டோ கார்டுகள் படுக்கையறையைச்சிறப்பிக்க ஒவ்வொரு வீட்டிலும் முக்கியமானவை. படங்களைப் பார்க்கப்பார்க்கப் பேரின்பம். உயர்ந்த கலர் கிளேஸ் படங்கள். பல ரகங்கள் கொண்ட டஜன் கார்டுகள் விலை ரூ. 1-15-0.

ப்ரேஞ்சு வாசனைக் கார்டுகள்.

வாசனைப் புட்டி வேண்டுமென்ற அவசியமில்லை. எப்பொழுதும் உயர்ந்த வாசனையோடு கூடிய ஷை கார்டுகள் டஜன் ரூ. 1 தான்.

தி: கிருஷ்ணா ஏஜன்சி,
26, வெள்ளாளத் தெரு, புரசபாக்கம், மதராஸ்.

டிடக்டாஸ்
அல்லது
துப்பு இரகசியம் அறியும் கருவி.



இதன் உபயோகம் யாதெனில் இருப்பிடத்திலிருந்தே உம்முடைய காதலியையும் அவள் செய்யும் காரியங்களையும் அவள் அறிந்து கொள்ளாமலேயே இதன்மூலமாய்ப் பார்க்கலாம். உம்முடைய பின்னும் உமக்குத் தெரியாமல் நடக்கிறதை ஏககாலத்தில் இரண்டையும் இதன் மூலமாகக் கண்டு கொள்ளலாம். உமக்குத் தெரியாமல் உம்மைப்பின்தொடர்ந்து வருபவனை நீர் திரும்பிப்பார்க்காமலே இதன் மூலமாய்க் கவனித்துக்கொள்ளலாம். இன்னும் பலவித இரகசியங்களை இதன் மூலமாய் ஒருவரும் தெரிந்துகொள்ளாமல் கண்டு பிடிக்கலாம.

இத்துடன் பல கலர்களால்தயாரித்த படுக்கை அறையின் 4 அழகிய போட்டோ படங்களுடன் ஷை கருவி விலை ரூபா 2 தான்.

மலாய் நாடுகளுக்கு முன்பணம் வந்தாலன்றிக் கண்டிப்பாய் வி. பி. யில அனுப்பமுடியாது.

பாரிஸ் எம்போரியம் ஜி. டி, மதராஸ்

செந்தமிழ்ச் செல்வி.

(6 வது ஆண்டு)

ஓர் உயர்ந்த செந்தமிழ் மாதப் பத்திரிகை.
10—2—28 முதல் வெளிவருகின்றது.

இதற்குப்

(1) பல்லாவரம் சுவாமி வேதாசலம், (2) திரு கா. சுப்பிரமணிய பிள்ளை எம். எ., எம். எல். (3) திரு பா. வே மாணிக்க நாய்க்கர், பி. இ. (4) திரு எஸ், அனவரத விநாயகம் பிள்ளை, எம். எ., எல். டி. (5) திரு க. ப. சந்தோஷம், பி. எ., எல். டி., முதலிய பேரறிஞர்கள் கட்டுரை எழுதிவருகின்றார்கள்.

80 பக்கமடங்கிய மாதிரிப்பிரதியை $2\frac{1}{2}$ அணா தபாற்றலை யனுப்பிப் பெறுக

விரிவான புத்தக விளம்பரம் இனாம்

விபவ சைவ பஞ்சாங்கம்.

தபால்கூலியுட்பட
ரப் அணா 2 கிலேஸ் அணா $2\frac{1}{2}$

"செந்தமிழ்ச் செல்வி" நிலையம்,
6, பவழக்காரத் தெரு, சென்னை.

பெண்களுக்கு அழகு.

உயர்ந்த மல்லில் பச்சை, புளு, வயலெட், சருப்பு, கெம்பு, ஸநப் கலர்கள், கெட்டிச்சாயம்: பளபளப்பான வசீகரத் தோற்ற முள்ளது.

18 மு. x 48 இஞ்சு கலர் புடவை ரூ. 4—4—0
ஷை சுன்னடி ,, ரூ. 4-12—0
18 மு. x 44 இஞ்சு க்லர் புடவை ரூ. 3—8—0
ஷை சுன்னடி ,, ரூ. 3-12—0

புதிய ஜவுளி கேடலாக் இனாம்!

The Madura Oriental Trading Co.,
Laxmi Cloth Store, MADURA.

இனாம்! **1928.** இனாம்!!

தங்கள் விலாசத்தைத் தெரியப்படுத்தினால் நாமகள் 1928ஹு காலண்டரும் ஆரோக்கிய சமாசாரமும் தபால்செலவின்றித் தங்களுக்கு அனுப்புகிறோம்.

சித்த ஔஷதசாலை கம்பேனி,
போஸ்டு முல்லச்சேரி, மலபார்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆபத்திற்குதவாத பிள்ளை, பசிக்குதவாத அன்னம், தரித்திரத்தைத் தெரிந்துகொள்ளாத மனைவி, துன்பத்திற்குப் பக்கமிருக்காத நண்பன், இவர்கள் பிரயோஜனப்படமாட்டார்கள் என்பதுபோல நிராதாரவாயிருக்கும் நமக்கு இந்த சமயம் உதவாத கடவுளால் என்ன பிரயோஜனம்? விதி நம்மைப் பரிகாசம் பண்ணுகிறது. தேசபக்தி விளக்கு கொளுத்துண்டது. ஆனால் அதில் அகங்காரக்கையும் மோசடியும் பிறர் நலம் காணாமல் தன்னலமுமே காண்கிறதே. நாம் புகழ்ந்து பாடின தெய்வம் வந்து முன்னே நின்று ஒரு வார்த்தைகூட சொல்லப்படாதா? பெரிய இங்கிலீஷ்காரனை விதிவசத்தால் கடலுக்கப்பாலிருக்கிறன். இங்கு வரு முன்னே அவனை 'ராஜ்ஜிய தந்திரம்' என்னும் கத்தரியால் கத்தரித்து விடுகிறார்கள். தானும் வளர்ந்து பிறரும் வளரச் செய்வதாகிய அம்சத்தை துண்டித்து அவருடைய ஆண்மையில் முக்கால் பங்கை வெட்டி விடுகிறார்கள் என்று நாம் கூவும் சப்தம் கடவுள் திருச்செவிக்கு எறவில்லையா? இந்தச்சிலைகண்ட மனிதர் தமது விலை மிகுந்த கற்பனை சக்தியினுல் நேரே பார்க்க மாட்டார்கள். ஏனெனும் சந்தேகம் எம் நாட்டில் தோன்றி நாமே சண்டை போடுவது அவருக்கு கெட்டவில்லையா? பெண்டாட்டி பிணக்கு, பிள்ளை மாந்தம், திருட்டு பயல்கள் திருட்டுப்பலிப் பிரார்த்தனை இத்தனைக்கும் காது இருந்தே இருக்கிறது. உண்டிகைப் பணம் குறைந்தாலும் வருஷா வருஷம் காவடிக்கணக்கு குறைந்தாலும் கட்டளையை நிறுத்தி விட்டாலும் குருக்களுக்கு தக்ஷிணை குருவிற்கு பாதபூஜை குட்டிச் சாமிகள் உருவு கருமாந்தரம் கல்யாணம் இத்தனைக்கும் கொடுக்க வேண்டியதை கொடுக்கா விட்டாலும் அந்தக் கடவுள் பண்ணும் கூத்து கொஞ்ச நஞ்சமா? பெண்சாதி புரோகிதன் பூசாரி குறிக்காரன் சோதிடம் பல்லி இத்தனை பேர் சிபாரிசினாலும் நம் குடும்பங்களை பண்ணை கீர்த்தி பண்ணி பழிச்சொல்லுக்கு ஆளாக்கிவரும் கடவுள் இந்த ஏழு பேர் முன்னும் நம்மை காட்டிக் கொடுக்க தீர்ப்புபண்ணி விட்டதே! நம்கூட்டத்தாரனான பக்தர்கள் அந்த நன்றி கெட்ட தெய்வத்திற்கு பயந்துபோனாலும் மேல்உலகத்திலிருக்கும் நம் பெரியவர்களாவது இதை கவனிக்கப்படாதா? காசி கயா அர்துவார் ராமேஸ்வரம் முதலிய இடங்களில் வருஷா வருஷம் அமாவாசை பிரதினம் நாம் கூப்பிடும் பொழுது எல்லாம் வந்து நாம் கொடுப்பதை புரோகிதர் மூலியமாக வாங்கிச் செல்லுகிறார்களே! காசி கயாவில் பிரத்யட்சமாக ஆகாசத்தில் வந்து நிற்பதாக புரோகிதர்களும் அவர்கள் புரோக்கர்களும் சொல்லுகிறார்களே! அங்கு போய் வரும் பணக்காரனும் புரோகிதனும் சொல்லுவது பொய்யாக வாயிருக்கும். கடவுள் உலகமும் அவர்கள் உலகமும் பக்கமாகத்தானே இருக்கும். இவர்களாவது சொல்லப்படாதா? இவர்கள் காதை அங்கிருக்கும் ஆங்கிலேயப் பிதுர்க்கள் பிடித்துக்கொண்டதோ என்ன? அப்படித்தானிருக்கும். ஏனெனில் வெள்ளைக்கார பிதிர்க்கள் நம்முடைய பிதிர்க்கள்லோகத்தையும் பிடித்திருக்கப் படாது? "அந்தப் பிதுர்க்களும் அங்கே தானே இருக்க வேண்டும். முப்பத்தி முக்கோடி தேவர்களையும் வசப்படுத்தும் மந்திரம் ஏழு பேரை வசப்படுத்தாதா? அதற்கு லாயக்கில்லாத மந்திரம் பிழைப்பிற்கேற்படுத்திக் கொண்டதா? இந்த சமயம் நம் கடவுள் நமக்குப்பிரத்தியட்சத்தில் வந்து ஏதாவது உதவி செய்தால் அநேகம் பேர் அவர் பேரைச் சொல்லி பிழைக்கலாம் 'குடிஅரசு' வாயை மூடிக்கொள்ளும்.

கடவுள் இல்லையென்று குடிஅரசு சொல்லவில்லை. உங்களுக்கு கடவுளைப்பற்றி எவ்வளவு தெரியுமோ அவ்வளவு அதற்கும் தெரியும். அந்த கடவுளுக்கும் ஆன்மாவிற்குமுள்ள சம்பந்தத்தை பற்றியும் அதன் தத்துவங்களைப் பற்றியும் அதை சம்மதித்த பெரியவர்களையும் குடிஅரசு குற்றம் சொல்லாது. மனிதனை மனிதன் அடிமை கொள்ளவும் சுயமரியாதையைப் போக்கவும் ஏழைகள் பணத்தை அபகரிக்கவும் பணக்காரர்கள் பணம் சமூக நன்மைக்கு உதவாமல் பாழாகவும் எந்த கடவுள் காரணமாக இருக்கிறாரோ அந்தக் கடவுளும், அந்தக்கடவுள் பேரால் சனசமூகங்களை அடிமையாக்க அனுகூலமான இதிகாச புராணங்களும் அந்த இந்து மதமுமே ஒழிய வேண்டும் என்று 'குடி அரசு' சொல்லுகிறது. திருஷ்டாந்தமாக ஒன்றை இப்பொழுது எடுத்துக் காட்டுகிறோம். ஒரு இந்து கிறிஸ்தவனாகவோ மகமதியனாகவோ மாறினால் எல்லாப் பாவத்திலிருந்தும் விடுபட்டு புண்ணியதேகமாகி எல்லா சுதந்திரமும் அடைகிறான். இந்துவாயிருக்கையில் மிருகத்திற்கு கீழாக மதிக்கப்பட்டு கண்ணில் காண முடியாத பாவியாக விருந்தான். இப்பேர்ப்பட்ட அக்கிரமத்திற்கு ஏதுவாய் இருக்கும் இந்து கடவுள்தான் ஒழிய வேண்டு மென்கிறது குடி அரசு.

பொய்யான புரோகித பார்ப்பனர்களை

ஒரு நாளும் நம்பாதே.

உலகப் பிரசித்தி பெற்ற பாம்பரை வைத்தியர்! ஆயிரக்கணக்காகன குஷ்ட ரோகிகளை குணமாக்கினவர்!! வைத்திய கான்பரன்ஸ்களில் வைத்திய ஆசிரியர் பட்டமும் தங்க மெடலும் பெற்றவர்!! சமஸ்தான வைத்தியத் நிபுணரான பழநி சி. மலையப்பசாமி அவர்களின் மருந்துகள் உலகமெங்கும் புகழ் பெற்றவை. உண்மையான குணமுள்ளவை. உள்ளூர் வாசிகளால் மதிக்கப் பெற்றவை. ஒரு முறை வாங்கி பரீக்ஷித்தால் உண்மை விளங்கும். நூதன சிங்கபலத்தை தருவது எது? பழனி, சி. எம். சாமி,

மகா வீரிய தங்கபஸ்பம்

பச்சிலை மூலிகையினாலேயே நீற்றப்பட்டது. பெரிய மஹானின் முறை. அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும், உண்டாக்கும். இல்வாழ்வில் அதிஅற்புத சுகம் தரும். வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, நீரழிவு, பவுத்திரம், மூலம் க்ஷயம், இருமல் கபக்கட்டு, குன்மம் முதலிய சகல வியாதிகளும் தீரும். 48 நாள் பஸ்பம் விலை ரூ. 20, 24 நாளைக்குரூ. 10.

நற்சாட்சி:—தங்கள் தங்கபஸ்பம் சாப்பிட்டதில் எனக்கிருந்த வாய்வு, வெட்டை பலக்குறைவு முதலியன நீங்கி அபார தாது புஷ்டி உண்டாயிருக்கிறது. இதன் பெருமையை எழுத முடியாது. இன்னும் மேற்படி தங்கபஸ்பம் ஒரு மண்டலத்திற்கு அனுப்பவும். வி. எம். வரதராஜப் பெருமாள்சாமி, கவிராயர், பொள்ளாச்சி.

குரு அப்ரேக் செந்தூரம்-நீரழிவுக்கு

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேகவெளுப்பை மாற்றி ரத்தவிர்த்தியையும், தேக புஷ்டியையும், தரும். சகல மேகமும் க்ஷய ரோகமும் நீங்கும். தளுக்கற்றது 24 நாள் புட்டி 1-க்கு ரூ, 15. 48 நாள் புட்டி 1-க்கு ரூ. 30.

ஏராளமான நற்சாட்சிகளை கேட்லாக்கில் பார்க்கலாம் வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்

பினங் முதலிய அன்னிய தேசவாசிகள் ரூபாய் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

சித்த ஆயுர்வேத வைத்திய ஆசிரியர்

C. மலையப்பசாமி நித்தியானந்த வைத்தியசாலை பழனி, S. I.

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:—முருகன் ஏஜன்ஸி 43 அரமனைக்காரத் தெரு ஜி. டி. சென்னை

கோயமுத்தூர் முனிசிபாலிடி
நோட்டீஸ்,

1928-29 ம் வருஷத்திற்கு முனிசிபல் சங்கத்தாருக்குச் சேர்ந்த சுங்கம் மார்க்கெட் முதலியவைகளின் குத்தகைகளை 1928 ம் வருஷம் பிப்ரவரி மாதம் 9 ம் தேதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு விக்டோரியா டவுன் ஹாலில் கூடும் முனிசிபல் சங்கத்தாரின் ஸ்பெஷல் மீட்டிங்கில் ஏலம் விடப்படும்.

C. S. இரத்தினசபாபதி,
சேர்மேன். முனிசிபல் கௌன்சில்.

அநேக காக்ஷிகளில் பொன், வெள்ளி
மெடல் பெற்ற விதைகள் செடிகள்.

3 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 3 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி. கேட்லாக் இனம். ஆங்கிலீஷ் காய்கறி, புஷ்ப விதைகள்:— 20 சாம்பிள் பாக்கெட் ரூ. 2. 10 பாக்கெட் 1—4. நாட்டுக் காய்கறி 20 பாக்கெட் ரூ. 2—8. ச. கொ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட்னர்சரி தோட்டம், சேலம்.

1928-ம் வருஷத்திய

இந்துசமயக் காலண்டர்.

இது தளதளவென ஒளிரும் உயர்ந்த ஆர்ட் பேப்பரில் 20X30 அங்குல அளவில் சிறந்த இரண்டு வர்ணங்களினுல் அச்சிடப் பெற்றிருக்கிறது. காலையில் எழுந்தவுடன் தேவதா தரிசனம் செய்வதற்கு இசைந்த வகையில் அமைக்கப்பட்டது.

இதில் அடங்கியுள்ள படங்கள்:—

1. திருமகள்
2. கலைமகள்
3. ஆண்டாள் சூடிப்பார்த்தல்
4. உமை சிவலிங்கத்தைத் தழுவியிருத்தல்
5. பார்வதி பரமேஸ்வரன்
6. மகாவிஷ்ணு
7. ஷண்முகம்
8. பாலகிருஷ்ணன்
9. இராதாகிருஷ்ணன்
10. சிவபெருமான் கங்கையைத் தரித்தல்
11. முருகன் சிவபெருமானுக்கு உபதேசித்தல்
12. காளிங்கமர்த்தனம்
13. துருவன் அருள்பெறுதல்
14. ஸ்ரீராமர் பட்டாபிஷேகம்

ஒவ்வொரு படத்தின் காட்சியும் கண்ணைக் கவரும்!

கருத்தைக் கொள்ளை கொள்ளும்!!

மனதை உருக்கும்!!! பெரு மகிழ்வை ஊட்டும்!!!

விலை அணு 8. தபாற்கூலி வேறு.

இம்பிரியல் டிரேடிங் கம்பெனி,

585, பைகிராப்ட் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

காலத்திற்கேற்ற நூல்! காதலர்கள் தேடும் நூல்!!

இல்வாழ்க்கையின் இரகசியங்கள்

அழகான பயிண்டு. சுமார் 400-பக்கங்கள் கொண்ட பெரிய புத்தகம் நேர்த்தியான அச்சு.

நல்ல கிலேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. அநேக அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது.

இந்நூலில் அடங்கியுள்ள விஷயங்கள்.

1. துறவிகளின் கதி யென்ன?
2. இல்வாழ்க்கை ஏன் சிறந்தது?
3. இல்லறத்திலிருந்து மோக்ஷமடைவதெப்படி?
4. இல்வாழ்க்கையின் இரகசியங்களை யறியாதார் படும்பாடு.
5. பெண்ணின் பெருமை, பெண்கல்வி.
6. நாணம் எப்படி உண்டாயிற்று?
7. உடைக்கும் நாணத்திற்கும் சம்பந்தம்.
8. நாம் ஏன் உடைதரிக்கவேண்டும்?
9. நிர்வாணமாயிருப்பதின் தத்துவமென்ன?
10. இக்காலத்தில் எங்கெங்கே நிர்வாணமாயிருக்கின்றனர்?
11. ஒவ்வொரு தேசத்திலும் கலியாணங்கள் எப்படி நடைபெறுகின்றன? உண்மையான கலியாணம் எது?
12. காதல் என்றால் என்ன? காதலுக்கும் காமத்திற்குமுள்ள வித்தியாசம்.
13. சாந்தி முகூர்த்தத்தில் எப்படி வெற்றியடைவது?
14. மனைவிகளைக் கணவன்மார் எப்படி வசியப்படுத்துவது?
15. கணவன்மாரை மனைவிகள் எப்படி வசியப்படுத்துவது?
16. தமக்குச்சரியான ஸ்திரீ அல்லது புருஷன் என்று எப்படிக் கண்டுகொள்வது?
17. ஸ்திரீகளுக்கு எப்பெப்பொழுது காமம் உண்டாகிறது?
18. அவர்களிடத்தில் அமிர்தநிலை எங்கெங்கே இருக்கிறது? அதை எப்படி நிலை பெயர்க்கிறது?
19. பலஜாதி ஸ்திரீகளின் லட்சணங்கள்.
20. சங்கமம் செய்யவேண்டிய நாளும் நாழிகையும்.
21. ருதுவாவதின் மர்மம் அல்லது மாதவிடாய் என்பதன் தத்துவமென்ன?
22. பெண்களிடத்தில் பிணக்கு உண்டாவதற்கு காரணம். இதைப்போக்கடிக்கச் சுலபமான வழிகள்.
23. மனம் போல் மக்களைப் பெறும் அரிய உபாயங்கள்.
24. கருவிலிருப்பது ஆணு பெண்ணு என்று எப்படி அறிந்து கொள்வது?
25. கர்ப்ப காலத்தில் ஸ்திரீகள் நடந்து கொள்ளவேண்டிய முறைகள்.
26. கர்ப்பகாலத்தில் ஒவ்வொரு மாதத்திலும் உண்டாகக்கூடிய வியாதிகள்.
27. அவைகளை போக்கடிக்கும் உபாயங்கள்.
28. முதல் மாதத்திலிருந்து கடைசிமாதம் வரையில் சிசுவின் வளர்ச்சித் தத்துவம்.
29. ஸ்திரீகள் மலடாவதுண்டா? உண்டானால் அதற்குக் காரணம்? அதைப்போக்கடிக்கும் விவரம்.
30. புருஷர்கள் மலடாவதுண்டா? எங்கு பார்த்தாலும் ஏன் ஆண் மலடு விசேஷமாயிருக்கிறது? இதைப் போக்கிக்கொள்ளுவதெப்படி?
31. அதிகமாகக் குழந்தைகள் பிறப்பதினால் நாட்டுக்கு நன்மையா, தீமையா? தீமையாயின் அதைத்தடுக்க உபாயம் என்ன? ஸ்திரீ, புருஷர்கள் சேர்க்கையைத் தவிர்க்காமல் குழந்தைகள் பெறுவதை மட்டும் தடுக்க முடியுமா? அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், சைனா, துருக்கி முதலிய இடங்களில் குழந்தை பெறும் விஷயத்தில் ஜனங்கள் என்னென்ன அநியாயங்கள் செய்கின்றனர்? சிசு கொலை அநியாயம்.
32. ஒருவன் எத்தனை மாதரை மணம் புரிந்து கொள்ளலாம்? பல மாதரிடம் சேர்ந்திருப்பவன் கவனிக்கவேண்டிய விஷயங்கள் என்ன? அவன் தனது சரீரத்தை எப்படிக் காப்பாற்றிக்கொள்வது? அவனுடைய மனைவிகள் ஒருவருடனொருவர் பொறாமை கொள்ளாமலிருக்க வேண்டுமானால் அவன் எப்படி சாமார்த்தியமாய் நடந்துகொள்ளவேண்டும்.
33. தாசிகள் நாட்டிலே இருப்பதால் நன்மையா, தீமையா? தாசிகள் வீடுபோகும் நபர்களுக்கு நாம் சொல்லக்கூடிய சில வார்த்தைகள்.

நண்பர்களே! இதுகாறும் சொல்லிவந்த விஷயங்களல்லாமல் இன்னும் எத்தனையோ நூற்றுக்கணக்கான பொன்போன்ற இரகசிய விஷயங்களை இந்நூல் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

ஆகையால் நண்பர்களுக்கு நமது வேண்டுகோள் என்னவென்றால் இவ்விளம்பரத்தைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் "இல்வாழ்க்கையின் இரகசியங்கள்" என்னும் எமது புதிய நூலின் ஒரு பிரதியை வாங்குவாராக. குடும்பஸ்தர் ஒவ்வொருவர் வீட்டிலும் இதன் பிரதியொன்று இருந்தே தீரவேண்டும். உம்முடைய நண்பர்களிடத்தும் இந்நூலைப் பரப்பி நாட்டிற்கு நன்மைசெய்யுங்கள். இந்நூல் லாபங்கருதி அச்சிட்ட புத்தகமல்ல.

"இல்வாழ்க்கையின் இரகசியங்கள்" என்ற புத்தகம் ஒவ்வொரு ஊரிலுமுள்ள புத்தக வியாபாரியிடமும் கிடைக்கும் அல்லது எங்கள் விலாசத்துக்கு உடனே எழுதவும்.

விலை ரூபாய் 2—0—0.

வாஸன் புஸ்தகசாலை,

தபாற்பெட்டி நெ. 119

97. அன்னுபிள்ளை தெரு, ஜி. டி. மதருஸ்.

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.